மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: இருபது

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 09 திங்கட்கிழமை (26.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 334

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நீடிப்பதா ஆராய வருகிறது ஐரோப்பிய ஒன்றியம்

நிலைமையைச் சீர்செய்ய அரச தரப்பில் பிரயத்தனம்

கொழும்பு, ஒக்ரோபர் 26

ஜி.எஸ்.பி. வரி விலக்குச் சலுகையை இலங்கைக்கு தொடர்ந்து வழங்குவதா என்பது குறித்து இலங்கை அரசுடன் முக்கிய பேச்சுகளை மேற்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டப் பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த வாரத்தில் - நவம்பர் ஆரம்பத்தில் - இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இக்குழுவினரின் இலங்கை வருகைக்கு முன்னர் இங்கு மனித உரிமை விடயங்களில் முன்னேற்றத்தை வெளிப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாகவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம் -I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ் -I,II,III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

ரஷ்ய அமைச்சர் இன்று வருகிறார்

கொழும்பு, ஒக். 26

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கி லவ்ரோ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல அரசியல் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் முன்னர் 1972 ஆம் ஆண்டு இலங்கை தூதரகத்தில் பணியாற்றியவர் என்பதும் சிங்கள மொழியில் பேசக்கூடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (அ-சி)

யுத்தக் குற்ற விசாரணைக்கான கோரிக்கையை அரசு நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 26

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து - காஸா பாணியிலான - விசாரணைகள் இடம்பெற வேண்டுமென்ற ஐக்கிய நாடுகளின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இலங்கை இவ்வாறான - காஸா பாணி

(20ஆம் பக்கம் பார்க்க)

பஸில் ராஜபக்ஷ தலைமையில் புதுடில்லிக்கு உயர்மட்டக் குழு

கொழும்பு, ஒக். 26

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசியற் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ எம்.பி. தலைமையில் மூன்று பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று வெகு விரைவில் புதுடில்லி செல்கின்றது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த தி.மு.க, காங்கிரஸ் எம்.பிக்கள் குழு கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தங்களின்

(20ஆம் பக்கம் பார்க்க)

எரிபொருள் விநியோக நெருக்கடி இன்றுடன் தளரும் அறிகுறி

கொழும்பு, ஒக். 26

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் ஊழியர்களின் சட்டப்படி வேலை செய்வதற்கான தொழிற்சங்க நடவடிக்கை நேற்று இரவு முதல் இடை நிறுத்தப்படுகின்றது என நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இலங்கை பெற்றோலிய பொதுச் சேவைகள் சங்கத்தின் தலைவர் அசோக் ரன்வல இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

தமது உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இன்று ஜனாதிபதியுடன் இடம்பெறும் பேச்சுகளின்போது சாதகமான முடிவைத் தாங்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"எமது கோரிக்கைகளுக்குச் சாதகமான தீர்வு எட்டப்படும் என நம்புகிறோம். அது தவறும் பட்சத்தில் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து பாரிய அளவிலான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்" - என்றார் அவர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

மியன்மார் ஆட்சித் தலைவர் இலங்கை வருவார்

கொழும்பு,ஒக்.26

மியன்மாரின் (பர்மாவின்) இராணுவ ஆட்சித் தலைவர் ஜெனரல் தான் ஷிவி மூன்றுநாள் விஜயமாக எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருவார் என அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூன் மாதம் மியன்மாருக்கு விஜயம் செய்திருந்த இலங்கைஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்த நாட்டின் இராணுவ ஆட்சித் தலைவருக்கு விடுத்த அழைப்பை ஏற்றே மியன்மார் தலைவர் இலங்கை வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

அமெ. அரச நிகழ்வில் பங்குபற்ற பொன்சேகாவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை வாஷிங்டன் வாபஸ்!

கொழும்பு, ஒக். 26

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்த அமெரிக்காவின் அறிக்கையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தமையை அடுத்து, அமெரிக்காவில் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்கு ஏற்கனவே அவருக்கு விடுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ அழைப்பை அந்த நாட்டு அரசு ரத்துச் செய்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

அமெரிக்காவின் நிரந்தர குடியுரிமைக்கு உரித்தான பச்சை அட்டையைக் கொண்டவரான ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த வெள்ளிக்கிழமை வாஷிங்டன் பயணமானார். (20ஆம் பக்கம் பார்க்க)

இராமாவில், மிருசுவில், கொடிகாமம், கைதடி முகாம்களில் உள்ளோர் நாளை உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

கொடிகாமம், இராமாவில், மிருசுவில், கைதடி ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களில் 80 சத வீதமான மக்கள் நாளை விடுவிக்கப்படவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த இவர்கள் சொந்த இடங்களில் உடனடியாக மீளக் குடியமர்த்த முடியாத காரணத்தால், உறவினர்கள், நண்பர்களிடம் நாளை ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்காத பட்சத்தில் சம்பந்தப்பட்டோர் தொடர்ந்து முகாம்களிலேயே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர். (20ஆம் பக்கம் பார்க்க)

துணுக்காயைச் சேர்ந்த 1,000 அகதிகள் 2 ஆவது கட்டமாக மீளக்குடியேற்றப்படுவர்

யாழ். மாவட்டத்தினர் 10 நாள்களில் முற்றாக விடுவிப்பு

கொழும்பு, ஒக். 26

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்திற்கு இரண்டாம் தொகுதியாக ஆயிரம் மக்களை மீள்குடியேற்றத்திற்காக அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

ரூ. 2/- வெளிச்செல்லும் அழைப்புகள்

Dialog லான்ட் லைன் தொலைபேசியில் சுதந்திரமாக பேசுங்கள்

Dialog லான்ட் லைன் தொலைபேசியிலிருந்து எந்தவொரு வலையமைப்பிற்கும் அழைப்பதற்கான கட்டணம் இப்போது ரூ. 2/- மட்டுமே.

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

Fixed Line

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சீனாவுடன் பாதுகாப்பு உறவாடல் ஏதும் இல்லை இந்தியாவே இலங்கையின் நெருக்கமான நண்பன்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26

சீனாவுடன் இலங்கைக்கு சிறந்த - நெருக்கமான - உறவுகள் உள்ள போதிலும் அந்த நாட்டுடன் விசேட பாதுகாப்பு உறவாடல் எதனையும் இலங்கை செய்து கொள்ளப் போவதில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல் லாகம தெரிவித்துள்ளார். இந்தியாவை இலங்கை நெருக்கமான நண்பனாகக் காண்பதே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் கடற்படைத் தளமொன்றை அமைப்பதற்கான வேண்டுகோள் எதனையும் சீனா இலங்கையிடம் விடுக்கவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரின் 'ஸ்ட்ரெய்ட் ரைம்ஸ்' செய்தித்தாளுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மோதலால் இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டவர்களில் தற்போதுள்ள இரண்டரை லட்சம் பேரில் ஒரு லட்சம் பேரையே இவ்வருட இறுதிக்குள் மீளக் குடியேற்ற முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மிகவும் நெருக்கமான உறவுகள் காணப்படுகின்றன.

அவர்கள் எமது பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளித்துள்ளமையாலும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அரசியல் ரீதியாக ஆதரவை எமக்கு வழங்கியுள்ளமையாலும், இந்த உறவை விசேடமானது என்றும் குறிப்பிடலாம். இந்த விசேடமான உறவு மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் கடற்படைத் தளமொன்றை அமைப்பதற்கு அனுமதி தருமாறு சீனா எம்மிடம் கேட்கவில்லை. அத்தகைய அறிகுறிகளும் இல்லை.

சீனாவிற்கு அவ்வாறான எதிர்பார்ப்பு இருந்தால் அது எப்போதோ அதனைக் கேட்டிருக்கும்.

சீனாவுடன் இலங்கைக்குப் பாதுகாப்பு உறவு எதுவுமில்லை.

இந்தியாவை நாம் எமது நெருக்கமான நண்பனாகக் காண்பதே இதற்குக் காரணம்.

இந்தியாவுடனான உறவும் விசேடமானது. இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் இந்தியா மிகுந்த ஆதரவை அளித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்புப் பலம் குறித்து நாங்கள் ஓரளவு திருப்தியடைந்திருக்கிறோம்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை பாரிய தேசிய நல்லிணக்கம் மற்றும் காயங்களை ஆற்றுதலை நோக்கி நகர்ந்தவண்ணமுள்ளது.

நாங்கள் ஏற்கனவே அகதிகளை மீள் குடியமர்த்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம்.

யாழ்ப்பாணத் தமிழச் சமூகமும், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களும் இலங்கையை நோக்கித் தமது கவனத்தைச் செலுத்தவேண்டிய தருணம் இது.

யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் இலங்கை ஜனாதிபதி விடுத்த முதல் வேண்கோளே இதுவாகத்தான் அமைந்திருந்தது.

வெளிநாட்டிலுள்ள எமது நண்பர்கள் இதனைச் செவிமடுத்து இதற்குப் பதிலளிக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது பகுதிகளில் மீளக் குடியமர்த்துவதற்கு முன்னர் அந்தப் பகுதிகளில் உட்கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும். இதற்கான முயற்சிகளை சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் துரிதப்படுத்தியுள்ளோம்.

இதனைத் துரிதப்படுத்தலாம், அடுத்த வருட முற்பகுதியில் இதனை நிறைவேற்றலாம் என எதிர்பார்க்கிறோம்.

முகாம்களில் உள்ள இரண்டரை லட்சம் பேரில் சுமார் ஒரு லட்சம் பேரை இவ்வருட இறுதிக்குள் மீளக் குடியமர்த்த முடியும் எனத் தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

முதற்கட்டமாக இலக்குவைத்து நிறைவேற்றுவதற்கு இது நல்ல எண்ணிக்கை. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பயணச் சீட்டைக் கிழித்தெறிந்து இலங்கைப் பெண் பெரும் ரகளை

சென்னை விமான நிலையத்தில் சம்பவம்

சென்னை, ஒக். 26

போலி கடவுச்சீட்டில் வந்த இலங்கை இளம்பெண் ஒருவர் நாடு திரும்ப மறுத்து தமது விமானச் சீட்டைக் கிழித்து எறிந்த சம்பவம் ஒன்று சென்னை விமான நிலை யத்தில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி யுள்ளது.

இதுகுறித்துத் தெரியவருவன வருமாறு:-

இலங்கை அனுராதபுரத்தை சேர்ந்தவர் நிஷாராணி (வயது-29). இவர் குவைத்தில் வேலை செய்தபோது ஆந்திராவை சேர்ந்த ஒரு வாலிபரைக் காதலித்துள்ளார். காதலர் மீண்டும் ஆந்திரா சென்று விட்டார். அதனால், காதலர் பற்றிய தகவல் எதுவும் நிஷாராணிக்குத் தெரியவில்லை.

இந்நிலையில் முகவர் ஒருவர் மூலமாக போலியான கடவுச்சீட்டு ஒன்றைப் பெற்று அவர் ஆந்திர மாநிலம், ரேணி குண்டாவுக்குச் சென்றார். அங்கு விமான நிலையத்தில் நிஷாராணியின் கடவுச் சீட்டு போலியானது என்பதை குடியுரிமை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

ரேனிகுண்டா விமான நிலையப் பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இந்த வழக்கில், கடந்த 2007 ஆண்டு முதல் நிஷாராணிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கபட்டது. இதன்போது நன்னடத்தை காரணமாக அவர் 2ஆவது ஆண்டில் விடுவிக்கப்பட்டார். இதையடுத்து, நிஷாராணியை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்க ராஜம் பேட்டை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கைத் தூதரகம் மூலம் அவசர காலச் சான்றிதழ் பெறப்பட்டு நிஷாராணியை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவரை சென்னை விமான நிலையத்துக்குப் பொலிஸார் அழைத்து வந்தனர். கடந்த வெள்ளியன்று நள்ளிரவு 12.30 மணிக்கு இவர் கொழும்பு புறப்படும் விமானத்தில் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

எல்லா சோதனைகளும் முடிந்த நிலையில் திடீரென, நான் இலங்கைக்குச் செல்ல மாட்டேன். எனக்கு அங்கு உறவினர் யாரும் இல்லை. எனது காதலனை தேடி கண்டு பிடித்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். என்னை இந்தியா விலேயே விட்டு விடுங்கள் - என்று கூறி, விமானச் சீட்டை கிழித்து எறிந்தார் நிஷா ராணி.

இந்நிலையில் அவர் தற்போது சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஆந்திரப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இசைக் கச்சேரிக்குச் சென்று காயமுற்ற ஆறு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற இசைக் கச்சேரியின் போது இடம்பெற்ற சம்பவங்களில் சிக்கி காயமடைந்த 6 பேர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு இரு தரப்புகளுக்கு இடையில் நடந்த மோதலில் சிக்கி இளைஞன் ஒருவரும், நிகழ்ச்சியில் கலந்துகொண்டு திரும்பிய வேளை விபத்துக்களில் சிக்கி ஐவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சன நெருக்கடியில் சிக்கி மயங்கி வீழ்ந்த இளம்பெண் ஒருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-1)

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைக் கண்டு களித்த பொது மக்களை படத்தில் காணலாம்.

ராஜ் ராஜரட்ணத்துக்கு எதிராக 30 இலங்கையர் வழக்குத்தாக்கல்

கொழும்பு, ஒக். 26

விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உதவிகளை வழங்கியமை, பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டமை சம்பந்தமாக குற்றஞ் சுமத்தப்பட்டு அமெரிக்காவின் எவ்.பீ.ஐ. காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள ராஜ் ராஜரட்ணத்திற்கு எதிராக இலங்கையைச் சேர்ந்த 30 பேர் நியூஜேர்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமிலா கிருஷாந்தி என்ற பெண் தலைமையிலான 30 இலங்கையர்களே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். தமது நிதி மோசடி செய்யப்பட்டமைக்காக தமக்கு இழப்பீட்டைப் பெற்றுத்தருமாறும் மோசடி தொடர்பில் ராஜரட்ணத்திற்கு தண்டனை வழங்குமாறும் இவர்கள் கோரியுள்ளனர்.

வழக்கின் பிரதிவாதிகளாக ராஜ்ராஜரட்ணத்தின் தந்தையான ஜே.என்.ராஜரட்ணம், தமிழர் புனர்வாழ்வுகழகத்தினர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். வழக்குத் தாக்கல் செய்துள்ள இலங்கையர்கள் சார்பில் அஜரான சட்டத்தரணி மிச்சேல் அல்ஸ்கர் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ராஜ்ராஜரட்ணம் உள்ளிட்டவர்கள் இதற்குப் பொறுப்பு கூற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மரண அறிவித்தல்

சுவாமிநாதன் விநாசித்தம்பி

(உசன் கஜகேணி விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா)

உசனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் விநாசித்தம்பி நேற்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் நிர்மலாதேவி, நித்தியானந்தன், கருணானந்தன், சிவானந்தி, சயிந்தாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் சுந்தரலிங்கம், சாரதாதேவி, லோஜனி, பரஞ்சோதி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகன், நிறோசன், சிந்துஜன், ஜஸ்மினா, பிரவீனா, நிவேதா, பிரசாலினி, நிரோசாங்கி, சபிதாளினி, கனிஸா, சாயித்தியன், மதுரிகன் ஆகியோரின் பேரனும் இராசநாதன், சிவபாதசுந்தரம், தங்கராசா, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரன், விமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.10.2009) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் உசன் ஈச்சங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி சயிந்தாதேவி
சிவபாதசுந்தரம் (மகன்)

உசன்,
மிருசுவில். (ஏ)

சாரணர் சங்கத்தின் பாசறை இராமநாதன் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடமாகாண சாரணர் சங்கத்தின் 29 ஆவது வருடாந்த சாரணர் பாசறை விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

வடமாகாண சாரணர் சங்கம்,காங்கேசன்துறைப் பிரதேச கிளைச் சாரணர் சங்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு மாகாண சாரணர் ஆணையாளரும் செயற்குழுத் தலைவருமான த.நா.மோகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பிலிருந்து வந்திருந்த பிரதம சாரண ஆணையாளர் ச.பட்டுவாங் கல்ல,தேசிய பயிற்சி ஆணையாளர் எம்.இ.எஸ்.ஜெயசிங்க,முன்னாள் தேசியப் பயிற்சி ஆணையாளர் எம்.ஜரால்ட் குரே மற்றும் சர்வதேச தொடர்புகளுக்கான உதவிப் பிரதம சாரணர் ஆணையாளர் எம்.கிராஸ்சாரி ஆகியோரும் கலந்துகொண்டனர். (1-7)

மரண அறிவித்தல்

தம்பிப்பிள்ளை லிங்கப்பிள்ளை

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் 28,சீனிவாசகம் வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை லிங்கப்பிள்ளை நேற்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - இராசமணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோன்மணி, அமரர் ஆறுமுகம், அமரர் சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுஜிதா, சுதர்சினி, சுமித்திரா, அருணன், அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன், நித்தியானந்தன், சசிகுமார் ஆகியோரின் மாமனும் கஜனி, மகிஷன், லக்ஷன், கார்த்தீபன், கார்த்திகா, யஷ்னுஜா, வந்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.10.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லி.அருணன்
(மகன்).

28, சீனிவாசகம் வீதி,
கொட்டடி. (சி-561849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கும் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர்

இலங்கையின் நீதித்துறை குறித்து முதலைக்கண்ணீர் வடித்திருக்கின்றார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் நந்தன சில்வா. சில விளக்கம், வியாக்கியானங்களையும் அவர் கொடுத்திருக்கின்றார். அவரது கருத்துக்களைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா என்று மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு - தெரியவில்லை. அப்படி இருக்கின்றது அவரது விளக்கம்.

இலங்கையின் நீதித்துறை மீதான நம்பகத்தன்மை சரிந்து செல்வதாக நீலிக்கண்ணீர் வடித்துள்ள அவர், ''நீதி நிலை நாட்டப் படுவது மாத்திரம் அல்லாமல் நிலைநாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்'' எனவும் தத்துவம் பேசியிருக்கின்றார். அவரது இந்த வாசகத்தையே அவருக்குத் திரும்ப நினைவூட்டித் தாம் பிரதம நீதியரசர் பதவியை வகித்த காலத்தில் அந்தத் தத்துவத்தை சரிவரக் கைக்கொண்டாரா என்று அவரிடம் கேள்வி எழுப்ப விரும்புகின்றனர் தமிழர்கள்.

நாட்டின் நிறைவேற்றுத் துறையிடம் அதிகாரம் அளவு வரையறையின்றிக் குவிந்து கிடக்கின்றது. அதனால் எதேச்சாதிகாரப் போக்குத் தலைதூக்கியுள்ளது. நீதித்துறையின் உயர் அதிகாரிகளை நியமிப்பது முதற்கொண்டு சுதந்தரமாக, சுயாதீனமாக இயங்கவேண்டிய பல பதவிகள் வரை சகலவற்றுக்கும் தனக்கு விரும்பியவர்களையே தன்னிச்சைப்படி நியமிக்கும் சர்வாதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் வீழ்ந்திருப்பதால் ஜனநாயக ஆட்சியின் வியாபகம் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது.

இந்த நிலைமையைப் போக்குவதற்காகவே அரசமைப்புக்கு 17 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஏகமனதாக இணைந்து கொண்டு வந்து நிறைவேற்றின. ஆனால் தனக்குள்ள விசேட அதிகாரத்தை இலாவகமாகப் பயன்படுத்தி, அந்த 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிப்பதன் மூலம் தமது எதேச்சாதிகார ஆளுகையைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டில் நீதியும், நியாயமும், நெறிமுறையான சட்ட ஆட்சியும், ஜனநாயகத்தின் உண்மையான வியாபகமும் மலர்ந்திருக்க வேண்டுமானால் அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் மேலும் தாமதப்படுத்தப்படாமல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக்கருத்துக் கிடையாது. இதனை வலியுறுத்தும் விதத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறும் கருத்தைக் கேள்விக்கு உட்படுத்தும் நியாயம் ஏதும் எம்மிடம் கிடையாது என்பதும் சரிதான்.

ஆனால், இலங்கையில் நீதித்துறை மீதான நம்பகத்தன்மை சரிந்து வருவதாக அவர் கவலைப்படுவதும், 'நீதி நிலை நாட்டப்படுவது மாத்திரமல்ல, நீதி நிலைநாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்.' - என அவர் தத்துவம் பேசுவதும்தான் சகித்துக் கொள்ளப்பட முடியாதவையாக இருக்கின்றன.

அதிர்ஷ்டவசமாக, அவர் அலங்கரித்த பிரதம நீதியரசர் பதவியில் இருப்பவரின் செயற்போக்கைப் பகிரங்கமாக விமர்சிப்பவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு இலங்கையில் இல்லை என்ற கவசம் அவருக்குக் கிட்டியமையால் அதை வைத்துக் கொண்டு அவர் ஆடவேண்டிய ஆட்டம் எல்லாம் ஆடி அரங்கேற்றிவிட்டுப் போய்விட்டார்.

இப்போது, அவர் முன்னர் வழங்கிய தீர்ப்புகள், உத்தரவுகள் குறித்து மீளாய்வு செய்யும் புதிய சட்டத்துறைப் போக்கு மலர்ந்திருக்கின்றது. நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் திறைசேரி ஆகியவற்றின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர விடயத்தில் அவர் கலைத்துக் கலைத்துக் கொடுத்த உத்தரவுகளும், பின்பு அவர் பதவியை விட்டு விலகியமையை அடுத்து, உயர்நீதிமன்றின் ஏழு நீதியரசர்கள் கொண்ட ஆயம் அவரது முன்னைய உத்தரவுகளை ஆராய்ந்து, அதில் சிலவற்றை 6 - 1 என்ற அடிப்படையில் ரத்துச் செய்தமையும் மறக்கற்பாலவையல்ல.

இப்போது அவரது வேறு முக்கிய இரண்டு தீர்ப்புகள் தொடர்பில் லஞ்ச, ஊழல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அந்த இரு வழக்குகளில் ஒன்றின் வழக்குப் பதிவுகள் மாயமாக மறைந்துள்ளன என்றும் கூட உறுதிப்படுத்தப்படாத ஒரு தகவல் வெளியாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆழிப்பேரலை அனர்த்தப் புனரமைப்புத் தொடர்பான பொதுக்கட்டமைப்பை செயலிழக்க வைத்தமை, வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பை ரத்துச் செய்தமை போன்ற முக்கிய தீர்ப்புகளை வழங்கிய பிரதம நீதியரசர் என்ற முறையில் இவர் விடயத்தில் தமிழர்களுக்குப் பெரும் ஆதங்கம் உண்டு.

அதுவும் முன்னைய நான்கு ஜனாதிபதிகளினால் - சுமார் பத்தொன்பது ஆண்டுகளாக - நீடித்து நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தின் ஐக்கியத்தை ரத்துச் செய்து துண்டுபடுத்துகின்ற வழக்கை அவர் எவ்வாறு கையாண்டு தீர்ப்பு வழங்கினார், அதன் பின்னர் அந்த வழக்குத் தொடர்பில் அவர் எத்தகைய கருத்துக்களைப் பிரதிபலித்தார் என்பவற்றையெல்லாம் அவர் மறந்திருக்க மாட்டார் என்றே நம்புகின்றோம்.

வடக்கு - கிழக்குப் பிரிப்பு தொடர்பான வழக்கில் தமிழர் தரப்பு தனது வாதத்தை முன்வைப்பதற்கே வாய்ப்பளிக்காமல் எதேச்சாதிகாரமாக வழக்கை முன்னெடுத்த முன்னாள் பிரதம நீதியரசர் இப்போது 'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திமன்றி, நிலைநாட்டப் படுவது போல காட்டப்படவும் வேண்டும்' என வாய் பிளப்பதில் அர்த்தமில்லை. அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கில் குறைந்த பட்சம் தமிழர் தரப்பு தனது வாதத்தை முன்வைக்க - அதை நீதிமன்றம் செவிமடுக்க - ஒரு வாய்ப்பு அளித்திருந்தாலாவது அந்த வழக்கில் நீதி நிலை நாட்டப்பட்டதாகக் காட்டப்பட்டிருக்கும் என்பதே தமிழர்களின் பணிவான கருத்தாகும்.

இந்தத் தேசத்தில் சிங்களப் பண்பியல் கலாசாரத்தின் நீண்ட தொடர்ச்சியை அடிப்படையாக வைத்தே வடக்கு - கிழக்கு மாகாணப் பிரிப்புக்கான தீர்ப்பைத் தாம் வழங்கினார் என்ற சாரப்பட பின்னர் குறிப்பிட்டதன் மூலம், தமக்கு அப்போது மனதில் ஆழப் பதிந்திருந்த உள் நோக்கத்தை வெளிப்படுத்தி, அந்தப் பிரிப்புக்காக அரசியல் இலாப உரிமையும் தமக்கேயுரியது என்ற தொனியில் தென்னிலங்கையிடமிருந்து அதைக் கோரும் வகையில் அவர் நடந்துகொண்டமையும் மறக்கக்கூடியதல்ல.

நீதித்துறை குறித்து அவர் இப்போது தத்துவம் பிளப்பது 'யாரோ வேதம் ஓதுவது போல' - 'உருத்திராட்சப் பூனை போல' தோற்றுகின்றதே.....!

இலங்கையில் இராணுவப் புரட்சிக்குச் சதியா? முறியடித்து உதவ இந்தியப் படைகள் தயார்!

கொழும்பைப் பரபரப்புக்குள்ளாக்கிய வதந்தி

கடந்த வியாழக்கிழமை, ஒக்ரோபர் 15ஆம் திகதியன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய உயர் ஸ்தானிகர் அலோக் பிரசாத்துடன் ஒரு சந்திப்பை நடத்தி

நேற்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

னார். அன்றைய தினம் இரவு இந்த நாட்டில் ஜனநாயக முறையில் நிறுவப்பட்டுள்ள அரசாங்கத்தை சீர் குலைப்பதற்கான ஒரு முயற்சி இடம் பெறப்போவதாக அச்சம் ஒன்று பரவி இருந்தது. குறிப்பாக அரசாங்கத்துடன் குறைபட்டுக் கொண்டுள்ள படையணிகளிலுள்ள சிலரால் இராணுவக் கலகம் ஒன்று தூண்டி விடப்படவிருப்பதாக தகவல்கள் பரவி இருந்தன. இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி இந்திய உதவியை நாட வேண்டியிருந்ததாகக் கருதப்படுகின்றது. பதவிக் காலம் முடிந்து நாட்டுக்குத் திரும்பும் நிலையில் இருந்த அலோக் பிரசாத், புதுடில்லியிலுள்ள இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு இங்குள்ள நிலைமைகளை எடுத்துக் கூறியுள்ளார்.

பெரும்பாலான இலங்கையர்களுக்கு இந்த விவரம் எதுவும் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் அனைவருமே நித்திரைக்குப் போய் விட்டிருந்த நேரம் கொழும்பிலும், புதுடில்லியிலும் தீவிர நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்துள்ளன.

இந்திய பராத்துருப்புகள் உட்பட அவசர படைகள் ஒரு படைத் தளத்தில் தயாராக வைக்கப்பட்டிருந்ததாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. அதி அவசர செயற்பாடுகளுக்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை, இரு தலை நகரங்களுக்குமிடை யில் தொலைபேசித் தொடர்புகள் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்துள்ளன.

கொழும்பிலுள்ள சில முக்கிய தூதரகங்களின் பாதுகாப்பு அதிகாரிகள் இரவு நேரத்தில் நித்திரையிலிருந்து விழித்தெழச் செய்யப்பட்டனர். நாட்டு மக்களின் வாழ்வியலைக் குழப்பி விடுவதற்கான முயற்சிகள் ஏதும் நடக்கப்போகின்றதா என்ற வகையில் பலரும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் அதிர்ச்சியடைந்திருந்தார்களேயன்றி எவரும் சரியான தகவல் தெரிந்தவர்களாகக் காணப்படவில்லை.

கோத்தபாய பெரிதாக எடுக்கவில்லை

பாதுகாப்புச் செயலர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வுநிலை) கோத்தபாய ராஜபக்ஷவும் கூட இந்தச் செய்திகளை அதிகம் பாரதூரமாக எடுத்துக் கொண்டவராகக் காணப்படவில்லை. என்றாலும் சில ஓய்வு பெற்ற அதிகாரிகளும் இப்போது பதவியிலுள்ள சிலரும் கவனமாக இருக்கும் படி அவருக்கு ஆலோசனை கூறியிருந்தார்கள் என்று தெரிகின்றது.

இந்தவிதமான திட்டம் ஒன்று இருப்பது குறித்து ஜனாதிபதி தம்மிடம் கூறிய விடயங்களை அலோக்பிரசாத் தான் கோத்தபாயவிடம் கூறியிருந்தார். வெளி நாட்டிலிருந்து உதவிகோரும் அளவுக்கு நிலைமை முற்றிவிடவில்லையென்றே கோத்தபாய கருதியிருந்தார். இருந்தாலும் இந்தியாவிடம் உதவிகோரப்பட்டு அந்த நாடு வேகமாக செயற்பட்டு எல்லாவற்றுக்கும் ஆயத்தமாகியிருந்தது.

சில மணி நேரங்களின் பின்னர் பாதுகாப்பு நிறுவனங்களுக்கிடையில் அதிகரித்திருந்த தொலைத் தொடர்புகள் தளர்வு அடைந்தன. அச்சமடைவதற்கு ஒன்றுமில்லை என்றவாறு ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளலானார்கள்.

ஜனநாய்க விரோத நடவடிக்கை எதுவும் நடைபெறலாம் என்ற வதந்தியில் உண்மை இல்லை.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் மத்தியிலிருந்தே...

சதித்திட்டம் எதுவும் இல்லாத போதிலும் அப்படி ஒன்று இருப்பதாக செய்தி பரப்பப்பட்டிருந்தது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் சிலர் மத்தியில் இருந்தே இந்தக் கதை உருவாகியிருக்க வேண்டும் என்று மேற்குலக ராஜதந்திரிகள் சிலர் தமக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். எது வித புலனாய்வு உறுதிப்பாடும் இன்றி இந்த அதிகாரிகள் தம் போக்கில் கதைகளை உருவாக்கியிருக்கிறார்கள்.

முழுதும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில்

ஜனாதிபதி முழுதும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கிறார். அரச 'பாதுகாப்பு யந்திரத்தின் முழு அளவிலான ஆதரவை பெற்றவராயும் இருக்கிறார்.

இராணுவ தலைமையகத்தில் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கும் முழு விசுவாசமான அமைப்பு ஒன்று இருக்கின்றது. இவ்வாறு எல்லாம் இருந்தும் அச்சுறுத்தும் நிலைமை ஒன்று எவ்வாறு பரப்புரையானது என்பது பற்றி கடந்த வெள்ளியன்று பரவலாகப் பேசிக்

பொன்சேகா பற்றியும் அமெரிக்க அறிக்கையில் பிரஸ்தாபம்

கொள்ளப்பட்டது.

இலங்கையில் ஜனநாயக முறையில் ஸ்தாபிக்கப்பட்ட அரசுக்கு எதிராக ஜனநாயக விரோத சக்திகளால் ஏற்படுத் தப்படும் பயமுறுத்தலுக்கு எதிராக உதவி புரிவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது. எதுவானாலும் ஜனாதிபதியிடமிருந்து முறையான கோரிக்கையொன்று வரவேண்டும் என்று புதுடில்லி எதிர்பார்த்தது.

பக்கத்து நாடுகளில் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் இந்தியா உதவிக்குச் சென்ற பல சந்தர்ப்பங்கள் உதாரணமாக உண்டு.

மாலைதீவில் இவ்வாறு ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் 1988இல் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி 1600 இந்தியப்படைகளின் அணியொன்றை அங்கு அனுப்பினார்.

சரத் பொன் சேகா பற்றிய சர்ச்சை

இந்த நிலைமைகளை மேலும் குழப்பகரமாக ஆக்கும் வகையில் பாதுகாப்பு படை அதிகாரிகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பான சர்ச்சைகள் வெளிவந்துள்ளன. ஜெனரல் பொன் சேகாவை பகிரங்கமாக தாக்கிப் பேசும் அமைச்சர்களில் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத விவசாய அமைச்சர் ஹேமந்த குமார நாயக்காரவும் சேர்ந்து கொண்டுள்ளார். எல்பிட்டியவில் கூட்டமொன்றில் பேசுகையில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார். ''தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொன்றவர் வேறுயாருமில்லை; ஜனாதிபதி தான். இந்தச் சாதனைக்குப் பொறுப்பாளிகளாக போலி பொம்மைத் தலைவர்களைக் கொண்டு வரப் பார்க்கிறார்கள். ஐ.தேகாவுக்கும் அவர்களின் கூட்டணிக்கும் வேட்பாளர் ஒருவர் இல்லாதமையால் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு அந்த கௌரவத்தைக் கொடுக்கப் பார்க்கிறார்கள். இது ஜனநாயக நாடு. இங்கே இராணுவ ஆட்சிக்கு இடம் தர மாட்டோம். மக்கள் அதற்கு சம்மதிக்க மாட்டார்கள். இராணுவ அதிகாரி ஒருவர் அரசியலுக்கு வர முயல்வதானது கவலையடைவதாகும். இது அவருக்கும் சரியில்லை, நாட்டுக்கும் சரியில்லை.

இந்த அமைச்சரின் பேச்சுடன் கூடிய ஒளி நாடா உள்ளூர் ஒளிபரப்பு நிலையம் ஒன்றினால் கடந்த வெள்ளியிரவு ஒளிபரப்பப்பட்டது. ஏற்கனவே அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா, அபே குணவர்த்தன, சுசில் பிரேம ஜயந்த மற்றும் மேர்வின் சில்வா போன்ற அமைச்சர்களும் இவ்வாறான கடும் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இராணுவ அதிகாரி ஒருவரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டுள்ளார். அவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) காமினி ஜயசுந்தர ஆவார். சார்க் நாடுகளின் 'கடெற்ஸ்'களின் மாநாட்டில் பேசிய அவர், புலிப் போராளிகளை தோற்கடித்தமைக்கு எந்த ஒரு தனி மனிதனும் சொந்தம் கொண்டாட முடியாது. இதற்கான பெருமை ஜனாதிபதிக்குத் தான் உரியது என்றார்.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியினர் கடந்த புதன்கிழமை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள், ஜெனரல் பொன் சேகாவை அரசியலுக்குள் நுழையச் செய்வது ஒரு சர்வதேச சதி முயற்சியாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளை இத்துண்டு பிரசுரங்களில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. விமல் வீரவன்ச தற்போது பிரிட்டனுக்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார். அவரது கட்சிக்காரர்கள் பிரிட்டனைக் கண்டித்துத் துண்டுப் பிரசுரம் வெளியிடுகிறார்கள்.

அரசின் மீது ரணிலின் பாய்ச்சல்

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹோமாகமவில் கூட்டமொன்றில் பேசும்போது, பின்வருமாறு கூறியிருந்தார் -

போரில் யார் வெற்றியைக் கொண்டு வந்தார் என்பதற்கு தெளிவான பதில் ஒன்று மக்கள் முன் வைக்கப்பட வேண்டும். இதனை ராஜபக்ஷவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரா அல்லது முன்னாள் தள பதி ஜெனரல் சரத்பொன் சேகவா என்பது மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண் டும் என்றார் அவர். அவர் மேலும் பேசுகையில், சரத்பொன்சேகாவைக் குறை கூறும் அமைச்சர்களை ஜனாதிபதி வெளியேற்ற வேண்டும். பாதுகாப்புத்துறை பிரதம அதிகாரியையும் இராணுவத்தின் அணி வகுப்பையும் அரச ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்திருந்தன. தேசிய நிகழ்வொன்றில் ஜெனரல் பொன்சேகா என்ன சொன்னார் என்பதை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு- என்றார் ரணில்

தம்மை குறை கூறிய ஏழு அமைச்சர்களுக்கும் அவர் பதில் கூறத்தொடங்கினால் விதிகளை அவர் மீறி விட்டார் என்று கூறப்படும். இது மூன்று படைப் பிரிவுகளின் தலைவர்களுக்கும் பொருந்தும். பொன்சேகாவுக்கே இந்த நிலைமையென்றால் எங்கள் நிலை எப்படியிருக்கும் என்று சில இராணுவ அதிகாரிகள் கலங்குகிறார்கள்.

* இராணுவ ஒழுக்கக்கட்டுபாடுகளை மீறுகிறவர்களும், இராணுவத்தின் போர் வெற்றிக்கான கௌரவத்தையும் இராணுவத்திடமிருந்து எடுத்துக் கொண்ட வர்களும் 'துரோகிகள்' என்று அவர் குறிப்பிட்டார்.

அழைப்பைத் திருப்பப் பெற்றது அமெரிக்கா

அமெரிக்க பச்சை விசா அனுமதி வைத்திருக்கும் ஜெனரல் பொன்சேகா அவரது பாரியாருடன் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். பச்சை விசா அட்டை வைத்திருக்கும் அவர், அமெரிக்காவிலேயே நிரந்தரமாக வாழ்வதற்குத் தகுதியுடையவர். அவருடன் இராணுவ உதவியாளர்களும் மெய்க்காவலர்களும் சென்றுள்ளனர்.

பொன்சேகாவின் அமெரிக்க விஜயம் ஒரு பகுதி உத்தியோக பூர்வமாகவும் ஒரு பகுதி விடுமுறையாகவும் இருக்கும் என்று கருதப்படுகின்றது. உத்தியோகப் பூர்வமானதில் ஒன்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி ராஜாங்க அமைச்சர் றொபேர்ட் பிளேக்கை வாஷிங்ரனில் சந்திப்பது மற்றது அமெரிக்க பசுபிக் இராணுவ தலைமையகத்துக்குச் சென்று அங்கு தற்போதைய தளபதி அட்மிரல் திமோத்தி ஜே.கீட்டிங் பதவி விலகுவது தொடர்பான வைபவங்களில் கலந்துகொள்வது. ஆனால் இந்த வைபவத்துக்கான அழைப்பை அந்நாடு திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை அமெரிக்க ராஜாங்க அமைச்சு, காங்கிரஸ் சபைக்கு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த அழைப்பு திரும்பப் பெற்றதாக அறியப்படுகின்றது. இந்த அறிக்கையில் ஜெனரல் பொன் சேகாவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதால் அரசாங்க வைபவங்களில் அமெரிக்க அரசு அவரை அழைத்து கௌரவிப்பது உசிதமில்லையென்று கருதப்படுகின்றது:

68 பக்கங்களைக் கொண்ட ராஜாங்க அமைச்சின் அறிக்கையில் பின்வரும் அம்சமும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

''அம்பலாங்கொடையில் நடைபெற்ற வைபவமொன்றில் ஜூலை 18ஆம் திகதி இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா பேசுகையில்- போரின் வழமையான மரபு விதிகள் புறந் தள்ளப்பட்டு வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலிப் போராளிகளையும் கொல்ல வேண்டியிருந்தது எனக் கூறி யுள்ளார். ஊடகம் ஒன்றில் இது வெளியிடப்பட்டுள்ளது'' என்று தெரி விக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான கருத்து ஒன்றை அவர் வெளியிடவில்லையென்று இராணுவ அதிகாரிகள் மறுத்துள்ளார்கள். (ப)

நாளை

ஐப்பசி 10 27.10.2009 செவ்வாய்க்கிழமை
திதி: நவமி மு.இ. 09.10வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப.11.46 வரை
சுபநேரம்: 10.33 -12.03 வரை
ராகுகாலம்: 03 - 04.33 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு வைரஸ் நோயிலிருந்து பாதுகாக்க நீங்கள் செய்யவேண்டியவை என்ன.....?

சில முக்கிய தகவல்கள் - வழிமுறைகள் இவை: – தெரிந்து கொள்ளுங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு வைரஸ்நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் செயற்படவேண்டிய அவசரமானதும் அவசியமானதுமான தேவை எழுந்துள்ளது.

மக்கள் இந்த நோயால் பீடிக்கப்படுவதைத் தடுப்பதற்குத் தனிப்பட்ட ரீதியில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளையும், நோய்வந்தால் அதனைக் குணப்படுத்துவதற்குச் செய்யவேண்டிய கருமங்களையும் குறிப்பு வடிவத்திலும் இலகு முறையில் வடித்துத் தந்திருக்கிறார் குடாநாட்டின் மூத்த வைத்தியரும், சுகாதாரத்துறையில்ள நீண்டஅனுபவமும் நிறைந்த வைத்திய கலாநிதி **இ.தெய்வேந்திரன்** (M.B.B.S, M.Sc, Community Medicine)

★டெங்கு தொற்று என்பது என்ன?

இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய். இது இருவகையாக வெளிப்படும்.

அ. டெங்குக் காய்ச்சல் (D.F)

ஆ. இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சல் (D.H.F)

★ குணங்கள், குறிகள்

அ. சடுதியாக ஏற்படும் காய்ச்சல்

ஆ. கடுமையான தலையிடி, கண்ணின் பின்பகுதியில் நோவு, தசைகளிலும், எலும்புகளிலும், மூட்டுக்களிலும் கடும் நோவு

★இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சல்.

மேற்குறிப்பிட்ட குணம் குறிகளுடன் உறுப்புக்களில் இரத்தம் கசிதலும், அதிர்ச்சி நிலையும் ஏற்படும் நிலை.

இது சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாள்களில் காணப்படும். இந்த நிலை 5-6 நாள்கள்(103°-105°)தொடரும்.

3-4 நாள்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில் நோயாளிக்குப் பலவீனமானநிலை ஏற்பட்டு இயலாத் தன்மை ஏற்படும்.

இந்நோய் மக்களிடையே சடுதியாக பெருகிப் பலரைத் தாக்கும் சக்தி கொண்டது.

★ டெங்குக் காய்ச்சலை அடையாளம் காணும் வழிகள்:

அ. சடுதியாக ஏற்படும் காய்ச்சல்

ஆ. கடுமையான தலையிடி குறிப்பாக நெற்றிப் பகுதிகளில்

இ. கண்களின் பிற்பகுதிகளில் கடும் நோவு உண்டாகுதல். கண்களை அசைக்கும் போது நோவு கூடுவது.

ஈ. உடலின் முழுப்பகுதிகளிலும் நோவு, மூட்டுக்களில் நோவு.

உ. ஓங்காலம், வாந்திஎடுத்தல்

★ கடுமையான டெங்கு, இரத்தத் தாக்கநிலை, அதிர்ச்சி நிலையை எவ்வாறு இனம் காணுவது

மேற்குறிப்பிட்ட குணம் குறிகளுடன் கீழே தரப்படும் ஏதாவது 1 முதல் 2 குணம் குறிகள் இருப்பின் ஆபத்து நிலையாகக் கணிக்கலாம்.

1. கடுமையான, தொடர்ச்சியான வயிற்று நோவு அல்லது வலி.

2.மூக்கு,வாய்,முரசு, தோலின் அடியில் குருதி ஒழுக்குக் காணப்படல்

3. அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல்.

4. மலம் கறுப்பு நிறமாக வெளியேறுவது

5. நா வரட்சி, மற்றும் தண்ணீர்த் தாகம்

6.வெளிறிய/குளிர்ந்த நிலையில் தோல்.

★ நோயை இனங்காணும் முறைகள்

சுலபமாகச் செய்யக்கூடிய ஆய்வு முறைகள். (Plafeler Count, Tourniquet test, Haematocrit test) எவ்வாறெனினும் மேற்குறிப்பிட்ட குணம் குறிகள் இருப்பின் சிகிச்சை உடன் மேற்கொள்ளவேண்டும்.

★ சிகிச்சை முறைகள்

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகமையுள்ள வைத்தியரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியம். ஆரம்பத்தில் சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும் உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின் (Aspirin) புறுற்றின் (Brutin) கொடுப்பதை தவிர்க்க வேண்டும். அவை நோயைச் சிக்கலாக்கும். பரசெற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

கடுமையான வயிற்றுநோவு, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை, மூக்கு,வாய்,தோலுக்கு அடியில் இரத்தக்கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள்.

ஆகவே அவ்வேளைகளில் உடனடியாகவே வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

★ டெங்கு பற்றிய அடிப்படைத் தகவல்கள்

1. Aedis வகை நுளம்பின் இந்த நோய்தோற்று ஏற்படலாம்.

2.ஒரு நோயாளியைக் கடித்த நுளம்பு ஒரு சுகதேகியைக் கடித்தால் அவருக்கு 5-7 நாள்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம் ஆகும்.

★நோய் பரப்பும் நுளம்பு எங்கு இருக்கிறது.

1.இருட்டான பகுதிகள், வீட்டின் உட் பகுதி, மலசல கூடங்கள், இருளார்ந்த பற்றைக்காடுகள், அதன் இருப்பிடங்கள்.

2.பெண் நுளம்பு இடும் முட்டைகள் தண்ணீர் தேங்கியிருக்கும் பகுதியில் காணப்படும். அது 10 நாள்களில் நுளம்பாகப் பிறப்பெடுக்கும்.

★நுளம்பு பெருகும் இடங்கள்

நீர்த்தேக்கங்கள், நீர்தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப் போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும், தண்ணீர் தொட்டிகளிலும், மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும். தண்ணீரைத் தேக்கிவைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாள்களுக்கு ஒருமுறை மாற்றப்பட வேண்டும் இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்து பெருகும்.

★டெங்கு நோய் வராமல் தடுப்பது எப்படி?

அதன் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் நுளம்பு பெருகுவதற்கு எதிரானவையாக அமைய வேண்டும். நுளம்புகளை அழித்தலும் பெருகும் இடங்களை இல்லாமல் செய்வதும் முக்கியமானதாகும். இந்த நடவடிக்கைகள் மழைகாலம் வருவதற்கு முன்னரும் மழை காலத்திலும் நோய் பரவும் காலத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★நுளம்பு கடிப்பதைத் தவிர்த்தல்

அ) டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஆ) முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களைப் பாதுகாக்கும் வகையில் உடை அணிதல்.

இ) நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளைப் பாவித்தல்.

ஈ) நுளம்புச் சுருள் மற்றும் அழிக்கும் இரசாயனப் பொருள்களைப் பாவித்தல்.

உ)நுளம்பு வலைகளைப பயன்படுத்தல் (மிக்க்குறிப்பாக குழந்தைகள, சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு யன்னல் வலைகளைப் பயன்படுத்துதல்

ஊ) நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல். நோயாளியிடம் இருந்து ஏனையோருக்குப் பரவாமல் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

★நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல்.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப் புறத்தில் உள்ள நீர் தேங்கும் இடங்களில் இருந்து பரவுகின்றது.

அதனைத் தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு:

அ) வீட்டுச் சூழலில் உள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழிததல.

ஆ) வீட்டிற்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் நீர் நிலைதது நிற்காமல் சுத்தப்படுத்துதல்.

இ) தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல்.

ஈ) பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச் சூழலில் இருந்து அகற்றி - அழித்தல்

மேலே தெரிவிக்கப்பட டிருந்த முறைகளைக் கவனத்தில எடுத்து நாம் எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

"வருமுன் காப்போம்"

தெங்குப் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்புகளை உரும்பிராயில் வைத்து அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

யாழ்ப்பாணம் ஒக். 26

தெங்குப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக மானிய உதவிகளையும் தென்னம் நாற்றுக்களையும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

தெங்குச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு உரும்பிராயில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

உரும்பிராயில் தென்னை நாற்று மேடை அமைந்துள்ள பகுதியில் நடைபெற்ற வைபவத்தில் தென்னை வளர்ப்பில் ஈடுபடுவோருக்கு மானிய உதவிகளையும் தென்னம் நாற்றுக்களையும் வழங்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டில் நீண்ட் காலமாக இடம்பெற்றுவந்த மோதல்களால் யாழ். குடாநாட்டில் தெங்குப் பயிர்ச் செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை அறிவோம் என்றும் தெங்குச் செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் ஏற்கனவே தான் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

தற்போது வாய்ப்பான சூழல் தோன்றியுள்ளதால் தெங்கு அபிவிருத்திச் சபையானது நாற்றுக்களை விநியோகிப்பதற்கும் மானியங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதனை வரவேற்பதாகச் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,யாழ். குடாநாட்டில் தெங்குப் பயிர்ச் செய்கைக்கு புத்துயிர் வழங்குவதற்கு வெகுவிரைவில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தான் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் வரணி, சங்கானை, கரவெட்டி, மட்டுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தென்னை வளர்ப்போர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு குடாநாட்டில் தெங்குச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்துக் கருத்துத்தெரிவித்ததுடன், தெங்குப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துக் கூறினார். (1)

யாழ். பிரதேச செயலகப்பிரிவில் சமூர்த்தித் திட்டங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். பிரதேச செயலக மகாசங்கத்தின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் சமூர்த்தி கமநெகும உட்கட்டுமான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டம் சமூர்த்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் நடைபெறுகின்றன.

பாஷையூர் மேற்கு (ஜே/65) பிரிவில் குளத்தடுப்புச் சுவர் அமைக்கும் வேலையும், குருநகர் கிழக்கு (ஜே/70) பிரிவில் சென். செபஸ்ரியார் வீதி வாய்க்கால் அமைத்தலும், யாழ்.நகர் கிழக்கு (ஜே/ 74) பிரிவில் இராசாவின் தோட்ட வீதி வாய்க்கால் அமைத்தலும், நாவாந்துறை தெற்கு (ஜே/84) பிரிவில் கலைவாணி முன்பள்ளி வாய்க்கால் திருத்த வேலையும், நாவாந்துறை வடக்கு (ஜே/85) பிரிவில் சூரியஒளி இறவல் வீதி திருத்த வேலையும், சோனகத்தெரு தெற்கு (ஜே/87) பிரிவில் புதுவயல் - மானிப்பாயில் தார் வீதி அமை[illegible] வேலையும், நடைபெற்றுவருகின்றன. (1-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

கந்தையா வேலாயுதபிள்ளை

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை நேற்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் எஸ்.கந்தையாவின் அன்பு மகனும், பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆனந்தகுமார் மற்றும வசந்தகுமாரி, மதனகுமார் (நிகொட்), ஞானகுமார், ரமேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வே.மதனகுமார் (மகன்)
(K.V. மதனா)

மீசாலை,
சாவகச்சேரி வடக்கு. (561848)

அம்பலவாணர் கந்தையா

காரைநகர், ஆயிலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி அம்பலவாணர் கந்தையா நேற்று (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் கமலாதேவி, காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை மறறும் அரியகுட்டி சோதிநாதன், கணேசன், கனகசுந்தரம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2009) செவ்வாய்க்கிழமை காலை 8மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆயிலி, காரைநகர்.

உதயன் ஊடக அனுசரணையுடன் 2009ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற வெற்றித் தேர்வாளருக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களான சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், யாழ்.தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வி.அருளானந்தம், மக்கள் வங்கியின் பொதுமுகாமையாளர் எஸ்.பத்மநாதன், மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி, ஈ.எஸ்.பி.நாகரத்தினம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி மற்றும் சயன்ஸ் ஹோல் இயக்குநர் இரா. அருட் செல்வன், ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற ஸ்ரீகர்சனுக்கு நீதிபதி அ.பிரேம்சங்கர் கிரீடம் அணிவிப்பதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் மேடையில் அமர்ந் திருப்ப தையும் முதல் மூன்று படங்களிலும்-

யாழ்.தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.அருளானந்தம், மக்கள் வங்கியின் பொதுமுகாமையளார் எஸ்.பத்மநாதன், ஈ.எஸ்.பேரம்பல நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதையும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி ப.கஸ்தூரி ஏற்புரை நிகழ்த்துவதையும் விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: ஓங்காரன்)*

'உதயன்' ஊடக அனுசரணையுடன் தரம் 5 மாணவர்கள் நேற்று கௌரவிப்பு

வேம்படி மகளிரில் கோலாகலமாக நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஒக்.26

இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூறு மாணவர்களை 'உதயன்' ஊடக அனுசரணையுடன் வெற்றித் தேர்வாளர் கௌரவிக்கும் மாபெரும் விழா யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக கலந்துகொண்ட விருந்தினர்கள், கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு சம்பிரதாய பூர்வமாக வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம் என்பவற்றுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் வரவேற்புரையினை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வி. அருளானந்தம், யாழ். மக்கள் வங்கியின் முகாமை யாளர் ஹென்றி, ''உதயன் பத்திரிகையின் பொதுமக்கள் உறவு முகாமையாளர் திருமதி நாகேந்திரராணி தங்கராஜா, ஈ.எஸ்.பேரம்பலம் அன்சன்ஸ் உரிமையாளர் எஸ்.பி.நாக ரத்தினம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி, மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் எஸ்.பத்ம நாதன் ஆகியோரும்-

விசேட விருந்தினர்களாக யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், சயன்ஸ் ஹோல் இயக்குநர் இரா.அருட்செல்வன், ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சி.சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொண் டனர்.

இதில் முன்னர் வெற்றித் தேர்வு வளவாளர்களான வெற்றித் தேர்வு இயக்குநர் சு.கணேசலிங்கம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் கே.தவயேர்கராசா, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை ஆசிரியர் கே.கைலைநாதன், குடத்தனை அ.மி.த.க.பாடசாலை ஆசிரியர் கி.இந்திரன், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பாடசாலையின் ஆசிரியர் சி.சிவனேஸ்வரன், அச்சுவேலி மத்திய கல்லூரி ஆசிரியர் செ.சிவனேசன், வெற்றித்தேர்வு பரீட்சை மேற்பார்வையாளர் எஸ். சர்வானந்தன் ஆகியோர் மாலைகள் அணி விக்கப்பட்டு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு காரணமாக விளங்கிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவச் செல்வங்கள் பதக்கம் அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஏற்புரையினை கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி செ. சகாதேவன், யாழ்.நடராஜா இராமலிங்க வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.குகதாசன் மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி ப.கஸ்தூரி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் புலமைப் பரிசில் வெற்றியாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண் டனர். (203-9)

அகதிகள் மீள்குடியமர்வு குறித்து பஸிலுடன் கூட்டமைப்பினர் பேச்சு

கொழும்பு, ஒக். 26

வன்னியில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகளின் மீள்குடியமர்வு விவகாரம் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த வியாழக்கிழமை இரவு விரிவான பேச்சு களில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பஸில் ராஜபக்ஷவுடன் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் பங்குபற்றினார். தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக் குழுவில் அதன் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இடம்பெற்றனர்.

வன்னியில் உள்ள அகதிகளையும் கட்டம் கட்டமாக விடுவித்து மீள்குடியமர்த்துவது தொடர்பாக அரசின் திட்டத்தை பஸில் ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு விளக்கினார் எனத் தெரிகின்றது.

யாழ். மாவட்டம் வலி. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டோர் தொடர்பில் உயர் நீதிமன்ற உத்தரவு ஒன்று உள்ளதைச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கும் மீள்குடியமர்வு துரிதப்படுத்தப் படவேண்டும் என்று வற்புறுத்தினர் எனத் தெரியவந்தது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலக ஆளுநர் தினம் மானிப்பாய் தபாலகத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் சிவகுமார் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் அஞ்சல் அதிபர் செல்வி முத்துத்துப்பிள்ளை நாகமணி மற்றும் உதவித் தபால் அதிபர்களான நடராசா மோகனராஜ், சீவரத்தினம் நாகேந்திரமூர்த்தி ஆகியோர் நிற்பதையும் உப தபாலதிபர்கள், ஊழியர் களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நவாலி செய்தியாளர்)

பாலர் பாடசாலை ஆசிரியர் தேவை

சாவகச்சேரி நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் "BRITISH BUSINESS SCHOOL" ஆங்கில பாலர் பாடசாலைக்கு ஆங்கிலத்தில் கல்வி கற்பிப்பதற்கும் சேவை மனப்பான்மையுடன் பணி புரியக்கூடிய இளம் பெண் ஆசிரியைகள் தேவை. முன் அனுபவம் கட்டாயமில்லை.

நாளை (27.10.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

தொடர்பு: 021 222 5796 (சி/558477)

140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள மக்களின் நலனில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்

துறைசார் பிரதிநிதிகள் பிரஸ்தாபிப்பு

யாழ்ப்பாணம். ஒக்.26

வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து தமது வசிப்பிடங்களுக்கு மீளவும் திரும்பியுள்ள மக்களின் வாழ்க்கை நிலை குறித்து அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

இவ்வாறு சமூக ஆர்வலர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வில் துறைசார் பிரதிநிதிகளால் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

'சொண்ட' நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமூக ஆர்வலருக்கான கலந்துரையாடல் நிறுவன பணிப்பாளர் எஸ்.செந்தூர் ராஜா தலைமையில் நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் இருபதிற்கும் மேற்பட்ட சமூகஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவர்களால் மேலும் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து தமது வாழ்விடங்களுக்கு திரும்பியுள்ள மக்கள் பல அசௌகரியங்களை உடல், உள ரீதியாக எதிர்கொள்கின்றனர். வருமானம் ஈட்டவழியின்றி குடும்பங்கள் வறிய நிலையில் வாழ்ந்து வருகின்றன.

இம்மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க நிறுவனங்கள் பின்னடித்து வருவதாகவும் கூறப்பட்டது.

அனர்த்தங்களின் விளைவாக யாழ்.மாவட்டத்தில் ஆறு லட்சம் மக்களே வாழ்ந்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி குடும்பதிட்டமிடல் காரணமாக குடும்பங்களில் பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறைவடைந்து செல்கின்றது. இவை காரணமாக பாடசாலைகள் மூடுவிழா காணவேண்டியும் ஏற்பட்டுள்ளது.

மருத்துவர்களின் பற்றாக்குறையும் நிலவுகிறது. இதற்கு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் குறைந்து ஒரு வருடமாவது இங்கு கடமையாற்ற முன்வரல் வேண்டும்.

மனைநீர் சேகரிப்பு, சூழல் மாசடைதல், மரம்வளர்ப்பு, மது ஒழிப்பு, சமூக விழிப்புணர்வு, சிமெந்து தொழிற்சாலையினால் ஏற்படவிருக்கும் பாதிப்பு எனும் தலைப்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் கல்வி, சுற்றுச்சூழல், மது ஒழிப்பு எனும் விடயங்கள் தொடர்பான குழுக்கள் தெரிவு செய் யப்பட்டன.

அக்குழுவினர் அரச அதிபர், சமூகசேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர், துறைசார் அதிகாரிகள் அணுகி தீர்வை பெற்றுக்கொள்ள முயல்வதென கலந்துரையாடலின் இறுதியில் தீர்மானிக்கப்பட்டது. (203-14)

கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா நம்பர்-1 புறொய்லர் குஞ்சுகள் நாளை (27.10.2009) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

ராஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம்,
ஆனைக்கோட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை. (90271)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.க.துரைராசா

துணிவும், பணிவும் ஏனும் இரு கூற்றையும் தாரக மந்திரமாகக் கொண்டு ஜே/281 கிராம சேவையாளர் பிரிவில் மூன்று வருடங்களாக எமது பாரதி வீதிக் கிராமத்திற்கு மகத்தான சேவையாற்றி (25.10.2009) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெற்ற எமது கிராம சேவையாளர் மான்புமிகு உயர்திரு க.துரைராசா அவர்களை நோய் நொடியின்றி சீரும் சிறப்போடும் நீடூழி காலம் நித்தமொழி பேசி வாழ எல்லாம் வல்ல சந்நிதி முருகனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:

செ.லோகேஸ்வரன்
பாரதி வீதி,
அச்சுவேலி. (90279)

அ.துதீசன்
வெள்ளை வாய்க்கால்,
சந்நிதி வீதி, அச்சுவேலி.

மரண அறிவித்தல்

கந்தசாமி அம்பிகாவதி

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி அம்பிகாவதி கடந்த 17.10.2009 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கணேசம்மாதம்பதியரின் அன்பு மகனும் மெறிற்றாவின் (ஜேர்மனி) பாசமிகு கணவரும் ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்ட வர்சன், வானுசா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, சத்தியசீலன், காலஞ்சென்ற செல்வம் மற்றும் ஜெயராசா, ராதா, மஞ்சுளா, மகிந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நடராசா, இராசம்மா, வவா, காலஞ்சென்ற ரேவதி, சந்திரமலர், சற்குணதேவி, தயாபரன், ஜெயராஜனி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2009) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
கணேசம்மா (தாய்),
பிள்ளைகள்.

(90278)

பாராட்டுதற்குரியோர்

டக்ளஸ் தேவானந்தா யோகேஸ்வரி பற்குணராசா சுவீகரன் நிஷாந்தன்

தொன்மைசீர் லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியின் தன்மையது மங்காது உதவிக்கரம் நீட்டி நிற்கும்-யாழ் மண்ணின் மைந்தன் எம் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ்தேவானந்தா அவர்களுக்கும் கல்வி, கேள்வி ஞானம், கடமை, கண்ணியம் நிறைந்த கனமான சமூகசேவகி காருண்ய மனம் கொண்ட ஆற்றலின் உறைவிடமாம் யோகேஸ்வரி பற்குணராசா அம்மணி அவர்களுக்கும் பழம்பெரும் எம் கல்லூரியின் பல்துறைசார் வளம்கொண்ட பாங்கான பொதுச்சேவையாளனும், மாணவனும் அன்போடு பணிசெய்ய தன்னைப் பிறர்க்காய் அர்ப்பணித்த பண்பான சுவீகரன் நிஷாந்தனிற்கும் இன்றைய இனியநாளில் இதயக்கமலங்களால் இதமான வாழ்த்துக்களை வாரிச்சொரிவதுடன் பாராட்டுக்களைப் பாமாலையாய் சூட்டி பாருள்ள காலம் மட்டும் இவர் தம்பணி தொடர வாழ்த்தி நிற்கும்

லங்கா சித்தஆயுர்வேத வைத்திய கல்லூரியின் அதிபர், விரிவுரையாளர்கள் - நாம்.

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி •
அதிபர், விரிவுரையாளர்கள்,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(90273)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கந்தசாமி நித்தியானந்தம்

பிறப்பு : 1958.01.15

இறப்பு : 2007.10.18

திதி: அட்டமி

வலிக்கிறது இதயம்
வாழ்விடம் பிரிந்தாய்
நீ வாழ்விடம் பிரிந்தாலும்
எங்கள் இதய நதியில் உன்
பசுமையான நினைவுகள்
என்றென்றும் எங்கள் மனதில்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(90280)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவிலிருந்து ஒரு தொகுதி மக்கள் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரிக்கு பஸ்களில் அழைத்து வரப்பட்டனர். பஸ்களில் கொண்டு வரும் உறவுகளை அழைத்துச் செல்ல சிவன் கோயில் முன்பாக காத்திருக்கும் உறவினர்கள், அழைத்து வரப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் மண்டபத்தில் தங்கியுள்ளனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவசர உதவித் தொகையான 5 ஆயிரம் ரூபா ஒருவருக்கு வழங்குகிறார். (படங்கள்:தென்னவன்)

தீவுப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன

ஊர்காவற்றுறை,ஒக.26

தீவுப்பகுதிகளில் உள்ள அநேக பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதால் பாடசாலைகளில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக இலவசச் சீருடைகள், பாடப் புத்தகங்கள், தளபாடங்கள் என்பன பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் இட நெருக்கடியும் நிலவுகிறது.

வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வருவதே பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக் காரணமாகிறது.

இவர்கள் பாடசாலைக்கு அணிந்து செல்வதற்கு சீருடைகள் இன்மையால் வர்ண உடைகளிலேயே பாடசாலை செல்ல வேண்டியுள்ளது. அநேகமானவர்கள் கற்றல் உபகரணங்கள், காலணிகள் இன்றி தமது கற்றல் செயற்பாடுகளை சீரான முறையில் முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே தொண்டு நிறுவனங்கள் இத்தகைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்க முன்வர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (203- 16)

2009 தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமராட்சி வலயத்தில் 11 சதவீதமானோர் சித்தி

வடமராட்சி,ஒக.26

இவ்வாண்டு நடைபெற்ற தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களில் 170 மாணவர்கள் அதாவது 11.2 வீதமானோரே சித்தியடைந்துள்ளனர்.

இந்த வலயத்திலிருந்து ஆயிரத்து 438 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள்.

அவர்களில் 170 மாணவர்கள் சித்தியடைந்தனர். 632 மாணவர்கள் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றுள்ளனர்.

இவர்களுள் கரணவாய் வேதாரணிய வித்தியாலய மாணவர் ஒருவரே 172 புள்ளிகளைப் பெற்று வடமராட்சியில் முதலிடத்தை வகிக்கின்றார்.

இரண்டாவது இடத்தை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி 171 புள்ளிகளைப் பெற்றும், மூன்றாம் இடத்தை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை மாணவர்கள் 170 புள்ளிகளைப் பெற்று முன்னிலை வகிக்கின்றனர்.

வடமராட்சிக் கல்வி வலயத்தில் கோட்ட ரீதியாக கரவெட்டிக் கோட்டத்தில் 95 மாணவர்களும், பருத்தித்துறைக் கோட்டத்தில் 74 மாணவர்களும், மருதங்கேணிக் கோட்டத்தில் 33 மாணவரும் சித்தியடைந்துள்ளனர். வலய மட்டத்தில் சித்தியடைந்த வீதம் 11.02ஆகும்

இதேவேளை, இம் முறை வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெரிய பாடசாலைகளில் எதிர்பார்த்த சித்தி கிடைக்கவில்லை என்றும், கிராமப்புறப் பாடசாலைகளில் ஒருவரேனும் சித்தியடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (1- 236)

இலங்கை வங்கியின் விசேட சலுகை

குருநகர்,ஒக.26

இலங்கை வங்கியின் 70ஆவது அகவை நிறைவையொட்டி சிறுவர் சேமிப்புக் கணக்கில் 3ஆயிரம் ரூபாவை வைப்பிலிடும் உரித்தாளர்களுக்கு 250 ரூபா பெறுமதியான பரிசு வவுச்சர்கள் வழங்கப்படும் என இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

இச் சலுகை எதிர்வரும் 31ஆம் திகதி மட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203- 51)

கடலுணவுகளின் விலைகள் சடுதியாக வீழ்ச்சியடைந்தன

வண்ணை,ஒக.26

கடலுணவுகளான மீன், இறால், நண்டு, கணவாய் போன்றவற்றின் விலைகளில் சமீப காலமாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விலை போகக் கூடிய காலங்களில் 5 ஆயிரம் ரூபா விலை போகும் கடலுணவுகள் தற்சமயம் அரைவாசிக்கும் குறைவான அளவிலேயே விலை போவதாக அவர்கள் மேலும் கூறினர். (203- 160)

வடமாகாண ஆயுள்வேத பரிசாரகர் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பினர்

வண்ணை,ஒக.26

'வடக்கின் வசந்தம்' வேலைத்திட்டத்தின் ஒரு அலகாக வடமாகண ஆயுள் வேத பரிசாரகர் பயிற்சி நெறியில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட 33 பரிசாரகர்களும் யாழ்.திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நெறியில் கைதடி, அரசினர் ஆயுள்வேத போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த 16 பரிசாரகர்களும், வவுனியா மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலையைச் சேர்ந்த 13 பரிசாரகர்களும் மற்றும் யாழ்.பிரதேசங்களுக்கு உட்பட்ட ஆயுள் வேத வைத்தியசாலைகளைச் சேர்ந்த 4 பரிசாரகர்களும் அடங்குவர்.

கைதடி, அரசினர் ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் மூன்று மாதங்கள் பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்ட மேற்படி 33 பரிசாரகர்களும் மகரகம, நாவின்னை ஆயுள்வேத திணைக்களத்தில் ஒரு வாரகால பயிற்சி நெறிகளுக்கு அழைக்கப்பட்டு நெறிகளைப் பெற்றுக் கொண்டு சான்றிதழ்களுடன் யாழ்.திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203- 160)

மீள் குடியேறியுள்ள கர்ப்பிணிகளுக்கு உதவ யாழ்.சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை

வடமராட்சி,ஒக.26

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து மீளக்குடியேறிய கர்ப்பவதித் தாய்மார்களுக்கு தேவையான உதவிகளை வழங்க யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் மீளக்குடியமர்ந்த கர்ப்பவதித் தாய்மார்களில், 36 வாரங்களைக் கடந்த கர்ப்பவதித் தாய்மார்களுக்கு பிரசவப் பொதி மற்றும் சிசுக்களுக்குத் தேவையான பொதிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நிறை குறைந்த நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு உயர் புரத பிஸ்கட்டுகளும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான தரவுகள் குடாநாட்டில் அவ்வப்பகுதி குடும்பநல உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்டு, யாழ்.பிராந்திய சுகாதாரத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. (203- 236)

வரட்சியால் கிணறுகள், குளங்களில் தண்ணீரில்லை; விவசாயிகள் கவலை

சண்டிலிப்பாய்,ஒக.26

குளங்களில் தேங்கி நின்ற மழை வெள்ளம் கடும் வெப்பத்தின் காரணமாக நாளுக்கு நாள் வற்றி வரண்டு போய் இருப்பதினால் நெல் வயல்களில் நாற்று நடுவதற்கு நீர் இல்லாமல் விவசாயிகள் திண்டாடுகின்றார்கள்.

சுற்றாடலிலுள்ள வயல் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளதாலும் திடீர் திடீரென நீர் வற்றுவதினாலும் நாற்றை நடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் பருவமழை பெய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் குளங்களில் தேங்கி நின்ற மழை வெள்ளம் கடும் வரட்சியின் காரணமாக நாளுக்குநாள் வற்றி வரண்டுபோய்க் காட்சியளிக்கின்றது.

மழை பெய்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் நெல் விதைப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. வயல் நிலங்களில் கிணறு வசதியுள்ள சில விவசாயிகள் நாற்றுப் போட்டு நெற்பயிர் நடுவதில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதே வேளை பருவமழை பெய்யாததால் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் மழையை வேண்டி வானத்தைப் பார்த்த வண்ணம் கவலையுடன் இருக்கின்றார்கள். (203-115)

கலை, இலக்கிய நூல்கள் கொள்வனவு

யாழ்ப்பாணம்,ஒக.26

வடமாகாண எழுத்தாளர்களினால் வெளியிட்ட கலை இலக்கிய நூல்களை வடமாகாணசபை கொள்வனவு செய்யவேண்டுமென வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பணித்துள்ளார்.

இந்நூல்கள் கொள்வனவுக்காக 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடமாகாண எழுத்தாளர்கள் தமது நூலின் ஒரு பிரதியையும், எவ்வளவு நூல்கள் வழங்க முடியும் என்பதையும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பருவ வெளியீடுகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நூல்களை ''செங்கை ஆழியான், தலைவர்,75/10ஏ, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்'' அல்லது கவிஞர் சோ.பத்மநாதன், பொருளாளர், ஏரகம், பொற்பதி வீதி, யாழ்ப்பாணம் அல்லது மு. சிறிபதி, செயலாளர், வளலாய் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை என்னும் முகவரிகளுக்கு தபால் மூலமாகவோ நேரிலோ சமர்ப்பிக்க முடியும். (201)

விளையாட்டு உபகரணங்களை ஐ.ஓ.எம். நிறுவனம் வழங்கவுள்ளது

நல்லூர்,ஒக.26

செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு உபகரணங்களை ஐ.ஓ.எம். நிறுவனம் வழங்கவுள்ளது.

சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் பொருள்களை கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது. (203-111)

பொன். நந்திவர்மனின் 'தேசப்படத்தொகுதி' நூல் வெளியீட்டு விழா வடமராட்சி, தும்பளை சிவப்பிரகாச ம.வியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். தலைமை உரையை தும்பளை சிவப்பிரகாச ம.வி. அதிபர் கே.கே.யோகநாதன், பிரதமவிருந்தினர் உரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, சிறப்பு விருந்தினர் உரையை வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) இ.தமிழ் மாறன், ஆய்வுரையை யாழ். இந்துக் கல்லூரி புவியியல்பாட ஆசிரியை திருமதி சாந்தினி அருந்தவபாலன் ஆகியோர் நிகழ்த்தினர். (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடலியடைப்பு புதாறனை சித்திவிநாயகர் ஆலய சூரன்போர் நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: சரவணன்)

முப்பது வருடகால யுத்த அனர்த்தத்தின் விளைவுகள் எமது மக்களின் ஆரோக்கிய வாழ்வை மிகவும் பாதித்துள்ளன

சமூக சேவைகள் அமைச்சர் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.26

முப்பது வருட கால யுத்த அனர்த்ததின் விளைவுகள் எமது மக்களின் ஆரோக்கிய வாழ்வில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது.

இழந்த எமது ஆரோக்கியத்தை மீட்டுக்கொள்வதற்கு 'சுகவாழ்வுக்கான பயணம்' என்னும் நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது.

எமது எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்துக்கும், மேம்பாட்டுக்கும் என மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களுக்கும் முயற்சிகளுக்கும் எனது அமைச்சின் ஊடாகப் பூரண ஆதரவினை வழங்கத் தயாராக இருக்கிறேன் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதியிலுள்ள 'சுகவாழ்வுக்கான பயணம்' எனும் நிறுவனத்தின் அடிப்படைச் சுகாதார மருத்துவப் பயிற்சி நெறி மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சுகாதார மருந்துவக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆரம்பநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினர்களாக உலக சுகாதார நிறுவன ஆலோசகர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பொதுவைத்திய நிபுணர் எஸ்.சிவன் சுதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் நாடவை வெட்டி நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர்.

கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உரையாற்றும் போது மாவட்டத்தின் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியைப் பயன்படுத்த நான் பூரண அனுமதி வழங்கியிருக்கிறேன்.

எனவே நிறுவனங்கள் இவ்வாறான வளங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்- என்றார். (203-14)

வேலணைப் பிரதேசத்தில் சிறுவர், முதியோர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.26

சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றாற்றலுடையோர் தினவிழா எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தீவுகள் தெற்கு, வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கரித்தாஸ்- கியூடெக் நிறுவன அனுசரணையுடன் நடைபெறும் இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராகச் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார். (203-7)

அச்சுவேலியில் 'வெஸ்ரேன் யூனியன்' கிளை

யாழ்ப்பாணம், ஒக்.26

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிப் பிரிவில் 'வெஸ்ரேன் யூனியன்' தனது முகவர் சேவையை ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள இந்தச் சேவையின்மூலம் அச்சுவேலிப் பிரதேசத்திலுள்ள மக்கள், வெளிநாடுகளிலிருந்து தமது உறவினர்களால் அனுப்பப்படும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (203-7)

சிறுவர் பராமரிப்பு நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.26

வேலணைப் பிரதேச செயலக சமூக பாதுகாப்பு, சிறுவர் பராமரிப்பு நிலைய புதிய கட்டடத்திறப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வேலணைப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகச் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார். (203-7)

பரு.வர்த்தகருடன் டக்ளஸ் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.26

பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினர் தாம் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அப்பகுதி வர்த்தக சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலேயே இது பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் அப்பகுதியில் மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாத வீதிகள் குறித்து, குறிப்பாக கோட்டடிப் பிள்ளையார் கோயில், கோட்டை வாசல் அம்மன் கோயில், பொலிஸ்நிலையப் பகுதி, மெதடிஸ் கல்லூரி, தபால் நிலையம் என்பவை அமைந்துள்ள பாதைகளை மக்கள் பாவனைக்கு அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர். (203-7)

பாராட்டும் 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்

யா/உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவியும் திரு.திருமதி இராஜகுமாரன் - அனுஷா தம்பதியரின் செல்வப் புதல்வியுமான

இ.அஞ்சனா

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்று (26.10.2009) திங்கட்கிழமை தனது பிறந்தநாளைக் கொண்டாடும் நன்நாளில் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் வாழ்வில் எல்லா சௌபாக்கியங்களும் பெற்று வாழ மருதடி விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்கள்.

உடுவில் வீதி, மானிப்பாய். (90223)

தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பம்- 2010

2010ஆம் ஆண்டு தரம்-6இல் தமிழ் மொழிமூலம்,ஆங்கில மொழி மூலம் யா/மகாஜனக் கல்லூரியில் கல்வி பயில விரும்புபவர்கள் 10.11.2009இற்கு முன் தமது விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூல மாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (சி/561831)

31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

பிறப்பு 10.04.1989 இறப்பு 26.09.2009

செல்வம் வஸ்தியாம்பிள்ளை ஜோட் ஜெயசீலன்

எமது அன்பு மகனின் மரணச் செய்தி கேட்டு உடன் விரைந்து உதவி புரிந்த அருட்தந்தை வீஸ்மன், பெரியதம்பி, கிளின்ரன் அந்தி கால சேவையாளர் துஷாந்தன், செய்தி அறிந்து வீட்டில் ஓடோடி வந்த நண்பர்கள், வெளிநாடுகளிலும் உள் நாடுகளிலுமிருந்து தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தோருக்கும் உதவி புரிந்தோருக்கும் செய்தி அறிந்து விட்டிற்கு விரைந்து வந்த யாழ்.காவல்துறை, இளவாலை காவல்துறையினருக்கும் பண்டத்தரிப்பு சிவில் அதிகாரி, இராணுவத்தினருக்கும் பெரியவிளான் இராணுவ அதிகாரி, இராணுவத்தினருக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்த எமது அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பெரியவிளான், இளவாலை. (90256) குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கதிரிப்பாய் பாலகப்பிரமணிய வித்தியாசாலையில் 2009ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மாணவி க.நிலக்சனாவையும் நூறுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவிகள் செல்வி. க.திரோசனா, செல்வி ம.மதுஷா, செல்வி ச.கனிஸ்ராளினியையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கதிரிப்பாய் பாலகப்பிரமணிய வித்தியாசாலை, அகுவேலி. (சி/558495)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள்,பாடசாலைச் சமூகம்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இளையதம்பி கந்தையா (மணியம்மாமா)

பிறப்பு 20.01.1936 இறப்பு 06.11.2008

திதி: கோஸ்டாஷ்டமி (26.10.2009)

ஆண்டொன்று ஆனாலும் ஆறாதையா
உங்கள் பிரிவுத்துயர்- என்றென்றும்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப்
பிரார்த்திப்போமாக.

குப்பிளான் தேற்கு, ஏழாலை. (சி/561832)

இமைப்பொழுதும் மறவாத: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

2ஆம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 05.07.1947 உதிர்வு 19.10.2007

அமரர் பாக்கியலட்சுமி குலவீரசிங்கம்
(சுதுமலை வடக்கு, மானிப்பாய்)

ஆண்டுகள் இரண்டு போனதம்மா ஆயினும்
எமது மனதில் உன் உருவம் நிலைத்து நின்று வாழுதம்மா!
உறவாய் மனதில் உன் பெயர் இன்னமும் அழியவில்லையம்மா!
எங்கள் உயிர் உள்ளவரை உனது பெயர் நிலைக்குமம்மா!
எம் நிலையை உயர்த்தி வைத்து நீ மறைந்தும்
எம்முள் ஆவியாய் நிற்கிறாயே!
உன் ஆத்ம சாந்திக்காய் வேண்டி நிற்கின்றோம்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர். (90262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.

நாகேந்திராசா கரன்ராஜ்
பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்
புள்ளிகள் - 155

எனது பாடசாலையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு எமக்கு வழிகாட்டியாக இருந்த அதிபரும், பாடங்களை நேரம் காலம் பார்க்காது விடுமுறை நாள்களிலும், பாட சாலை முடிவடைந்த பின்னரும் கற்பித்து எமது உயர் சித்திக்கு வழிசமைத்த ஆசிரியர்களும் காரணமாவார்கள்.

வீட்டிலே எனது அப்பா, அம்மா, அண்ணாமார் தொடர்ந்து ஊக்கத்தினை அளித்து எனது பரீட்சையின் வெற்றிக்குச் சகல வழிகளிலும் உதவினார்கள். குறிப்பாக அம்மாவின் விருப்பத்தினை நான் நிறைவேற்றியுள்ளமை அம்மாவிற்கும் எனக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

எமது வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருந்தபோதும் நான் எமது கல்விக்கு பயன்படக்கூடிய ஆங்கிலமொழி சம்பந்தமான நிகழ்ச்சிகளையும், அறிவு சார்ந்த நிகழ்ச்சிகளையும் மட்டும் பார்ப்பது வழக்கம்.

எதிர்காலத்தில் நான் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதும் அதன் மூலம் நான் கற்ற பாடசாலைக்கும் சமூகத்திற்கும் உதவ வேண்டும் என்பதும் எனது இலட்சியமாகும்.

வரதராஜன் நிரூபன்
மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை
புள்ளிகள் - 171

எனது தந்தை வியாபாரம் செய்கின்றார். அம்மா சங்கானை வைத்தியசாலையில் பணி புரிகின்றார். அப்பா எனது கல்வியில் கூடிய கவனம். படிப்பில் கவனமில்லாமல் இருந்து தோல்வியடைந்து யோசிப்பதில் பயன் இல்லை. ஆரம்பத்தில் இருந்தே கல்வியில் அன்பு வைத்து கவனமாக படிக்க வேணும். அப்போது தான் எதிர்காலத்தில் நல்ல பிரஜையாக மிளிரமுடியும் என அறிவுரைகளை அப்பா அடிக்கடி கூறுவார். அம்மா தனக்கு ஓய்வான நேரங்களை எனது கல் வியில் செலுத்துவார்.

நான் காலையில் ஒருமணி நேரமும் இரவில் 3மணி நேரமும் படிப்பேன். விளங்காதவற்றை அம்மாவிடம் கேட்பேன். எனது தாயின் கனவெல்லாம் என்னை வைத்தியராக்கி பார்க்க வேண்டும் என்பதே. அவர்களின் அந்தக் கனவை எனது இலட்சியமாகக் கொண்டு எனது கல்வியைத் தொடர்கின்றேன். இறை பக்தியோடு பகவானை மனதிற்கொண்டு கல்வி மீது அதிக ஆசை வைத்து படிப்பீர்கள் ஆனால் தோல்வி கிடையாது. 'ஒருவனது வெற்றிக்கு நம்பிக்கை என்பது முக்கியம். எனவே நம்பிக்கையுடன் படிக்க வேண்டும் ' என வகுப்பாசிரியர் செல்வி து. சறோஜினி ஆசிரியர் அடிக்கடி கூறுவார். நான் அதன்படி நடந்தேன் வெற்றியீட்டினேன்.

எனது இந்த வெற்றிக்கு உந்துசக்தியாக இருந்த பெற்றோருக்கும் அறிவுரைகள் கூறி வழிநடத்திய அதிபர் ப. பத்மநாதன் அவர்களுக்கும் பல புத்திமதிகள் கூறி என்னை அரவணைத்து கல்வியூட்டியது மட்டுமல்லாமல் மாலை நேரங்களிலும் பாடசாலையில் வகுப்பெடுத்த வகுப்பாசிரியர் அவர்களுடன் இணைந்து கற்பித்த செல்வி இ. இந்திரா ஆசிரியர் மற்றும் எனக்கு ரீயூசன் சொல்லித் தந்த த. அருளரசன் ஆசிரியர் ஆகியோருக்கும் மட்டுமல்லாமல் உதயன் நிறுவனத்திற்கும் எல்லாவற்றிற்கும் மேலான பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மகேந்திரன் ராகவன்
துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை
புள்ளிகள் - 167

நான் ஒரு சிறிய கிராமத்தில் சிறிய பாடசாலையில் கல்வி கற்கின்றேன். எனது பாடசாலை சிறியதாயினும் கல்வியில் அதன் சாதனைகள் பன்மடங்கு பெரியது.

எனது அப்பா நகைக்கடை வைத்திருக்கிறார். எனது அம்மா ஆசிரியர். எனக்கு அம்மாவும் மாமாவும் பல்வேறு விதமாக ஊக்கம் தந்தனர்.

அதுமட்டுமன்றி அதிபர் கி.குகநாதன் அவர்களும், எனது வகுப்பாசிரியர் திருமதி குமுதினி தர்மராஜா அவர்களும் வழிகாட்டினார்கள். எனக்கு தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்துவரை வழிகாட்டிய ஆசிரியர்களை என்றும் மறவேன். சுற்றாடல் ஆசிரியர் திருமதி சாந்தினி பத்தமநாதன் அவர்களையும், ஆங்கில ஆசிரியர் மு.விஜயகுமார் அவர்களையும் என்றும் மறவேன்.

அத்தோடு பாடசாலையின் முன்னாள் அதிபர் சொ.அரியலிங்கம் அவர்களையும் மறவேன். எனது எதிர்கால இலட்சியம் அனைத்துத் துறைகளிலும் பட்டம் பெறுவதாகும்.

தேவதாசன் கௌரிசங்கர்
மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை
புள்ளிகள்- 162

எனது தந்தை போக்குவரத்து சபையில் பணிபுரிகின்றார். அம்மா வலிகாம வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகராக சேவையாற்றுகிறார். நான் வீட்டில் ஒரே ஒரு பிள்ளை அப்பா கண்டிப்பானவர். அம்மா சாதுவானவர். ஆனாலும் எனது கல்வி விடயத்தில் கண்டிப்பதற்கு தவறுவதில்லை.

எனது பெற்றோர் என்னை நன்றாகக் கற்பித்து எதிர்காலத்தில் சமூகம் போற்றக்கூடியளவில் சேவையாற்ற வேண்டும் என்ற பேரவாவுடன் எனது கல்விக்கு பக்கபலமாக இருந்து பாடம் சொல்லித்தருவார்கள். காலையில் 5- 6 மணிவரை அப்பாவும் மாலை 6-10 மணிவரை அம்மாவும் பாடம் சொல்லித் தருவார்கள். நானும் ஆசையுடன் படிப்பேன்.

எனது எதிர்கால இலட்சியம் வைத்தியராக வந்து சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்பதே ஆகும். அந்த இலட்சியத்தை அடைவதற்காக சிறுவயதிலிருந்தே எனது புலன்களை கல்வியின்பால் செலுத்தி வருகின்றேன். அந்த இலட்சியத்தை அடைவேன் என்ற திடமான நம்பிக்கையுண்டு.

எனது இலட்சிய பயணத்தின் ஆரம்பப்படியான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு அறிவுரை கூறிய அதிபர், அன்பாக அரவணைத்துக் கற்பித்த வகுப்பாசிரியர் செல்வி து. சறோஜினி மற்றும் அவருடன் இணைந்து மாலைநேர மேலதிக வகுப்பு எடுத்த செல்வி இ.இந்திரா மற்றும் அன்பழகன் ஆசிரியர் இவர்களுடன் மாதிரி வினாத்தாள்களை பிரித்து பக்கபலமாக இருந்து மேலும் பலம் சேர்த்த உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கும் நன்றி கூறுவதோடு பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

லொஸ்லின் யனு அன்ரன் பிரான்சிஸ்
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
புள்ளிகள் - 174

எனது அம்மா, அப்பாவின் கனிவான கண்டிப்பும் அன்பான அரவணைப்பும் எனது விடா முயற்சியும்தான் பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெறவழி அமைத்தது. தன்னம்பிக்கையுடன் இறுதிவரை முயன்று கற்றேன். அதிகமான மாதிரி வினாத்தாள்களையும் பயிற்சிகளையும் செய்ததுடன் தவறுகளை உடனுக்குடன் திருத்தி விளக்கம் பெற்றேன். உதயன் பத்திரிகை வினாப்பத்திரங்களையும் உடனுக்குடன் பயன்படுத்தினேன்.

அதிகாலையில் எழுந்து படிப்பது உடல் நிலைக்கு ஒத்துவராத காரணத்தால் ஓய்வான நேரங்களிலும் இரவு நேரங்களிலும் நீண்டநேரம் எனது கற்றலை மேற்கொண்டேன். அன்றைய பாடங்களை அன்றிரவே படித்து முடித்து விடுவேன். எனது கல்லூரி அதிபரின் அயராத உழைப்பும் அவரது அக்கறையும் எனது வெற்றிக்கு உதவியது எனலாம். எனது ஆசிரியர்களான ரங்கலா சின்னராசா, துவாரகமலர் குமாரசுவாமி, எஸ்.சகாயமேரி ஆகியோர் அவ்வப்போது என்னை உற்சாகப்படுத்தி ஒத்துழைப்பு வழங்கினர். நான் சோர்வடையும் நேரங்களில் தட்டிக் கொடுத்துப் பக்கபலமாக இருந்து உதவிய அதிபர், ஆசிரியர்களுக்கு என்றும் நன்றியுடையவளாவேன். எனது சகமாணவிகளும் பொறாமையின்றி அனைத்து உதவிகளையும் வழங்கினர். எம்மிடையே போட்டியிருக்குமே தவிர பொறாமை இல்லை. கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது விளையாட்டு, கலை நிகழ்வுகள், போட்டிகளிலும் கலந்து கொள்வேன். எனது எதிர்கால இலட்சியம் ஒரு டாக்டராக வரவேண்டும் என்பதே. இலக்கையடைய தொடர்ந்து முயற்சி செய்வேன்.

இராஜமோகன் சரண்யா
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
புள்ளிகள் - 166

எனது பரீட்சை பெறுபேறுகளின் வெற்றிக்கு உதவியவர்கள் எனது கல்லூரி அதிபரும் ஆசிரியர்களான செல்விகள் ரங்கலா சின்னராசா, துவாரகமலர் குமாரசுவாமி, எஸ்.சகாய மேரி ஆகியோரின் விடாமுயற்சி, தன்னம்பிக்கை வெற்றிபெற வேண்டுமென்ற உறுதிப்பாடு எனக்குக் கைகொடுத்துதவியது. அம்மா, அப்பா மற்றும் வீட்டிலுள்ள அனைவரும் என்னை அவ்வப்போது உற்சாகப்படுத்தி கல்வியைக் கற்க வைத்தனர். அன்றைய பாடங்களை அன்றே கற்று சந்தேகங்களை உடனுக்குடன் போக்கிக் கொள்வேன். அதிகமான பயிற்சிகளை மேற்கொண்டேன் ஒவ்வொரு பயிற்சியிலும் திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றேன். பயிற்சி வினாக்களில் ஏற்பட்ட தவறுகளை மீண்டும் மீண்டும் மீளாய்வுசெய்து கொண்டேன். அதிகாலையில் எழுந்து

சந்திப்பு - சரவணன், கர்ணன், ஞானஆதவன்

படிப்பதுடன் ஓய்வு நேரங்களில் அக்கறை எடுத்துப் படித்தேன். உதயன் வினாப்பத்திரங்களையும் அவ்வப்போது பயன்படுத்தினேன்.

பரீட்சைக்கு என்னைத் தயார் படுத்தியதோடு பாடசாலையில் நடைபெறும் போட்டிகள் ஏனைய நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்வேன். பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 2 ஆம் இடத்தை வகிக்கும் நான் எனது அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு இதுபோன்ற வெற்றிகளை மேலும் மேலும் பெற்றுக்கொள்ள இறைவன் அருள் பாலிக்க வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

சிவரூபன் சங்கவி
பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்
புள்ளிகள் - 148

எனது தந்தை ஒரு தவில் வித்துவான். எனது குடும்பத்தில் நான் மூத்தபிள்ளை. எனது அப்பாவும் அம்மாவும் நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு இருந்தார்கள். அடிக்கடி அம்மா எனது வகுப்பாசிரியரைச் சந்தித்து எனது கல்வி நிலைபற்றி அறிந்து கொள்ளுவார்.

பரீட்சையில் சித்தியடைந்த செய்தி கேட்டதும் என்னைவிட அதிக மகிழ்ச்சியில் திளைத்துப்போனவர் எனது அம்மாதான்.

பாடசாலையில் என்னைக் கற்பித்த ஆசிரியர்களும் எனது வெற்றிக்காக அயராது பாடுபட்டார்கள். அவர்களின் முயற்சியினால்தான் நான் வெற்றியீட்ட முடிந்தது.

உயர் வகுப்பைக் கற்க வேறு பாடசாலைக்குச் சென்றாலும் என்னை வளர்த்தெடுத்து ஆரம்ப வெற்றிக்குக் காரணமாயிருந்த இப்பாடசாலையை நான் என்றும் மறக்க மாட்டேன். இப்பாடசாலையின் மாணவி என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

கிருஷ்ணகுமார் பிருந்தாபன்
பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்
புள்ளிகள் - 147

பரீட்சையில் எனது வெற்றிக்கு பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் காரணமானவர்.

எனது அண்ணாவும் இப்பாடசாலைகளில் புலமைப் பரீட்சையில் ஏற்கனவே சித்தியடைந்துள்ளார். அதேபோல் நானும் பரீட் சையில் சித்தியடைய வேண்டுமென்பது எனது இலக்காக இருந் தது. எனது ஆசிரியர்கள் கால நேரம் பாராது எமது வெற்றிக்காக உழைத் தார்கள். பரீட்சை நெருங்கிய காலத்தில் அடிக்கடி பாடசாலையில் நடத்தப்பட்ட பயிற்சிப் பரீட்சைகள் எமது பரீட்சையின் வெற்றிக்கு சகல வழியிலும் உதவியது. எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பது எனது இலட்சியமாகும்.

சோமசுந்தரசர்மா மனஸ்வினி
இறுவில் மத்திய கல்லூரி
புள்ளிகள்- 154

அப்பா ஆலய பூசகர். எனக்கு மூன்று சகோதரர்கள். நான்தான் மூத்தபிள்ளை. அம்மா எம்மை வழி நடத்துவதும் குடும்பப் பணிகளையும் கவனிக்கும் சிறந்த குடும்பப் பெண்.

எனது பெற்றோர்கள் சாதுவானவர்கள். என்னை எப்படியாவது கற்பித்து நல்ல நிலைக்கு ஆளாக்கவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக, அன்பாக அரவணைத்து கல்விக்கு ஊக்கம் தருவார்கள்.

எனக்கு கண்டிப்பு தான் விருப்பம். அதுதான் மனதில் பதியும். அதனால் காலையில் 2 மணிநேரம் படிப்பேன். இரவு 5- 9 வரை படிப்பேன். அம்மா என்னுடன் இருந்து கற்பிப்பார். எனது தாயாரின் ஆசை என்னை வைத்தியராக்கி பார்க்கவேண்டும் என்று தான். அதனால் நான் அக்கறையெடுத்து அம்மாவின் ஆசையை நிறைவேற்றவேண்டும் எப்றும் எதிர்காலத்தில் நற்பிரஜையாக வந்து சேவையாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு படிக்கின்றேன். இணைபாடச் செயற்பாடுகளிலும் அதிகம் பங்கு பற்றுவதுண்டு. நான் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றதில்லை. பாடசாலைப் படிப்பும், வகுப்பாசிரியரின் மாலை நேர வகுப்பும் வீட்டில் கற்பதும் மட்டும் தான் எனது வெற்றிக்கு காரணமாகும். எனது இந்த வெற்றிக்கு மூலகாரணமாக இருந்து கற்பித்த வகுப்பாசிரியர் கு. குகதாசன் மற்றும் யோ. சூரியகுமார், அ.சண்முககுமார் மற்றும் அதிபர் ஆகியோருக்கும் உதயன் நிறுவனத்திற்கும் நன்றி கூறுவதோடு எனது தொடர் வெற்றிக்குத் துணை புரியவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்விச் சுடர் 29

மாவட்ட வலம் – நுவரெலியா

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

கணிதம் – I (புதிய பாடத்திட்டம்) 32-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

பகுதி A

01. 2kg சீனியின் விலை ரூபா 150 எனின், 400g சீனியின் விலையைக் காண்க.
02. தீர்க்குக. $1/x + 1 = 2$
03. $a + b + c$ இன் பெறுமானம் யாது?



04. 350g ஐ kg இல் தருக.
05. $x = 3$ எனின், x^2 இன் பெறுமானம் யாது?
06. 0.7ஐ சதவீதமாக தருக.
07. தரவுகளைக்கொண்டு x ஐக் காண்க.



08. பெறுமானம் காண்க. 0.5^2
09. $V = u + at$ இல் a ஐ எழுவாயாக்குக.
10. பெறுமானம் காண்க. $\log_5 125$
11. காரணிப்படுத்துக. $x^2 - 1/4$
12. தீர்க்குக. $x(x - 3) = 0$
13. பொ.ம.சி காண்க. $15x^2, 10xy^2, 5(x+y)(x-y)$
14. ஏறுவரிசைப்படுத்துக. 0.52, 1/3, 0.99, 75%
15. $3x - 2y = 4$ இந் நேர்கோட்டு வரைபின்,
    1) படித்திறன் 2) வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க.
16. சுருக்குக. $5 - 0.3^2$
17. $\sin\theta = 5/13$ எனின்,
    1) $\tan\theta$ 2) $\cos\theta$ என்பவற்றைக் காண்க.
18. O வை மையமாக உடைய வட்டத்தின் ஆரை 7cm, கோணம் AOB = 90⁰ ஆகும். நிழற்றிய பகுதியின் சுற்றளவைக் காண்க. (2 = 1.4)



19. கோணம் ABC = 90⁰, AD = AB ஆகும். P = 2q எனின்,
    1) P
    2) q
    என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.



20. உருவின் தரவுகளுக்கமைய B இலிருந்து A இன் திசைகோளைக் கணிக்குக.



21. சுருக்குக. $2 - 2/x - 5$
22. $(a+b)^3 = a^3 + 3a^2b + 3ab^2 + b^3$ ஆகும் எனின், 103^3 இன் பெறுமானத்தைக் காண்க.
23. வியாபாரி ஒருவர் 5% இலாபம் வைத்து பொருள் ஒன்றை ரூபா 1575இற்கு விற்றார். பொருளின் கொள்விலையைக் காண்க.
24. O ஐ மையமாக உடைய வட்டத்தில் CD விட்டம், AB தொடலி ஆகும். கோணம் COE = 80⁰ உம் ஆகும்.
    1) x
    2) y என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.



25. $x = (-2)$ $y = 1/3$ $z = 0$ எனின், $6x^2y - yz + 1/x^2$ இன் பெறுமானத்தைக் காண்க.
26. பெறுமானம் காண்க. $\log_5 25 - \log_7 343 - 4$
27. A : B என்பவற்றுக்கிடையே 3:5 என்ற விகிதத்திலும், C : B என்பவற்றுக்கிடையே 2:3 என்ற விகிதத்திலும் ரூபா 17,000 பகிரப்படின் B பெறும் பணத்தொகையைக் காண்க.
28. 7cm ஆரையுடைய சீரான குறுக்கு வெட்டுடைய இக்குழாயில் $3ms^{-1}$ எனும் கதியில் நீர் வெளியேறின் 1sec இல் வெளியேறும் நீரின் கனவளவைக் காண்க.



29. O ஐ மையமாக உள்ள வட்டத்தில் A, B, C, D என்பன பரிதியில் உள்ள 4 புள்ளிகள் ஆகும். AB, E வரை நீட்டப்பட்டுள்ளது. CBE = 70⁰ எனின்,
    1) ADC
    2) பின்வளைகோணம் AOC என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.



30. 1:500 எனும் அளவிடைக்கு வரையப்பட்ட காணியின் பரப்பளவு $100cm^2$ ஆகும். காணியின் பரப்பளவை சதுர மீற்றரில் தருக.

பகுதி B

★ **5 வினாக்களுக்கும் விடை தருக.**

01. வியாபாரி ஒருவர் பொருள் ஒன்றை ரூபா 4,500இற்கு கொள்வனவு செய்தார். அதனை 25% இலாபம் வைத்து விலை குறித்தார். விற்பனையின்போது 12.4% கழிவு வழங்கப்பட்டது.
    1) குறித்த விலை யாது?
    2) கழிவுத்தொகை யாது?
    3) நுகர்வோரின் கொள்விலை யாது?
    4) வியாபாரி பெற்ற இலாபத்தை கொள்விலையின் சதவீதமாக தருக.

02. 30cm நீளமும், 21cm அகலமும் உடைய செவ்வக வடிவிலிருந்து 21cm விட்டமுடைய அரைவட்ட பகுதியும் சரிவக பகுதியும் கொண்ட இணைந்த உருவம் (நிழற்றிய) வெட்டி அகற்றப்படுகிறது.
    1) அரைவட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.
    2) சரிவக பகுதியின் பரப்பளவைக் காண்க.
    3) நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க.
    4) எஞ்சிய பகுதியின் பரப்பளவைக்காண்க.
    5) AB = 20.4cm எனின், ABCEGHI இன் சுற்றளவைக் காண்க. (நிழற்றிய பகுதி)



03. ஒரு குறித்த கிராமத்தில் தொற்று நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் வயதை அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்ட வலையுரு வரையம் தரப்பட்டுள்ளது.



    1) 30 வயதிலும் குறைந்த நோயாளர்களின் எண்ணிக்கை யாது?
    2) மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை யாது?
    3) ஒருவர் எழுமாறாக தெரியப்படின் அவர் 40 வயதிலும் குறைந்தவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
    4) 45 வயதிற்கு மேற்பட்டவர்களை மொத்த நோயாளர்களின் சதவீதமாக தருக.
    5) தரப்பட்டது கிராமம் A எனக்கொண்டு ஏனைய B, C எனும் கிராமங்களில் தொற்றுக்குள்ளாக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையின் விகிதங்கள் A:B = 4:5, C : B = 5:3 எனின், A, B, C ஐ தனி விகிதமாக எடுத்துரைக்குக.

04. $y = 2 - 3x - x^2$ எனும் சார்பின் வரைபு வரையப்பட்டுள்ளது.



    1) சார்பின் உயர்வுப் பெறுமானம் யாது?
    2) சமச்சீர் அச்சின் சமன்பாட்டினை எழுதுக.
    3) சார்பு நேராகும்போது x இன் பெறுமானவீச்சு யாது?
    4) $2-3x-x^2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலகங்களை வரைபிலிருந்து காண்க.

05. a) உருவின் தரவுகளைக்கொண்டு பின்வரும் கோணங்களின் பெறுமானங்களை எழுதுக.
    1. x
    2. y
    3. z



    b) $n(B) = 35$, $n(A) = 15$, $n(A)^1 = 27$ உம், ACB உம் ஆகும் இத்தகவல்களை வென்னுருவில் காட்டி பின்வருவனவற்றைக் காண்க.
    1. $n(B)^1$
    2. $n(\xi)$

கணிதம் – II (புதிய பாடத்திட்டம்) 32-T-II

பகுதி - A

★ **பகுதி A இலிருந்து ஐந்து வினாக்களையும், பகுதி B இலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்தெடுத்து எல்லாமாக 10 வினாக்களுக்கு விடையளிக்குக.**

விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. $a^3-b^3= (a-b)(a^2+ab+b^2)$
    a) மேலே உள்ள தொடர்பைக் கொண்டு பின்வருவனவற்றின் காரணிகளை காண்க.
    1) $8x^3-y^3$ 2) $1-27x^3$
    b) தீர்க்க.
    1) $2/x+3/y=-1/12$ 2) $1/x-5/y=19/12$
    c) $5/x+2 = 3x$ இச்சமன்பாட்டினை $ax^2+bx+c = 0$ எனும் வடிவிற்கு மாற்றி அதனை நிறைவர்க்கமாக்கித் தீர்க்குக.

02. a) செங்கோண முக்கோணியொன்றிலே செங்கோணத்தை உள்ளடக்கும் பக்கங்களில் பெரிய பக்கமானது சிறிய பக்கத்திலும் 4cm அதிகமாகும் பெரிய பக்கம் xcm எனின்,
    1) சிறிய பக்கத்தை x சார்பில் தருக.

மறுபக்கம் பார்க்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதத்தின் தொடர்ச்சி.....

02. a) 2) முக்கோணியின் பரப்பளவு y எனின் $y= x^2-4x/2$ இன் வரைபை வரைவதற்கு பெறப்பட்டது x,y என்பவற்றின் பொறுமாளங்கள் கொண்ட பூரணமற்ற அட்டவணை தரப்பட்டுள்ளது.

X	0	1	2	3	4	5	6	7
Y	0	.....	-2	.....	0	.....	.....	10.5

3) அட்டவணையில் வெற்றிடங்களை நிரப்புக.
4) X அச்சு வழியே 10 சிறுபிரிவுகளில் 1 அலகும், y - அச்சு வழியே 10 சிறுபிரிவுகளில் 2 அலகுகளும் வகைக்குறிக்குமாறு அளவிடைகளை எடுத்து சார்பின் வரைபை வரைக.
5) x = 4 ஆகும்போது முக்கோணியின் பரப்பளவிற்கு யாது நிகழும் ?
6) முக்கோணியின் பரப்பளவு $4cm^2$ ஆகும்போது x இன் பெறுமானத்தைக் காண்க.

b) இதே வரைபுத்தாளில்
1) $y = -3x/2+7$ எனும் வரைக.
2) நேர்கோடானது மேலே b 2 இல் வரைந்த வரைபை வெட்டும் புள்ளியின் ஆள்கூற்றினை எழுதுக.
3) இந்நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0,2.5) எனும் புள்ளிக்கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டினை எழுதுக.

03. 1) 7cm விட்டமுள்ள வட்டமொன்றை வரைக. அதில் பரிதியில் யாதேனுமொரு இடத்தில் A எனும் புள்ளியைக் குறிக்குக.
2) AB= 6cm ஆகுமாறு பரிதியில் B எனும் புள்ளியை குறித்து AB ஐ இணைக்குக.
3) கோணம் $A\hat{B}C= 60^0$ ஆகுமாறு பரிதியில் மற்றுமொரு புள்ளி C ஐக் குறிக்குக.
4) AB, BC ஆகிய இருபக்கங்களுக்கும் சமதூரத்தில் இருக்கும் வட்டத்தின் பரிதியில் உள்ள புள்ளியைக் காண்க. அதனை D என்க.
5) மேலே 4 இல் பெறப்பட்ட நாற்பக்கல் எவ்விசேட பெயரால் அழைக்கப்படும் ?
6) $A\hat{D}C$ இன் பெறுமானத்தை அளக்காமல் எழுதுக.
7) நாற்பக்கல் ABCD இன் பரப்பளவில் சமமானதும் நீட்டிய பக்கம் AB இல் E அமையுமாறும் AD ஐ ஒரு பக்கமாகவும் உடைய முக்கோணி ADE ஐ அமைக்குக.

04. a) நகரொன்றில் 70 குடும்பங்களில் மாதமொன்றிற்கு பயன்படுத்திய நீரின் கூறுகளுக்கு ஏற்ப செலுத்தப்பட்ட நீர் வரி தொடர்பான விவரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

செலவிட்ட தொகை (ரூ)	50-100	100-150	150-200	200-250	250-300	300-350	350-400	400-450
குடும்பங்களின் எண்ணிக்கை	6	9	12	19	8	5	4	7

1) ஆகார வகுப்பு யாது?
2) இடையவகுப்பு யாது?
3) இடையவகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாக கொண்டு குடும்பமொன்று மாதமொன்றிற்கு வரியாக செலுத்தும் தொகையைக் காண்க.

b) 1.2, 1.1, 2.2, 3.2, 2.3, 2.4, 2.4 ,2.1 இவ்வெண் பரம்பலின்
1) இடையம்
2) காலணை இடைவீச்சு என்பவற்றைக் காண்க.

05. a) 1) ரூ.15 பெறுமதியான பங்குகளை ரூ.20 வீதம் வாங்குவதற்கு விஜய் ரூ.20,000 முதலீடு செய்தார். வருட இறுதியில் நிறுவனம் 18% பங்குலாபம் வழங்கியது எனின், அவருக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு?
2) விஜய் வருமானத்தைப் பெற்ற பின் வருமானத்தையும், அவர் வைத்திருந்த பங்குகளை ரூபா 23 வீதம் விற்று பெற்ற பணத்தையும், வெறோரு கம்பனியில் ரூபா 25 பங்குகளை சமத்துக்கு வாங்க முதலீடு செய்கின்றார். புதிய கம்பனியில் அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

b) ரூ.26,000 பெறுமதியான தையல் இயந்திரம் ஒன்றை முதலில் ரூ.8,000 ஐச் செலுத்தியும் மீதியை வருட வட்டி 24% படி 1 1/2 வருட சம மாதாந்த தேவணை கட்டணங்களாக செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். 1 மாத தவணைக் கட்டணத்தைக் கணிக்குக.

06. 1) சுட்டி விதிகளைப் பயன்படுத்தி சுருக்குக. $32/200 \times 27^{-1/3} \times (1/2)^0$
2) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் x ஐக் காண்க.
$2\lg x+\lg 5=4\lg 2+ \lg 15+\lg 12$
3) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி $0.7321^2 \times 0.4215/14.12$ இன் பெறுமானத்தைக் காண்க.

பகுதி B

01. a) படத்தில் தரப்பட்டிருப்பது 7r நீளமும், 3r அகலமும் உடைய செவ்வகத்திண்மக கனவுருவின் குறுக்குவெட்டாகும். அதன் அடிப்படையில் நீளப்பக்கமாக விட்டம் r அலகுகள் உள்ள துவாரங்கள் உள்ளன.



1) 7r நீளமும் 3r அகலமும் உடைய செவ்வக பரப்பளவைக் காண்க.
2) குறுக்குவெட்டின் பரப்பு A எனின், $A = 283r^3/14$ எனக் காட்டுக.
3) r = 7cm எனின், குறுக்குவெட்டின் பரப்பளவைக் காண்க.
4) வளையின் நீளம் 4m எனின், இத்திண்மத்தின் கனவளவை கனசென்றிமீற்றரில் தருக.

b) h = 12cm எனின், தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய இக்கூட்டுத்திண்மக் கனவளவைக் காண்க. (10cm சதுர அடியைக்கொண்ட கனவுரு ஒன்றின் மேல் 12cm உயரம் உடைய செங்கூம்பகம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.)



02. a) -256, 128, -64, ...
1) இது எவ்வகையான விருத்தி? காரணம் தருக.
2) தொடரின் ஏழாம் உறுப்பைக் காண்க.
3) 2 இத்தொடரின் எத்தனையாம் உறுப்பாகும் ?
4) தொடரின் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண பொருத்தமான சமன்பாட்டைப் பயன்படுத்துக.

b) 20, a, b, c, d, -5..... இது ஒரு கூட்டல் விருத்தி எனில், a + b + c + d இன் பெறுமானத்தைக் காண்க.

c) 625, 1 இற்கு இடையில் மூன்று பெருக்கல் இடைகளை எழுதுக.

03. a) வட்டத்திற்கு வெளியே உள்ள ஒரு புள்ளியில் இருந்து இரு தொடலிகள் வரைந்தால்,
1) அத்தொடலிகள் சமன்.
2) மையத்தில் எதிரமைக்கும் கோணம் சமன்.
3) தொடலிகளுக்கு இடையில் உள்ள கோணத்தையும் மையத்தையும் வெளிப் புள்ளியையும் இணைக்கும் கோடு இருசமகூறிடும் என நிறுவுக.

b) உருவின்படி மையம் O, PR தொடலி, Q தொடுபுள்ளி எனின், பின்வரும் கோணங்களின் பெறுமானங்களைக் காண்க.
1) OQS
2) QOS
3) QTS



04. கட்டடம் ஒன்றின் உச்சியில் இருந்து அதற்கு நேர் எதிரே தரையில் உள்ள புள்ளி ஒன்றின் இறக்கக்கோணம் $53^0 40'$ என ஒருவர் காண்கிறார். கட்டட உச்சியிலிருந்து 25m கீழே உள்ள ஜன்னலின் ஊடாக அப்புள்ளியை அவதானிக்கும்போது இறக்கக் கோணம் 10^0 இனால் மாற்றமடைவதை அவதானிக்கின்றார். அப்புள்ளியிலிருந்து கட்டடத்திற்கான தூரம் xm எனவும், கட்டடத்திற்கான உயரம் hm எனவும் கொண்டு பின்வருவனவற்றைத் தருக.
1) மேலே தரப்பட்டுள்ள தரவுகளை வென்வரிப்படத்தில் குறித்துக்காட்டுக.
2) திரிகோணகணித விகிதங்களைப் பயன்படுத்தி h,x என்பவற்றைக் காண்க.

05. a) 1) நடுப்புள்ளித் தேற்றத்தை எழுதுக.
2) நடுப்புள்ளித் தேற்றத்தை முறைப்படி நிறுவுக.

b) முக்கோணி XYZ இல் K என்பது YZ இன் நடுப்புள்ளி ஆகும். XM:MZ = 1:2 ஆகும் வண்ணம் XZ இல் M உள்ளது. XK, YM என்பன L இல் சந்திக்கின்றன.
1) XL = LK எனவும்,
2) LM = 1/4YM எனவும் நிறுவுக.

06. a) ξ = { 10 இலும் குறைந்த இயற்கை எண்கள்}
A = {1, 2, 3, 5, 8}
B = {2, 4, 5, 6}
1) இத்தகவல்களை வென்னுருவில் காட்டுக.
2) பின்வருவனவற்றைக் காண்க.
1. A'nB 2. n(B'uA)

b) வென்னுருவில்
n(B) = 20, n(A) = 24, n(C) = 26



வென்னுருவின் தரவுகளைக் கொண்டு பின்வருவனவற்றைக் காண்க.
1) n(AnB)
2) n(A'nBuC)
3) n(AuB)'
4) n(B'nAuC)
5) (BuA)'nC ஐ நிழற்றுக.

ஆசிரியர் : திரு.S.கிருஷ்ணகுமார், நுவரெலியா.

இன்றைய கணித பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரனை வழங்குவது
NSP
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ எழுதத்துணடுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் நிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
NO.5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும்

சிவலிங்கராசா தாரணி

2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :

அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார்.

கைதடி கிழக்கு, கைதடி.

(90233)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1133 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

15 28 35 48

துலாம்

23-10-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,989,350/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	223,348	20/-	4,466,960/-
2 இலக்கங்கள்	20,522	40/-	820,880/-
1 இல. + லக்கினம்	20,102	60/-	1,206,120/-
2 இல. + லக்கினம்	1,815	200/-	363,000/-
3 இலக்கங்கள்	545	1000/-	545,000/-
3 இல. + லக்கினம்	54	10,000/-	540,000/-
4 இலக்கங்கள்	4	200,000/-	800,000/-
4 இல. + லக்கினம்	-	3,989,350/-	-
மொத்தம்			8,741,960/-
வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு	5	100,000/-	500,000/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	266,395		9,241,960/-

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,985,550/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் ஸ்.கதாகரன் கொக்குவில்

கைத்தொலைபேசி வெற்றியாளர் சஜீவனி மென்டிஸ் பழனுகம

2009 ஒக்டோபர் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீங்கள் நற்டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

திருகோணமலை	500636698-8-32
கம்பஹா	500641039-0-39
கண்டி	500626900-9-01
களுத்துறை	500626229-3-01
அம்பாறை	500633720-3-43

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை திருமதி காமினி ரவிதரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் செல்லையா முத்துத்தம்பி

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை) அவர்கள் 14.10.2009 அன்று புத்தளத்தில் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரின் குடும்பத் தாருக்கும் ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய். (90240)

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
16	06
✱	✱
05	11
✱	✱
1946	2008

அமரர் சின்னவி இராசையா

திதி: பூர்வபக்க அட்டமி

வருடம் ஒன்றாகி மாண்டீர் என்று
சொல்ல மனசு மறுக்கிறது
யோசிக்க யோசிக்க நிமிடம் கடந்தாலும் உங்கள்
சிரித்த முகத்தோற்றம் எம் நெஞ்சத்தை
விட்டகலாது அப்பா!

என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.

டாக்டர் சுப்பிரமணியம் றோட், (பழனி கோயிலடி), சுளாவை, கன்னாகம். (90254)

விற்பனைக்கு

SCOOTY PEPT 90C NEWமொடல், A 4D பறினா 1000 மொடல் ஒருகைப் பாவனையில் நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு. குருமாருக்கும் நடமாடும் விற்பனை சேவைக்கும் உகந்தது.

தொடர்பு :- 26, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(கொம்பியூட்டர் சென்ரர் முன்பாக)

டலி ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே !

Don't Settle for Less

2 in 1 Offer

Tally 9

VAT | P/L A/C | Balance Sheet | Payroll | Inventory | Audit | ERP Concept | POS | Excise

" Certified Computer Accountant " மற்றும் Tally நிறுவனம் வழங்கும் இரு சான்றிதழ்களைப் பெற்றிடுங்கள்

The World Largest Tally Academy

ASIAN COMPUTERS

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். TP : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. TP : 021-3734088

குடத்தனைக்கு மின் விநியோகம்

வடமராட்சி, ஒக்.26

வடமராட்சி கிழக்கு, குடத்தனை, பொலிகண்டி மீள்குடியேற்றக் கிராமத்திற்கு கடந்த வியாழக்கிழமை முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் நாகர் கோயில் தெற்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 120 குடும்பங்களுக்கு குடத்தனை, பொலிகண்டி அரச காணியில் யு.என் ஹபிராட் என்ற அரசசார்பற்ற நிறுவத்தின் அனுசரணையுடன் வீட்டுத்திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்த வீட்டுத் திட்டத்தில் குடியேறியோர் தமது வீடுகளுக்கு மின் இணைப்புச் செய்து பல மாதங்களுக்கு மேலாகியும் மின்சாரம் வழங்கப்படாமல் இருந்தது.

இது குறித்து மீள் குடியேற்றவாசிகள் யாழ்.அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்ததையடுத்து இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (1- 236)

இலங்கை வங்கியின் கருமபீடம் ஊர்காவற்றுறைக்கு

ஊர்காவற்றுறை, ஒக்.26

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த இலங்கை வங்கியின் கருமபீடம் அண்மையில் ஊர்காவற்றுறை நவீன சந்தைக் கட்டடத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கி வந்த போக்குவரத்துச் சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளை அலுவலகம் தொடர்ந்தும் வேலணையிலேயே இயங்கி வருகிறது. அதன் ஒரு கரும பீடமே ஊர்காவற்றுறையில் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (203- 16)

கட்டடப் பணிகள் யாவும் நிறைவடைந்தன

சாவகச்சேரி அரசினர் ஆதாரவைத்தியசாலை, கரவெட்டி பிரதேச அரசினர் வைத்தியசாலை, இளவாலை பிரதேச அரசினர் வைத்தியசாலைகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டகட்டடத்தொகுதிகளின் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இக்கட்டடங்கள் அடுத்த வாரமுற் பகுதிக்குள் திறந்து வைக்கப்பட்டுநோயாளர்களின் பாவனைக்குப் பயன்படுத்தப் படும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (203- 28)

படு.ஆதார வைத்தியசாலையில் மரக்கன்றுகள் நடப்பட்டன

வடமராட்சி, ஒக்.26

வடமராட்சி லயன்ஸ்கழகம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பயன் தரும் மரங்கள் பலவற்றை நட்டுள்ளது.

வைத்தியசாலை சுற்றாடல்கள் முழுவதும் இம் மரங்கள் நடப்பட்டுள்ளன. நடப்பட்டுள்ள மரங்கள் வைத்தியசாலை ஊழியர்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (203- 236)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை அதிபர்

திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ்

அவர்கள் அதிபர் தரம் 2-1 இற்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பதவியுயர்வுகள் பல பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

(90233)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த

செல்வி கனகலிங்கம் கலிஸ்ரா

அவர்களையும் இப்பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றி 100புள்ளிகளுக்கு மேல் பெற்ற செல்விகள் கு.லக்சிகா - 130, தே.டனோசிகா - 119, வ.செந்தமிழினி - 110 இவர்களையும் பாராட்டி வாழ்த்து வதுடன் மேலும் கல்வியில் பல சிறப்புக்களையும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை, நீர்வேலி. (90252)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

அருகிவரும் எமது மரபுவழிக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கோடு

திருமறைக் கலாமன்றம் நடத்தும்

கிராமியக் கலைச் சங்கமம்

பிரவேசம் இலவசம்

வட்டுக்கோட்டை - பருத்தித்துறை - இனுவில் -நுலாலி- அரியாலை - கொழும்புத்துறை பிரதேசக் கலைஞர்கள் பங்குகொள்ளும்....

சிலம்பாட்டம், அனுமான் நடனம், பொம்மலாட்டம்- பறவி நடனம், உழவர் நடனம், வேப்பிலை நடனம், காவடி, கோலாட்டம், கும்மி, வில்லிசை, தோல் வாத்தியக் கச்சேரி, தீயாட்டம் போன்றவை

காலம் :- இன்று 26.10.2009 திங்கட்கிழமை

நேரம் :- பி.ப 3.30 மணி

இடம் :- யா/இராமநாதன் மகளிர் கல்லூரி அருணாச்சல மண்டபம், மருதனார்மடம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக்கலா மன்றம், யாழ்ப்பாணம். (சி/558500)

நினைவலைகள்....

முதலாம் ஆண்டு		2 ஆம் ஆண்டு	
தோற்றம்	மறைவு	தோற்றம்	மறைவு
31	05	14	04
★	★	★	★
07	11	06	11
★	★	★	★
1947	2008	1926	2007

திருமதி பாலசுப்பிரமணியம் சோதிமலர் — செல்லத்துரை அன்னம்மா

கண்ணீரோடு கரைந்தனம் அம்மாவே! உங்கள் நினைவு எம்மை வாட்டும்மா
எண்ணத்தில் நிறைந்த தெய்வமே! விண்ணோடு நீங்கள் கலந்தாலும் - என்றும்
இந்த மண்மீது நாம் வாழும் காலமெல்லாம் நம்மோடு உங்கள் நினைவுகள் வாழும்மா.

நெல்லொருபதி, பிள்ளையார் கோயிலடி, தாவடி தெற்கு. (90218)

குடும்பத்தினர் (செ.செல்வராசா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உதயன்' ஊடக அனுசரணையுடன் யாழ்.நகர் மையறோட்டறக் கழகம் நடத்தும் மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். போட்டியாளர் சதுரங்கப் போட்டியில் பங்குபற்றும் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:ஓங்காரன்)

16 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழைக் கோட்ட சம்பியனானது மகாஜன

வலி.வடக்கு, ஒக்.26

தொல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் மிகவும் உற்சாகத் துடன் விளையாடிய போதிலும் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல்கள் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக் கொண்டார்கள்.

இறுதிநேரத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஒரு கோலை பெற்று முன்னணியில் காணப்பட்ட நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

இதனால் மகாஜனக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் அருணோதயாக் கல்லூரியை வெற்றிபெற்று கோட்டச் சம்பியனாகியது.

3ஆம் இடத்துக்கான போட்டியில் மல்லாகம் மகா வித்தியாலயமும் வசாவிளான் குட்டியபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மோதிக்கொண்டன.

இதில் மல்லாகம் மகா வித்தியாலயம் 3:1 என்ற கோல்கணக்கில் குட்டியபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (4-86)

விசேட தேவையுடையோருக்கான தடகளப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்.கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு விசேட தேவையுடையோருக்கான தட களப் போட்டி இன்று திங்கட்கிழமை யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்ளவுள்ளனர். (04-23)

'இளைஞர்களுக்கான நாளை' கிரிக்கெட்

குருநகர் கார்மேல் போயிஸ் அணியை வீழ்த்தி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது ஸ்ரார் அணி

யாழ்ப்பாணம், ஒக்.26

'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டங்களுக்கு இடையில் இடம்பெற்ற 6 பேர் பங்குபற்றும் ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் குருநகர் கார்மேல்போயிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் போயிஸ் விளையாட்டுக் கழக அணி சகல விக்கெட்டினையும் இழந்து 37 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இதில் செல்ரன் 19 ஓட்டங்களையும், சுவதாஸ் 11 ஓட்டங்களையும் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில், மதுஷன், கோபிகன், வாசன், அயன், ஆஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

38 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி இரண்டு விக்கெட்டினை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் அயன் 20 ஓட்டங்களைத் தமது அணிகாகப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் கார்மேல் போயிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் றெக்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (04-23)

'இளைஞர்களுக்கான நாளை' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சம்பியனாகியது குருகர் பாடுமீன்

யாழ்ப்பாணம்.ஒக்.26

''இளைஞர்களுக்கான நாளை'' நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

போட்டி ஆரம்பமாகிய ஒரு நிமிடத்தில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக வீரர் றொக்சா தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் போட்டி மிகவும் சூடு பிடித்துக் கொண்டது.

இந்நிலையில் பாடுமீன் விளையாட்டுக் கழக வீரர் வினோத் 27 நிமிடத்தில் தனது அணிக்கான முதல் கோலை அடித்தார். இந்த நிலையில் 1:1 என்ற நிலையில் முதற்பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் மேலும் கோல்களைப் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கினர்.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கி முடியும்வரை இரண்டு அணிகளும் விறுவிறுப்புடன் விளையாடிக் கோல்கள் பெறுவதற்கு பெரும் முயற்சி மேற்கொண்ட போதிலும் போட்டி முடிவடையும்வரை இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. இதனால் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது.

எனவே தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளில் முதல் ஐந்தில் இருஅணிகளும் தலா மூன்று கோல்கள் பெற்று சமநிலையில் இருந்தனர்.

எனினும் 6வது உதையை குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் சரியாக பயன்படுத்தி வெற்றியைத் தனதாக்கியது.

ஆட்டநிறைவில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல்கணக்கில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (04-23)

18 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்

ஸ்கந்தாவை வீழ்த்தி தெல்லிப்பழைக் கோட்ட சம்பியனாகியது ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி.!

வலி.வடக்கு, ஒக்.26

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப்பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இருஅணிகளும் கோல்கள் பெற எடுத்த எந்தவொரு முயற்சியும் கைக்கூடாத நிலையில் நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய வீரர்கள் உத்வேகம் கொண்டு விளையாடியதுடன் எதிரணியினரின் கோல்கம்பத்தை நெருங்கிக்கொண்டே இருந்தார்கள்.

இந்நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மூன்று கோல்களை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் பெற்றுக்கொண்ட நிலையில் ஆட்டம் முடிவுற்றது.

இதனால் ஆட்ட நிலையில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 3:0 என்ற கோல் கணக் கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி பெற்று கோட்டமட்டச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சுன்னாகம் மயிலணி சைவ மகஜனா வித்தியாலயமும் இணுவில் இந்துக்கல்லூயும் மோதிக் கொண்டதில் சுன்னாகம் மயிலணி மக ஜன வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் இறுதியில் இந்துக்கல் லூரியை வெற்றி கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(04-86)

ஊசி நூல்கோர்த்தல் (பெண்)

லே. சிவாயநமதேவி (சங்கானை), கி. பொன்னம்மா (கைதடி முதியோர் இல்லம்), ந.கமலாதேவி (கோப்பாய்).

சங்கீதக்கதிரை (ஆண்)

ந.வைரமுத்து (சண்டிலிப்பாய்), க.சரவணமுத்து (சண்டிலிப்பாய்), எஸ்.சர்வானந்தம் (சண்டிலிப்பாய்)

பெண்

ச.இராஜேஸ்வரி (சங்கானை), ஜெ.பாக்கியலட்சுமி (சண்டிலிப்பாய்), இ.தவமணி (கரவெட்டி).

பலூன் ஊதி உடைத்தல் (ஆண்)

செ.மகேந்திரன் (சண்டிலிப்பாய்), க.மகேசன் (சங்கானை), செ.யோகநாதன் (கோப்பாய்).

பெண்

எஸ்.லூட்ஸ் (கைதடி முதியோர் இல்லம்), ஜெ.பாக்கிலட்சுமி (சண்டிலிப்பாய்), ந.கமலாதேவி (கோப்பாய்). (04-23-86)

முதியோர், மாற்று வலுவுடையோருக்கான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு.ஒக்.26

வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தால் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே முதியோர் மாற்று வலு உடையவர்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய முதியவர்களின் விவரங்கள் வருமாறு-

அப்பிள்பழம் சாப்பிடுதல் (ஆண்)

க. வைரமுத்து (சண்டிலிப்பாய்), செ. யோக நாதன் (கோப்பாய்), எஸ்.சிவப்பிரகாசம் (சங்கானை).

பெண்

ச.இராஜேஸ்வரி (சங்கானை), செ.பாக்கியம் (சண்டிலிப்பாய்), பா.அன்னலட்சுமி (சண்டிலிப்பாய்).

கிடுகு பின்னுதல் (ஆண்)

பொ. செல்வநாயகம் (கைதடி முதியோர் இலலம்), வை. திருவாதவூரன் (கரவெட்டி), செ.யோகநாதன் (கோப்பாய்).

பெண்

ச.புஸ்பராணி (சண்டிலிப்பாய்), வே. சிவாயநமதேவி (சங்கானை), ஜெ.பாக்கியலட்சுமி (சண்டிலிப்பாய்).

100 மீற்றர் ஓட்டம் (ஆண்)

மா. பஞ்சரத்தினம் (சங்கானை), எஸ். மகேந்திரன் (சண்டிலிப்பாய்), க.திருவாதவூரன் (கரவெட்டி).

பெண்

பா. அன்னலட்சுமி (சண்டிலிப்பாய்), ந.கமலாதேவி (கோப்பாய்), க.திருத்தேவி (உடுவில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வீணை' சஞ்சிகை வெளியீட்டு விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய உபதலைவர் ஐ.சாந்தன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரகுமார், யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் நூலை வெளியிட்டு வைக்க யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் பெற்றுக் கொள்வதை நான்காவது படத்திலும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பொருளாளர் கவிஞர் சோ.பத்மநாதன் கருத்துரை வழங்குவதை ஐந்தாவது படத்திலும் சஞ்சிகையின் ஆசிரியர் இப்று அஸ்மத் ஏற்புரை வழங்குவதை ஆறாவது படத்திலும் காணலாம். (படங்கள்: உமா)

நம்பகத் தன்மையுடைய யதார்த்தமான இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும்

"வீணை" சஞ்சிகை வெளியீட்டில் அமைச்சர் டக்ளஸ்

''நம்பகத்தனமாக யதார்த்தரீதியில் இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும்.

நச்சுத்தனமான படைப்புகளை எழுத்தாளர்கள் படைக்கக் கூடாது. சாத்தியமற்ற கற்பனாவாத சித்தரிப்புகளை இனிவருங் காலங்களில் அனைவரும் புறக்கணிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் 'சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நேற்று 'வீணை' கலை, இலக்கியச் சஞ்சிகையின் வெளியீட்டு வைபவம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய உபதலைவர் எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அமைச்சர் உரையாற்றினார். அப்பொழுதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் மேலும் கூறியவை வருமாறு:

இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகைகளில் இருந்து 'வீணை' சஞ்சிகையானது மாறுபட்ட ஒன்றாக இருக்கும். நம்பகத்தனமான யதார்த்த படைப்புகளை 'வீணை' ஏற்றுப் பிரசுரிக்கும். நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனாவாதப் படைப்புகளை அது நிராகரிக்கும் -என்றார்.

தலைமையுரையில் எழுத்தாளர் ஐ.சாந்தன் கூறியதாவது:

சமகால உலகம் சந்தித்த பெரும் வரலாற்று அவலமொன்றைத் தாண்டிக்கொண்டிருக்கிறோம்.

இந்த அவலத்தின் பாதிப்புகளிலிருந்து எமது சமூகத்தை மீட்டு, மீண்டும் ஏற்றமுற வாழவைப்பது எம்முன் உள்ள உடனடிக் கடமை. எமது சமூகத்தின் அகக்கட்டுமானமும், மீள்நிர்மாணமும் கோரி நிற்கிறது.

இனத்தைக் காத்தல், சமூகத்தைக் காத்தல் என்பவற்றிற்கு ஆதாரமாக மொழியைக் காத்தல் என்பது முன் தேவையாகிறது.

தமிழ்மொழியைக் காக்கவும், பேசவும் வேண்டிய கடமையும் தமிழைத் தமிழாகவே எதிர்காலத்திடம் கையளிக்க வேண்டிய பொறுப்பும், சாத்தியமும் இத்தனைகும் மத்தியில் ஈழத்தவர்களுக்குத்தான் உண்டு.

வீழ்ந்து கொண்டிருக்கும் விழுமியங்களையும் மீட்டு மீள்கட்டுவது அவசியமாகின்றது- என்றார்.

சிறப்பு அதிதி உரையில் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் கூறியவை வருமாறு:

உலக இலக்கியங்களுடன் ஒப்பீட்டளவில் தமிழ் இலக்கியங்கள் எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல.

கடந்த 3 தசாப்தங்களாகப் படைப்பாளிகளை கட்டுப்படுத்தி சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் உருவான இலக்கியங்களிளே இருந்து வந்தன. 'வீணை' சஞ்சிகையின் வருகை ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஒரு புதிய உந்துதலை வழங்கும் என்று எதிர்பார்க்கலாம் - என்றார்.

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரகுமார் பேசியபோது:

முன்பெல்லாம் ஒரு பக்கப் பார்வையை மட்டும் பிரதிபலிக்கும் படைப்புகளையே எழுத்தாளர்கள் எழுதவேண்டுமென்ற நெருக்குவாரம் இருந்தது. தற்சமயம் மாற்றுக் கருத்துடையவர்களும் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகக் கூறக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது- என்றார்.

முருகையா, கோமகன், கவிஞர் சோ.பத்மநாதன், ஆறு.திருமுருகன், வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். இதழாசிரியர் இப்று அஸ்மத் நன்றி தெரிவித்தார்.

(203-160)

தனியே வாழ்ந்த வயோதிபரின் வீட்டுச் சூழல் பொலிஸாரால் துப்புரவு

சண்டிலிப்பாய், ஒக்.26

எவருடைய உதவியுமின்றித் தன்னந்தனியே வசித்து வந்த வயோதிப மாது ஒருவரின் வீட்டுச் சுற்றாடலை பொலிஸார் இளைஞர்களின் உதவியுடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளனர்.

நவாலி முருகமூர்த்தி ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டில் எண்பது வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் எவருடைய உதவியுமின்றித் தனிமையில் வாழ்ந்து வந்தார்.

இவர் வாழ்ந்து வரும் வீடு, கிணறு, காணி போன்றவை சுகாதாரம் அற்ற முறையில் குப்பை கூழங்களாகக் காட்சியளித்தது. இவருக்கு உதவி செய்ய எவரும் முன்வரவில்லை.

வயோதிப மாதுவின் பரிதாபகரமான வாழ்க்கை நிலைபற்றிக் கேள்வியுற்ற மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திர ஜெயவீர தலைமையிலான குழுவினர் குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்று அப்பகுதியிலுள்ள இளைஞர்களின் உதவியுடன் வீடு, கிணறு, காணி போன்றவற்றைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்ததுடன் சுகாதாரமான முறையில் வாழ்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டனர். (203-115)

கிணறுகள் புனரமைப்பு

நாவற்குழி, ஒக்.26

'கெயர்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் கைதடியில் கிணறுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கைதடி, மூர்த்தியாவத்தையிலுள்ள விவசாயக் கிணறு ஒன்றும் கைதடி மத்தியிலுள்ள பொதுமக்கள் பாவனையிலுள்ள குடி தண்ணீர் கிணறு ஒன்றுமே இவ்வாறு முதற்கட்டமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (203-288)

சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.26

தென்மராட்சிப் பிரதேச சிறுவர்தின விழா கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு யாழ். மாவட்ட ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திட்ட உதவி இணைப்பாளர் எஸ்.கேதீஸ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

விழாவில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (203-207)

கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

கசிப்பு வைத்திருந்த கொடிகாமத்தைச் சேர்ந்த பெண்மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்தப் பெண்மணி ஏற்கனவே இரு தடவைகள் கசிப்பு வைத்திருந்தமைக்காக நீதிமன்றில் அபராதம் செலுத்தியதை நீதிவானின் கவனத்திற்குச் தெரிவித்ததையடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 25 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (203-207)

ஜி.சீ.ஈ சாதாரணதர மாணவர்களுக்கு தென்மராட்சியில் பயிற்சிப்பட்டறை

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ''இளைஞர்களுக்கான நாளை'' நிகழ்ச்சித் திட்டத்தின் குழுவைச் சேர்ந்த பிரதமரின் ஊடகச் செயலாளர் சீவரத்தின குழு இணைப்பாளர்களான திருமதி சாவித்திரி, திருமதி சிறியாணி, யாழ்.மாவட்ட இணைப்பாளர் தேசப்பிரிய, சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பட்டறையில் பங்கு பற்றத் தெரிவு செய்யப்பட்ட 500 மாணவர்களுக்குத் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கிய கைநூலும் வழங்கப்பட்டது. (203- 207)

தற்பொழுது ஈகிள் இன்சூரன்சின் புதிய கிளை யாழ். நகரில்

இலங்கையின் வடபகுதியில் வரவேற்கத்தக்க பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதையடுத்து, 30 வருட மோதல்கள் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதன் கதவுகளைத் திறந்து. அங்கு வாழும் மக்கள் மத்தியில் சுபீட்சத்தையும், மனஅமைதியையும் ஏற்படுத்துவதற்கு ஈகிள் இன்சூரன்ஸ் தற்பொழுது முற்றிலும் தயார் நிலையிலுள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் கிளைகள் திறக்கப்பட்டவுடன் ஈகிள் இன்சூரன்ஸ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதன் சேவையை மேலும் விஸ்தரிக்கவுள்ளது. ஈகிள் இன்சூரன்ஸ், ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது. 1999ஆம் ஆண்டு தொடக்கம் அம்பாறையிலும், அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலையிலும் அது செயற்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் கிளைகள் திறக்கப்பட இருப்பதையடுத்து, வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஈகிள் இன்சூரன்ஸின் கிளைகளின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கும், இதன் மூலம் அது, வடக்கு கிழக்கு மக்களுக்குக் காப்புறுதியை அளிப்பதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. தீபால் சூரியஆராச்சி இது பற்றிக் குறிப்பிடுகையில், ''யாழ்ப்பாணத்தில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு எமது புதிய சேவைகளையும் காப்புறுதித் திட்டங்களையும் வழங்கி, பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை உணர்வை அவர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்புக்காக நாம் ஆவலுடன்காத்திருந்தோம். யாழ்ப்பாணத்தில் எமது கிளை திறக்கப்படுவது குறித்து நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். அமைதியான சூழ்நிலையில் யாழ்ப்பாணம் முன்னேற்றமடைவதைக் காண்பதற்கு நாம் ஆவலாக உள்ளோம்'' என்று கூறினார்.

நகரின் மையப்பகுதியில், இலகுவில் சென்றடையக்கூடிய விதத்தில், யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி, 62/6ஆம் இலக்கத்தில் அமைந்திருக்கும் எமது கிளையின் ஊடாக யாழ்ப்பாண வாடிக்கையாளர்கள் ஆயுள் மற்றும் பொதுக்காப்புறுதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். ஈகிள் இன்சூரன்ஸின் யாழ்ப்பாணக் கிளையில் முற்றிலும் அப்பிரதேசத்தில் இருந்து சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்களே சேவையாற்றுவார்கள். யாழ்ப்பாணப் பிரதேச மக்களுக்கு நாம் மேலும் வேலைவாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

அவிவா பற்றி

அவிவா உலகின் ஐந்தாவது மிகப் பெரிய காப்புறுதி நிறுவனக் குழுமமாகும். அது, ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆசிய பசுபிக் ஆகிய பிராந்தியங்களில் 50 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. நீண்டகால சேமிப்புகள், நிதி முகாமைத்துவம் மற்றும் பொதுக்காப்புறுதி ஆகியவாவின் பிரதான வர்த்தக நடவடிக்கைகளாகும். 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆந் திகதியில் அவிவாவின் உலகளாவிய மொத்த விற்பனை 51.4 பில்லியன் பவுண்களாகும். 381 பில்லியன் பவுண் நிதிகளை அது நிர்வகித்து வருகின்றது. அவிவா ஐக்கிய இராச்சியத்தில் மிகப்பெரிய காப்புறுதிச் சேவை வழங்குநராகவும், ஐரோப்பாவில் முன்னணி ஆயுள்காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டங்களை வழங்கும் நிறுவனமாகவும் விளங்குகின்றது (2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் உலகளாவிய மொத்த காப்புறுதிக் கட்டுப்பணத்தின் அடிப்படையில்) ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அவிவா சீனா, இந்தியா, கொரியா, இலங்கை, ஹொங்கொங், சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், மத்திய கிழக்கு ஆகிய பிராந்தியங்களில் செயற்பட்டு வருகின்றது. அவிவாவின் நீண்டகால அடிப்படையிலான சேமிப்புக்கள் மற்றும் சேவைகள் பல அலைவரிசை வலையமைப்பின் ஊடாக விநியோகிக்கப்படுகின்றன. நேரடி விற்பனை ஆளணி, காப்புறுதித் தரகர்கள், Báncassurance பங்காளிகள் ஆகியோர் இவற்றில் அடங்கியுள்ளனர். 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அவிவா குழுமம் ஈகிள் இன் சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான பங்குகளைக் கொள்வனவு செய்தது.

ஊடக விசாரணைகளுக்கு:

நிஷாந்தி குணவர்த்தன- சிரேஷ்ட அதிகாரி, ஒன்றிணைந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல், ஈகிள் + 94112310078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகர சபையின் முதல்வர் அலுவலகம் நேற்று தமிழ்க் கலாசார முறைப்படி திறந்துவைக்கப்பட்டது.
யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ மங்கள விளக்கேற்றுவதையும் சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆணையாளர் ஆகியோர் இறைவழிபாட்டின் பின் படங்களை ஊர்வலமாக எடுத்து வருவதையும் முதல்வர் திருமதி யோகேஸ்வரி அலுவலகத்தில் படம் வைப்பதையும் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ சம்பிரதாயப்படி பால் காய்ச்சுவதையும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

பாரம்பரிய தட்டிவான் பயணம் மீண்டும் அம்பனை வீதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும்

மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழா வைபவத்தில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஒக.26

'அழகான பண்பாட்டுச் சூழலில் அமைந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின்கல்விப்பணி ஈடில்லாதது. அதன் ஊடாக மனித முழுமைக்கான அறிவுதிறனை மகாஜன்கள்பெற்றுக் கொண்டார்கள். உலகளாவி உயர்நிலைகளில் விளங்கும்மகாஜனன்களால் மகாஜன இடர்களை எல்லாம் தாண்டி நிமிர்ந்து நிற்கின்றது. மகாஜனவின் இயல்பான சூழமைவினை மீள காண்பதற்கான நிகழ்ச்சி நிரல் இந்த நூற்றாண்டு விழா செயற்திட்டங்களில் முதன்மை பெறவேண்டும்

இதன் வழி அம்பனை வீதியில் மீண்டும் எங்கள் பாரம்பரிய தட்டிவான் பயணம் தொடங்கப்பட வேண்டும். எங்கள் மகாஜன சூழமைவினை பாரம்பரிய கிராமங்களான கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான், தெல்லிப்பழை, அம்பனை, கொல்லங்கலட்டி,மாவிட்டபுரம், பன்னாலை ஈறான கிராமங்கள் மீள் உயிர் பெறவேண்டும். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக்கால தொடக்க வைபவமாக ஒய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும்போது கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் நா. சண்முகலிங்கன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நிகழ்ந்த இந்த வைபவத்தில் அவர் மேலும் தமது உரையில் தெரிவித்ததாவது:-

அன்னை, தந்தை, ஆசிரியர் ஆகியோரை மதித்துப் போற்றும் மாணவர்கள் உயர் நிலை அடைகின்றார்கள். அர்ப்பணிப்புடன் பணி புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய ஊழியர்களைக் கௌரவிக்கும் கல் லூரிகள் மேம்பாடு காண்கின்றன. இந்த வகையில் மகாஜனக் கல்லூரியின் மேலான பாரம்பரியத்துக்குச் சான்றாக நூற்றாண்டுவிழாவின் தொடக்க வைபவமாக, மகாஜன சான்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறுவது பெருமைக்குரியது- என்றார்.

கல்லூரி வளாகத்தில் அமைந்த சிவகாமி சமேத ஆனந்த நடராஜர் சந்நிதியில் ஆராதனையுடன் ஆரம்பமான இந்த வைபவத்தில் மகாஜன சான்றோர்களுக்கு மலர்மாலைகளை மாணவர்கள் அணிவித்தார்கள். பழம், பூ கொண்ட காணிக்கைகளையும் வழங்கினார்கள். துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கனும்,திருமதி கௌரிசண்முகலிங்கனும் நினைவுக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தனர். (அ)

மண்கும்பானில் புனரமைக்கப்பட்ட பாலங்களைத் திறக்கக் கோரிக்கை

நல்லூர்,ஒக.26

யாழ்ப்பாணம், குறிகாட்டுவான் ஊர்காவற்றுறை வீதியில் மண்கும்பானில் புனரமைக்கப்பட்ட பாலங்கள் இரண்டும் போக்குவரத்துக்காகத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் கோருகின்றனர்.

இந்த இரண்டு பாலங்களினதும் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்து ஒருமாதத்திற்கும் மேலாகிறது எனவும் கொங்கிறீட் வேலைகள் அனைத்தும் முடிவுற்றதால் வீதியைத் திறந்து போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

மழைக்காலம் ஆரம்பமாகவுள்ளதால் தற்காலிக வீதிகளை அந்த வேளையில் பயன்படுத்த முடியாது. வாகனப் போக்குவரத்தில் பல கஷ்டங்களை நோக்க வேண்டியிருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

(203-111)

வலி.மேற்கில் எண்ணெய் வித்துகளை அதிகரிக்கப் புதிய திட்டம் முன்னெடுப்பு

சித்தங்கேணி,ஒக.26

வலி.மேற்குப் பிரதேசத்தில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளைவட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் சூரியகாந்தி, எள், தென்னை, காட்டாமணக்கு போன்றவற்றின் உற்பத்திகளை அதிகரித்துள்ளது. அதன்படி ஆமணக்கு விதை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கமைய தரிசு நிலங்களை விளை நிலங்களாக்கி இயற்கை வழிமுறையில் ஆமணக்கு விதை உற்பத்தியினை மேற்கொள்ளும் முயற்சியில் ஆர்வமுடையவர்களை இணங்கண்டு வருகிறது. உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கோடு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் இலவசமாக நல்லின வித்துக்களையும் வழங்குவதுடன் உற்பத்தி செய்யப்படும் வித்துக்களை விலை நிர்ணயம் செய்து அவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது விடயமாக இணங்காணப்பட்ட பயனாளிகளுக்கு வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தில் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருவதாகவும் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஐ.சௌந்தரராசா தெரிவித்துள்ளார்.

(203-112)

நீரிறைக்கும் இயந்திரங்களைத் திருடினாராம்; சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்

சண்டிலிப்பாய்,ஒக.26

இரவுநேரம் மூன்று வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று தண்ணீர் இறைக்கும் மின்சார இயந்திரங்களைத் திருடிச் சென்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டுப்போன மோட்டர்களை விற்பனை செய்யப்பட்ட இடங்களிலிருந்து கைப்பற்றிய பொலிஸார் சந்தேக நபரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிவான் அவரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள மூன்று வீடுகளுக்கு இரவுநேரம் சென்ற திருடர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த மூன்று மின்சார இயந்திரங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுப்பற்றி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திர ஜெயவீர தலைமையிலான குழு மேற்கொண்ட தீவிர விசாரணையைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் கூறிய தகவலைத் தொடர்ந்து திருடப்பட்ட மோட்டர்களை விற்பனை செய்யப்பட்ட இடங்களிலிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தத் திருட்டுத் தொடர்பாக மேலும் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

(203-115)

இரத்ததான வாரம் 24 தொடக்கம் 30 வரை

இரத்ததானம் - பாதுகாப்பானது.

★ இரத்ததானத்தின் முன், இரத்தம் வழங்குவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும்.
★ பின்னர் நாடித்துடிப்பு, குருதி அமுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும்.
★ குருதிக் கொடையாளர்களின் உடல் நிறையும் குருதிச் செறிவும் அளக்கப்படும்.
★ உணவு, நீராகாரம் உட்கொண்ட விவரம் கேட்டு உறுதி செய்யப்படும்.
★ உடலில் உள்ள குருதியில் 10% குருதியே பெற்றுக் கொள்ளப்படும்.
★ குருதி வழங்கலின் பின்னர் நீர் ஆகாரமும் வழங்கப்படும். சற்று நேரம் ஓய்வாக இருக்க வேண்டும்.
★ குருதி வழங்கலின் பின்னர் கடைப்பிடிக்க வேண்டியவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். 021 2223063

வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
பிரதேச செயலர் திருமதி தே.பாபு, மேலதிக அரச அதிபர் திருமதி [illegible] மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் இறைவணக்கம் இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும் சிறுவர், முதியோரை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: காந்தன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத் திருநாள் திருப்பலி அண்மையில் இடம்பெற்றது. திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதையும் குருத் தளத்துக்கு வழிகாட்டியாக அமைக்கப்பட்ட அன்னையின் திருவுருவச் சிலைக்கு நேர்த்தியளிப்பதற்கு ஆலயத்தில் இருந்து பவனி வருவதையும் புதிய உருவச் சிலையை அருட்தந்தை ஆர்.பி.ஜி.நேசநாயகம் அடிகள் திரைநீக்கம் செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சரவணன்)

அகதிகள் விடயத்தில் இலங்கைக்கு ஜப்பானும் அழுத்தம் தரவேண்டும்

அந்நாட்டு அரசிடம் மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.26

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உரிய தீர்வுத் திட்டங்களை வழங்குமாறு ஜப்பானிய அரசு, இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

2லட்சத்து 50ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஜப்பானிய அரசு இலங்கையில் மனிதாபிமான நிலைமைகள் குறித்து சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டுமென எழுத்து மூலமாக கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பான கடிதமொன்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கட்சுயு ஒக்கடாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளாலும், அரச படையினராலும் மேற்கொள்ளப்பட்டதாகச் சுமத்தப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய நாடு என்ற வகையில் ஜப்பான் காத்திரமான் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைக் கண்காணிப்பகம், அஹிம்சை சமாதானப் படையணி, 'ஹியூமன் ரைட்ஸ் நௌவ்', சர்வதேச மன்னிப்புச்சபை, சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான சர்வதேச அமைப்பு உள்ளிட்ட முக்கிய மனித உரிமை அமைப்புகள் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

முகாம் மக்களை விடுவிப்பதற்கும், அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்கவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய வல்லமை ஜப்பானிடம் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்படுவதற்கு ஜப்பான் வலியறுத்த வேண்டுமென குறித்த மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (சி)

பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் -ஒக்.26

மல்லாகம் குளமங்கால் றோ.க. வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் செல்வி அ.றோ. ஜெயநாயகி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் பொ. நாகரத்தினம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ந. ஜெயசீலன் கலந்து கொள்வார்.

(1-10)

கிழக்கில் எந்த இடத்திலும் சட்டவிரோதக் குடியேற்றம் நடைபெறவில்லை என்கிறார் அமைச்சர் புஞ்சிநிலமே

சம்பந்தன் திரிபுபடுத்திக் கூறுவதாக மறுப்பு

கொழும்பு, ஒக்.26

திருகோணமலை உள்ளிட்ட கிழக்கில் எந்த இடத்திலும் சட்டவிரோதக் குடியேற்றம் எதுவும் இடம்பெறவில்லை என்றும் வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே மீள்குடியேற்றம் இடம்பெறுகின்றது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பாக விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

திருகோணமலையில் சட்டவிரோதமான முறையில் மீள்குடியேற்றம் எதுவும் இடம்பெறவில்லை. வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தான் மீள்குடியேற்றம் இடம்பெறுகிறது.

பயங்கரவாதம் காரணமாகத் திரு மலையில் இருந்து இடம்பெயர்ந்த சிறுபான்மை இன மக்கள் அவர்களின் சொந்த இடங்களில்தான் மீள் குடியமர்த் தப்படுவர்.

கிண்ணியா முதல் நிலாவெளி வரை குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் சட்டவிரோதமான முறையில் குடியமர்திருந்தால் அவர்கள் அங்கிருந்து அகற்றப்படுவர்.

அதேபோல் காணி இல்லாதவர்களுக்குக் காணி வழங்கவும் நாம் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்போம். சட்டவிரோதக் குடியேற்றம் இடம்பெறுவது உண்மையென்றால் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடிய கூட்டமைப்பு ஏன் இதை ஜனாதிபதியிடம் கூறவில்லை? சட்டவிரோதமான முறையில் காணிகள் பணம் கொடுத்து வாங்கப்பட்டாலும் அது ரத்துச் செய்யப்படும். ஆனால் உண்மையில் சட்டவிரோதக் குடியேற்றம் இடம் பெறவில்லை. சம்பந் தன் இதைத் திரிபுபடுத்திக் கூறுகிறார்.

சர்வதேசத்தின் விருப்பத்துக்கு ஏற்பவே சம்பந்தன் பேசுகிறார். அந்நாடுகளிடமிருந்து இன்னும் டொலர்களை எதிர்பார்த்துத்தான் சம்பந்தன் பேசுகிறார் என நினைக்கிறேன்.

திருகோணமலையில் மாத்திரமின்றி வடக்கு - கிழக்கின் எந்தப் பகுதியிலும் ஓர் அபிவிருத்தியைக்கூடச் செய்யாத கூட்டமைப்பு அரசு மீது குற்றஞ்சாட்டுகிறது. ஆனால், எமது அரசு அங்கு அபிவிருத்திகளை மேற்கொள்வதோடு தமிழ் இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

அந்த இளைஞர்களுக்குத் தொழில் வழங்குவதற்காக தொழில்பேட்டை அமைப்பதை எதிர்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் அந்த இளைஞர்களைப் பயங்கரவாதத்தின் பக்கம் அழைத்துச் செல்ல முற்படுகிறது'' - என்றார். (சி)

தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீடு/காணி விற்க/வாங்க கனடாவில் தொடர்பு கொள்ளவும்.

திருமதி செல்வி
0014163470320

(சி/561844)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்லத்துரை சுதர்சன்

பி.திகதி: 10.04.1979 இ.திகதி: 29.10.2006

திதி: 26.10.2009

தகவல்: ஜேர்மனி. குடும்பத்தினர்.

(90278)

நீங்காத நினைவில் 10ஆம் ஆண்டு

தோற்றம் 07 • 01 • 1932

மறைவு 26 • 10 • 1999

அமரர் சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன்

7 ஆம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். (90274)

மனைவி-பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் சகோதரர்கள் குடும்பங்கள்.

தேவை

எமது நிறுவனத்திற்கு வெளிக்கள வேலைகள் செய்வதற்கு ஆண் உதவியாளர்கள் உடன் தேவை.

S.S யசோதரன் ஆட்ஸ்,
356,K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்குண்டு

சாவகச்சேரி, பெருங்குளம் சந்திக்கும், டச்சு றோட்டிற்கும் இடையில் 7 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. அதில் 3 பரப்புக் காணி பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு:

ஆறுமுகம் ஸ்ரீபாலகிருஷ்ணா
T.P : 0771516014

(சி/90280)

டயானா பிளாஸ்டிக் தொழிலகம்

சகலவிதமான மோட்டர் சைக்கிள் மற்றும் வாகனங்களின் உடைந்த பிளாஸ்டிக்கிலான பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

இல.06.கனகசபைலேன், சிவலிங்கப் புளியடி, K.K.S. வீதி. யாழ். தொ.பே:-0212228680

(சி/561835)

தவறிவிட்டது

கேனியடி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியுடைய கனகலிங்கம் ஜீவநாயகி என்பவரின் தேசிய அடையாள அட்டை (556732949 V) விரேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0771710362, 0214590193 அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(90272)

தவறிவிட்டது

20.10.2009 செவ்வாய்க்கிழமை அருணாச்சலம் முகாம் செட்டிகுளத்தில் இருந்த மக்களை யாழ்ப்பாணம் அழைத்துவந்த போது அவர்களின் உடமைகள் யாவும் (பொதிகள், 'பாக்கு'கள்) நீலநிற (ஹன்டர்) லொறியில் ஏற்றி வரப்பட்டன. இவற்றில் எமது முக்கியமான ஆவணங்களும் உடுப்புக்களும் அடங்கிய பொதி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இப்பொதியைக்கண்டவர் / தவறுதலாகஎடுத்துச் சென்றவர்கள் அவற்றை எங்களிடம் ஒப்படைக்குமாறு மிகவும்தாழ்மையாககேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு :- இன்பரதி
தொ.பே- 0779862908, 0770762039

(90284)

31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அமரர் கதிரவேலு கந்தையா

கடந்த 26.09.2009 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (26.10.2009) திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய முகவரி: கிறேசர் லேன், தெல்லிப்பழை,
தற்காலிக முகவரி: கட்டுவன் வீதி, மல்லாகம்

தகவல், குடும்பத்தினர்.

(90275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கில் நேற்றைய குண்டுத் தாக்குதல்களில் 65 பேர் பலியாகினர்; 180 பேர் படுகாயம்!

பாக்தாத், ஒக். 26

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் அரச கட்டடங்களை இலக்கு வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப் பட்ட இரு குண்டுத்தாக்குதல்களில் 65 பேர் கொல்லப்பட்டனர். 180 பேர் வரை காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பாக்தாத் மாகாண நிர்வாகத் தலைமையகத்துக்கு முன்னால் சில நிமிட இடைவெளிக்குள் இவ்விரு தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன. இதன் அருகில்தான் நீதியமைச்சின் கட்டடம் அமைந்துள்ளது. அத்துடன் இப் பகுதியிலேயே அநேக அரச கட்டடங்களும், நிறுவனங்களின் கட்டடங்களும் அமைந்துள்ளன.

"காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்லப் பட்டார்கள். இவர்கள் அம்புலன்ஸ் வாகனங்கள், தனியார் வாகனங்கள ஆகியவற்றில் கொண்டுசெல்லப்பட்டனர். பலர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர்'' என ஈராக்கிய பொலிஸ் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

''குண்டுகள் வெடித்ததையடுத்து, அப்பகுதியை கரும் புகை மண்டலங்கள் மூடின. குண்டுகள் வெடித்த இடத்துக் கருகில் நிறுத்தப்பட்டிருந்த பல வாகனங்களும் சேதமடைந்தன. தலைமையகக் கட்டடத்தின் முகப்புப் பகுதி தகர்ந்து விட்டது'' என்றும் அவர் மேலும் விவரித்தார்.

''குண்டுகள் வெடித்ததும், அப்பகுதி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. முக்கிய பாதைகள் மூடப்பட்டன. பலியானோரில் பெண்களும், குழந்தைகளுமடங்குவர். இக்குண்டுத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் உரிமை கோரவில்லை'' என்றும் அப்பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

ஈராக்கிய முக்கிய நகரங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவந்த அமெரிக்கத் துருப்புகள், ஜூன் மாத இறுதியில் அந்நகரங்களை விட்டு வெளியேறின. பாதுகாப்புப் பொறுப்பை ஈராக்கிய துருப்புகள் கையேற்றன. இதன்பின்னர், தீவிரவாதத் தாக்குதல்கள் ஆங்காங்கு மீண்டும் தலைதூக்கிவிட்டன என அதிகாரியொருவர் கவலை தெரிவித்தார்.

பிரேஸில் சிறையில் கலவரம்: தீவைப்பு; 7 கைதிகள் பலி!

ரியோ டி ஜெனிரோ, ஒக். 26

பிரேஸிலின் வட கிழக்குப் பகுதியில் ஜொவா பெசோவா என்ற இடத்திலுள்ள சிறையில் 860 தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சிறையில் கைதிகளிடையே மோதல் வெடித்து கலவரமாக மாறியது. அப்போது மூட்டப்பட்ட தீக்கு 7 கைதிகள் பலியானார்கள்.

இதையடுத்து, சிறைக்குள் இரு கோஷ்டிகளும் அடிதடியிலும் தீ வைப்பிலும் ஈடுபட்டன. இதில் 5 கைதிகள் அடைக்கப்பட்டிருந்த ஒரு அறையிலும் தீ வைக்கப்பட்டது.

இதில் அந்த 5 கைதிகளும் உடல் கருகி பலியாயினர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி பலியாயினர்.

மேலும் தீயில் கருகிய 48 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தச் சிறையில் மோதல்கள் நடப்பது புதிதல்ல. இதுவரை 15 பேர் இங்கு நடந்த மோதல்களில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பன்றிக்காய்ச்சல் அச்சுறுத்தல்; அமெரிக்காவில் அவசர நிலை

அமெரிக்காவில் பன்றிக்காய்ச்சலுக்குப் பலியானோரின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டிவிட்டது. இதையடுத்து, அங்கு தேசிய அவசர நிலையை ஜனாதிபதி பராக் ஒபாமா பிரகடனப்படுத்தியுள்ளார்.

உலகம் முழுவதும் வேகமாகப் பரவி பல ஆயிரம் உயிர்களைப் பறித்துள்ள பன்றிக்காய்ச்சல் சற்றும் தொய்வில்லாமல் தொடர்ந்து பரவிய வண்ணம் உள்ளது.

அமெரிக்காவில் மொத்தம் உள்ள 50 மாகாணங்களில் 46 மாநிலங்களில் பன்றிக்காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பன்றிக்காய்ச்சலுக்கு அமெரிக்காவில் 100 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 1000 பேர் பலியாகியுள்ளனர்.

இதையடுத்து அங்கு தேசிய அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவில் ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.

இதுகுறித்து வெள்ளைமாளிகை குறிப்பிடுகையில், ''இதன் மூலம் வழக்கமான விதிமுறைகள் தளர்த்தப்பட்டு பன்றிக்காய்ச்சல் ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் தரப்படும். மருந்துகள், சிகிச்சை முறைகள் எளிமையாகக் கிடைக்க வகை செய்யப்படும்'' எனத் தெரிவித்துள்ளது.

அனைத்து மட்டங்களிலும் பன்றிக்காய்ச்சலை ஒழிக்க அரசு தயாராக உள்ளது. பன்றிக்காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதால் தற்போது இந்த அசாதாரண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே பிரிட்டனில் பன்றிக்காய்ச்சலுக்குப் பலியானோரின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது.

அணு உலைகளைப் பார்வையிடுவதற்கு ஐ.நா. பரிசோதகர்கள் ஈரான் வருகை

தெஹ்ரான், ஒக். 26

ஐ.நா. சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு மைய பரிசோதகர்கள் ஈரான் வந்தடைந்தார்கள். இவர்கள் சர்ச்சைக்குரிய ஈரானிய அணு உலைகளை நேரடியாகப் பார்வையிடுவார்கள். இதற்கான அனுமதியை ஈரானிய ஜனாதிபதி அஹ்மதிநிஜாத் சமீபத்தில் வழங்கியிருந்தார்.

ஈரானிய குயாம் நகருக்கருகிலுள்ள புதிய அணு உலையையும், இப்பரிசோதகர்கள் பார்வையிடுவார்கள். அத்துடன் ஏனைய அணுத் திட்டங்களையும் நேரில் பார்வையிட்டு மதிப்பீடு செய்வார்கள் என அதிகாரிகள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

அணுத்திட்ட விவகாரம் தொடர்பாக ஈரானுக்கு எதிராக இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மேற்கத்தேய நாடுகள் உடன்பாடு கொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் ஐ.நா. பரிசோதகர்கள் ஈரான் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்கள் என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

ஈரானிய யுரேனிய செறிவூட்டல் தொடர்பாக ஐ.நா. புதிய திட்டமொன்றையும் வகுத்துள்ளது. இதன்படி, ஈரான் தனது செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை எரிபொருளாக மாற்றியமைக்க பிரான்ஸுக்கோ, ரஷ்யாவுக்கோ அனுப்பிவைக்க வேண்டும்.

ஐ.நா. இப்புதிய திட்டத்தை வகுப்பதற்குப் பெரிதும் உதவிய பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா நன்றி தெரிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சனிக்கிழமை தொலைபேசி மூலமாக பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷியுடனும், ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வேடேயுடனும் தொடர்பு கொண்டு தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் என வெள்ளைமாளிகை தெரிவித்தது.

இப்புதிய திட்டத்தின்படி, ஈரானின் அணு உலைகளுக்குத் தேவையான எரிபொருள் கிட்டும். எனினும் அணுகுண்டு செய்யும் அளவிற்கு அதற்கு மூலப் பொருள்கள் கிட்டமாட்டா என மேற்கத்தேய வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேவேளை, சர்ச்சைக்குரிய ஈரானிய அணு உலைகளைப் பார்வையிடுவதற்காக வந்தடைந்துள்ள ஐ.நா. சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு மையப் பரிசோதகர்கள், ஈரானில் மூன்று தினங்கள் வரை தங்கியிருப்பார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

உலக அரங்கில்

சவூதி பெண் பத்திரிகையாளருக்கு 60 கசையடித் தண்டனை விதிப்பு

ரியாத், ஒக். 26

முறைகேடான பாலியல் உறவு தொடர்பான உரையாடல் நிகழ்ச்சியொன்றைத் தயாரித்த, சவூதி அரேபிய பெண் பத்திரிகையாளர் ரோசனா அல்-யாமிக்கு கசையடித் தண்டனை விதிக்கப்பட்டது.

லெபனானிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சியொன்றில் இந்நிகழ்ச்சி வெளியாகியது. சவூதி அரேபியாவைச் சேர்ந்த அப்துல் ஜவாத் என்பவர், தனது முறைகேடான பாலியல் நடவடிக்கைகளை ஒளிவுமறைவின்றி இந்நிகழ்ச்சியில் விவரித்திருந்தார்.

இந் நிகழ்ச்சியைத் தயாரித்தமைக்காக, ரோசனா அல்-யாமிக்கு, சவூதி நீதிமன்றம் கசையடித்தண்டனை விதித்தது. 60 கசையடிகள் வழங்கி, இத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் அது தனது தீர்ப்பில் உத்தரவிட்டது.

முறைகேடான பாலியல் நடவடிக்கைகள் தொடர்பாக, ரோசானாவுடன் விவரித்து உரையாடிய, அப்துல் ஜவாத் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இவருக்கு, 5 வருடகாலச் சிறைத்தண்டனையும், அத்துடன் ஆயிரம் கசையடித் தண்டனையும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டன.

சவூதி அரேபியாவில், பாலியல் உறவுசம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஆணோ, பெண்ணோ பகிரங்கமாக விவாதிப்பது சட்டப்படிபெரும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்தோனேஷியாவில் பூகம்பம்

ஜகர்த்தா, ஒக். 26

இந்தோனேஷிய கிழக்குப் பகுதியிலுள்ள மலுக்கு மாகாணத்தில் சனிக்கிழமை இரவு உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக்கு பயங்கரப் பூகம்பம் ஏற்பட்டது. இதையடுத்து, உடனடியாக ஆழிப்பேரலை அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மலுக்கு மாகாணத்திலுள்ள சாம்லகி என்ற இடத்திலிருந்து வடமேற்கே 209 கிலோ மீற்றர் தொலைவில், பூமிக்கடியில் 165 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த உக்கிரமான பூகம்பம் ஏற்பட்டது.

இந்த பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.3 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூகம்பத்தின் தாக்கத்தால் மலுக் மாகாணத்தில் வீடுகளும், கட்டடங்களும் குலுங்கின. மக்கள் அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தார்கள். பெருந்தொகையானோர் வெட்டவெளிகளில் இரவைக் கழித்தார்கள் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

எங்கும் பதற்றம் நிலவியது. ஆழிப்பேரலை அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டமையால் கரைப் பிராந்திய மக்களும் பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைந்தார்கள்.

எகிப்தில் இரு ரயில்கள் மோதி விபத்து: ஐம்பது பயணிகள் பலி; 70 பேர் காயம்

கெய்ரோ, ஒக். 26

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் நடைபெற்ற ரயில் விபத்தில் 50 பேர் பலியாயினர். எழுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கிஸா எண்ணுமிடத்திலுள்ள அல்-அயாத் என்னுமிடத்தில் இவ்விபத்து நிகழ்ந்தது.

இந்த இடம் கெய்ரோவிற்கு தெற்கே, 31 மைல் (50 கி.மீ.) தொலைவில் அமைந்துள்ளது. ஒரே ரயில் பாதையில் தலைநகரின் தென்பகுதியை நோக்கி விரைந்துகொண்டிருந்த ஒரு பயணிகள் ரயிலை பின்னால் வந்த பயணிகள் ரயில் மோதி விபத்துக்குள்ளானது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

முன்னால் விரைந்த ரயில் ஓரிடத்தில் எதிர்பாராத விதமாக நிறுத்தப்பட்டமையால் பின்னால் வந்த ரயில் பயங்கரமாக அதை மோதியது. இதில் பயணிகள் பெட்டியொன்று தலைகீழாகப் புரண்டுவிட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''முதல் விரைந்து வந்த ரயில் பாதையில் குறுக்கிட்ட எருமை மாடொன்றை மோதியது. இதையடுத்து, ரயில் இயந்திரத்திலுள்ள வாயு குழாய் வெடித்து விட்டது. அத்துடன் அந்த ரயில் நின்றுவிட்டது. அச்சமயம் திடீரென பின்னால் வந்த ரயில் நிறுத்தப்பட்டிருந்த ரயிலின் பின்புறத்தில் பயங்கரமாக மோதியது'' என நேரில் கணடவர்கள் தெரிவித்தார்கள்.

''கதவுகளின் அருகிலிருந்த பயணிகள் கீழே விழுந்துவிட்டார்கள். ஒரு ரயில் பெட்டி தலைகீழாகப் புரண்டுவிட்டது. மீட்புப் பணியாளர்கள் இதில் சிக்குண்டவர்களை மீட்டெடுத்தார்கள். மீட்புப் பணி நீடிக்கிறது. உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்'' என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

அமெ. புலனாய்வுத் துறையினரின் சேவைக்கு பராக் ஒபாமா பாராட்டு

நியூயோர்க், ஒக். 26

''தீவிரவாத ஒழிப்பிலும், அது தொடர்பான நடவடிக்கைகளிலும் அமெரிக்க அரசின் நீதித்துறை, எவ்.பி.ஐ. ஆகியவற்றின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை. இவற்றால்தான் தீவிரவாத அச்சுறுத்தலையும் தாண்டி அமெரிக்காவால் வெற்றி நடைபோட முடிகிறது'' என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பாராட்டியுள்ளார்.

நியூயோர்க் நகருக்கு வருகை புரிந்த ஒபாமா அங்குள்ள சிற்றி சென்டருக்கு விஜயம் செய்தார். அங்குள்ள ஊழியர்களிடையே அவர் பேசுகையில், ''நீதித் துறை, எவ்.பி.ஐ. அதிகாரிகள் அடங்கிய அதிரடிப் படையினரின் செயற்பாடுகள் மிகவும் பாராட்டுக்குரியவை'' என்றார்.

''இவர்களின் தியாகத்தாலும், முயற்சிகளாலும் இன்று தீவிரவாத அச்சுறுத்தலைத் தாண்டி அமெரிக்கா தொடர்ந்து வெற்றி நடைபோட்டு வருகிறது. தீவிரவாதிகளின் சட்டவிரோதங்களைத் தகர்க்க முடிகிறது'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

''குறிப்பாக நியூயோர்க் எவ்.பி.ஐ. அலுவலகத்தின் செயற்பாடுகள் மிகவும் பாராட்டுக்குரியவை. இதன் துரிதமான நடவடிக்கையால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி அமெரிக்கர்களைக் கொல்ல நஜிபுல்லா ஜாஸி திட்டமிட்டிருந்த சதி முறியடிக்கப்பட்டுள்ளது'' என்றும் ஒபாமா சுட்டிக்காட்டினார்.

நியூயோர்க் நகரைத் தாக்க ஜாஸி தலைமையிலான குழுவினர் திட்டமிட்டிருந்தனர் என எவ்.பி.ஐ. கூறுகிறது. ஜாஸி தவிர மேலும் 3 பேரை அது தேடி வருகிறது. இந்த மூன்று பேரும் இரசாயனப் பொருள்களைக் கடத்தி வந்தவர்கள் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அகமது அப்சாலி என்ற இமாம் ஒருவரை எவ்.பி.ஐ. அதிகாரிகள் கைதுசெய்தனர்.

ஒபாமா நியூயோர்க்குக்கு வரும்போது தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டிருந்தனராம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணியில் விரிசல்; முல்லைப் பெரியாறு விவகாரத்தால் மோதல் நிலை!

கருணாநிதி தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம்

சென்னை, ஒக். 26

தமிழகத்தை ஆளும் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் விரிசல் பெரிதாகிக் கொண்டே வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு ஒரு தலைப்பட்சமாக எடுத்த முடிவு, தமிழகத்தில் கூட்டணித் தரப்புகள் இடையே பெரும் ஆப்பாக இறங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

'இணக்கமான' கூட்டணியாக பெரிதும் கருதப்பட்ட தி.மு.க - காங்கிரஸ் அணியில், விரிசல் பெரிதாகிக் கொண்டே வருகிறது. முல்லைப் பெரியாறு அணை பலமாக இருக் கிறதா, பலவீனமாக இருக்கிறதா என்ற கேள்வி, இந்தக் கூட்டணியின் பலத்தைப் பற்றிய சந்தேகத்தை கிளப்பி விட்டிருக்கிறது.

கடந்த 2004 லோக்சபா தேர்தலில் ஆரம்பித்தது தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி.

பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜன்நாயகக் கூட்டணியில் இருந்து வெளியேறி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இணைந்தது தி.மு.க.

முதல் இரண்டு ஆண்டுகள், இக்கூட்டணியில் பெரிய விரிசல் இல்லை. தமிழகம், புதுவையில் 40க்கு 40 நாடாளுமன்றத் தொகுதிகளை தி.மு.க. கூட்டணி வென்று காட்டியதால், மத்தியில், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் செல்வாக்குக் கொடி கட்டிப் பறந்தது.

அப்போது, தமிழகத்தில் அ.தி.மு.க., ஆட்சி இருந்தாலும், மத்திய அரசின் ஆ(ட்)சியோடு, தி.மு.க., தனி ராஜாங்கமே நடத்தியது.

விரிசலுக்கான விதை 2006 இல்

2006இல் நடந்த தமிழக சட்டசபை தேர்தலுக்குப் பிறகுதான், கூட்டணியில் விரிசலுக்கான விதை, முளைவிட்டது.

அ.தி.மு.க. தோல்வி அடைந்தாலும், தனிப் பெரும்பான்மை இல்லாமல் தி.மு.க. ஆட்சி அமைத்தது. 'ஆட்சியில் பங்கு வேண்டும்' என்ற கோஷத்தை காங்கிரஸார் உயர்த்திப் பிடிக்க ஆரம்பித்தனர். இந்த கோஷம் அவ்வப்போது எழுவதும், அடங்குவதுமாகவே இருந்தது. திருச்சியில் நடந்த தி.மு.க., மாநாட்டில் பேசிய, தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, மேடையிலேயே அந்த கோரிக்கையை வைத்தமை, முதல்வர் கருணாநிதியை கோபமடையச் செய்தது. ''அதை நானும் சோனியாவும் தான் முடிவுசெய்ய வேண்டும்; ஆட்சியில் பங்கு பற்றி பேசுவதானால், புதுவை நிலைமை பற்றியும் பேச வேண்டியிருக்கும்'' என எச்சரித்தார். அத்தோடு அந்தப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

உறவை உரசிப் பார்க்கிறது முல்லைப் பெரியாறு விவகாரம்

இடையில், தமிழகத்தில் காங்கிரஸை வலுப்படுத்துவதற்காக மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட, அகில இந்திய பொதுச் செயலர் ராகுல், ஒரு நாள் கூட முதல்வரைச் சந்திக்காதமையும், பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியது. இருதரப்பும், அதுபற்றிய சமாளிப்புகளை அளித்தாலும், அரசியல் நோக்கர்கள் அதை, வழக்கமான விஷயமாகக் கருதவில்லை. இப்போது, தி.மு.க.,- காங்கிரஸ் உறவை உரசிப் பார்க்கும் வகையில், முல்லைப் பெரியாறு விவகாரம் எழுந்துள்ளது.

புதிய அணை கட்டுவதற்கான ஆய்வு நடத்த, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கேரளாவுக்கு அனுமதி அளித்து விட்டார். இதை எதிர்த்து, உயர்நீதிமன்றம் சென்ற தமிழக அரசின் மனு அங்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் அதிர்ச்சியடைந்த தி.மு.க. வரும் முதலாம் தேதி மதுரையில், முதல்வர் தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடத்த உள்ளது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம், மத்திய இணை அமைச்சர் ஒருவர் நடந்து கொண்ட விதத்தைக் கண்டித்து இப்பொதுக் கூட்டம்' நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை தான். உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்த இரவில் இது அறிவிக்கப்பட்டதால், கூட்டம் ஜெய்ராம் ரமேஷைக் குறிவைத்துத் தான் நடக்கிறது என்பதை அறிய அரசியல் ஞானம் அவசியமில்லை. ரமேஷ், காங்கிரஸைச் சேர்ந்தவர்.

கேரளாவைக் கண்டிக்காமல் மத்திய அமைச்சர் மீது பழி!

தற்போது ஆட்சியில் இல்லாவிட்டாலும், கேரளாவில் காங்கிரஸ் கட்சிக்கு இன்னும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்த மாநிலத்துக்கு எதிரான செயற்பாட்டை, காங்கிரஸைச் சேர்ந்த எந்த மத்திய அமைச்சரிடமும் எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில், 'புதிய அணை கட்டுவதில் முழுமூச்சாய் இறங்கியுள்ள கேரளாவைக் கண்டிக்காமல், மத்திய அமைச்சர் மீது பழிபோடுவது ஏன்? - என காங்கிரஸ் பிரமுகர்கள் கேள்வி எழுப்புகின்றனர். 'சோனியாவிடம், ஈடு இணையில்லாத செல்வாக்கு கொண்ட முதல்வர், அணை ஆய்வுக்கான அனுமதி தருவதைத் தடுத்திருக்க முடியாதா' என்ற சந்தேகம், அவர்களுக்கு இருக்கிறது. ஆகக்கூடி, மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தி.மு.க. அதே அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒருவரைக் கண்டித்து, பொதுக் கூட்டம் நடத்த உள்ளது.

தேசிய ஜனநாயக் கூட்டணியில் ஆட்சியில் இருந்த போது....

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் பாரதிய ஜனதாவுடன் அங்கம் வகித்த போது, இதேபோல ஒரு நிலைப்பாட்டை எடுத்தது தி.மு.க., ஆட்சியின் கடைசிக் கட்டத்தில், மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, சென்னையில் பிரம்மாண்ட பேரணி நடத்தியது தி.மு.க.

அடுத்தடுத்த நிகழ்வுகளின் காரணமாக, கூட்டணியை விட்டே வெளியேறி, காங்கிரஸோடு கை கோத்தது. அதே வரலாறு, தற்போது திரும்புவதாக, தி.மு.க. முன்னணி பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். 2011இல் வரும் சட்டசபை பொதுத் தேர்தலில், தி.மு.க.வின் வெற்றி வாய்ப்புகள் பற்றி காங்கிரஸுக்கும், காங்கிரஸின் பலம் பற்றி தி.மு.க.வுக்கும் உள்ளூர பல சந்தேகங்கள் இருக்கின்றன.

முல்லைப் பெரியாறு விவகாரம், அந்த விரிசலை அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது. 'மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்' என்ற வரியோடு முடிகிறது இந்த விடயத்தில் தி.மு.க. அறிக்கை. இந்த அறிவிப்புக்குப் பின், காங்கிரஸின் நிலைப்பாடு, சமாதானத் தூது போன் றவை எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதைப் பொறுத்து, மற்ற விவரங்கள் இருக்கும் என்பது வெளிப்படை எனக கூறப்படுகிறது.

மஹாராஷ்டிரா, ஹரியானா, அருணாச்சலப் பிரதேசத்தில் 3மாநிலங்களிலும், திரும்பவும் முதியவர்களே முதல்வராகின்றனர்

மும்பை, ஒக்.26

மும்பை: மஹாராஷ்டிர முதல்வராக அசோக் சவானும், ஹரியானாவில் பூபிந்தர் சிங் ஹூடாவும், அருணாச்சல பிரதேசத்தில் டோர்ஜி கந்துவும் 2ஆவது முறையாக முதல்வர்களாக பதவியேற்கவுள்ளனர்.

மஹாராஷ்டிராவில் அசோக் சவான்

மஹாராஷ்டிர மாநில முதல்வராக மீண்டும் அசோக் சவானை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தேர்வு செய்துள்ளார். இதையடுத்து 2ஆவது முறையாக முதல்வராகிறார் சவான்.

மும்பைத் தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் மஹாராஷ்டிராவில் முதல்வர் பதவியை மாற்றியது காங்கிரஸ். விலாஸ் ராவ் தேஷ்முக் நீக்கப்பட்டு அசோக் சவான் முதல்வரானார்.

இந்த நிலையில் 9 மாதங்கள் கழிந்து நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. இதையடுத்து சவானே மீண்டும் முதல்வராவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதுதொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் சோனியாவிடம் வழங்கப்பட்டது. அவர் சவானையே மீண்டும் முதல்வர் பதவிக்குத் தேர்வு செய்துள்ளார்.

கடந்த 9 மாத காலமாக அசோக் சவான், எந்தவித சர்ச்சைக்கும் இடம் கொடுக்காமல் செயல்பட்டு வந்ததமையாலும், தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தந்தமைக்காகவும் அவருக்கு மீண்டும் முதல்வர் பதவியை பரிசாக அளித்துள்ளார் சோனியா.

ஹரியானாவில் ஹூடா...

இதற்கிடையே, ஹரியானா மாநில முதல்வராக பூபிந்தர் சிங் ஹூடா 2ஆவது முறையாக பதவியேற்கவுள்ளார். சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை பலம் இல்லை. இருப்பினும், 7 சுயேச்சைகள் காங்கிரஸுக்கு ஆதரவு அளித்துள்ளனர். இதையடுத்து அங்கு மீண்டும் காங்கிரஸ் ஆட்சி அமைக்கிறது.

கடந்த சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்கு 67 இடங்கள் இருந்தன. ஆனால் தற்போது அது 40 ஆக குறைந்து விட்டது. இருப்பினும் இதைப் பொருட்படுத்தாமல், மீண்டும் ஹூடாவையே முதல்வாரக தேர்ந்தெடுத்துள்ளார் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி.

கடந்த 37 ஆண்டுகளாக அரசியலில் இருக்கும் ஹூடா, சாதாரண தாலுகா காங்கிரஸ் தலைவராக இருந்தவர். படிப்படியாக உயர்ந்து முதல்வரானார். தற்போது 2ஆவது முறையாகவும் முதல்வராகிறார்.

62 வயதாகும் ஜாட் இனத்தைச் சேர்ந்த ஹூடா, 1991ஆம் ஆண்டு நாடாளுமன்ற எம்.பியானார். அடுத்த ஆண்டில் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மாநில காங்கிரஸ் தலைவர் உள்ளிட்ட பல்வேறு கட்சிப் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

அருணாச்சலப் பிரதேசத்தில் டோர்ஜி கந்து

அருணாச்சலப் பிரதேசத்தில் டோர்ஜி கந்து மீண்டும்- இரண்டாவது தடவையாக-மாநில முதல்வராகினார்

இந்திய இராணுவத்தின் உளவுப் பிரிவில் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்று, சமூக சேவகராக மாறி, பின்னர் அரசியலில் புகுந்தவர் இவர். தற்போது அருணாச்சலப் பிரதேச சட்டசபைக்குத் தொடர்ந்தும் 3 முறை போட்டியின்றி, தேர்வாகி சாதனை படைத்து, அம்மாநில முதல்வராகிறார் அவர்.

அருணாச்சல் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி மூன்றில் இரு பங்கு இடங்களை வென்று அசத்தியுள்ளது.

முதல்வர் கந்து போட்டியின்றி இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 2 முறையும் இவர் போட்டியின்றிதான் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

54 வயதாகும் கந்து முன்னாள் இராணுவ அதிகாரி ஆவார். இராணுவத்தின் உளவுப் பிரிவில் இடம்பெற்றிருந்தார். வங்கதேசப் போரின்போது பாகிஸ்தான் இராணுவ ஊடுருவலுக்கு எதிராகச் சிறப்பாக செயற்பட்டு அதற்காகப் பதக்கம் பெற்றவர்.

இந்தியச் செய்திகள்

முன்னாள் கிரிக்கெட் வீரர் அக்ரம் மனைவி சென்னை மருத்துவமனையில் மரணம்

சென்னை, ஒக். 26

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கெப்டன் வாசிம் அக்ரமின் மனைவி சென்னை வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை மரணமடைந்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கெப்டனான வாசிம் அக்ரமின் மனைவி ஹியூமா அக்ரம் (வயது 38), கடந்த சில மாதங்களாக உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தார்.

இதனால் இவரை சிகிச்சைக்காக சிங்கப்பூர் அழைத்துச் செல்ல அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர். அதன்படி கடந்த 20 ஆம் திகதி இவரை விமானம் மூலம் சிங்கப்பூர் அழைத்துச் சென்றனர்.

ஆனால், வழியில் சென்னையில் அந்த விமானம் பெற்றோல் நிரப்புவதற்காகத் தரையிறக்கப்பட்டது. அப்போது ஹியூமா அக்ரமின் உடல்நிலை மிகவும் மோசமானதால் அவரை சிங்கப்பூர் அழைத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, அவர் சென்னையில் உள்ள அப்பலோ வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். ஆனால், அவருடைய உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இந்நிலையில், நேற்றுக்காலை 9 மணியளவில் அவர் சிகிச்சைப் பலனின்றி வைத்தியசாலையில் மரணமடைந்தார். அவருடன் கணவர் வாசிம் அக்ரம், சகோதரர் அமீர் சயிது ஆகியோர் இருந்தனர்.

சட்டப்பூர்வமான நடைமுறைகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர் ஹியூமா அக்ரமின் உடல் விமானம் மூலம் பாகிஸ்தான் கொண்டு செல்லப்படும் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஜார்க்கண்ட் சட்டப் பேரவையை கலைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 26

ஜார்க்கண்ட் மாநில சட்டப் பேரவையை கலைக்க மத்திய அமைச்சரவை வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மாநிலத்தில் கடந்த 9 மாதங்களாக குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வந்தது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் டில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற இக் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களைச் சந்தித்த மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரமும், அம்பகா சோனியும் கூறியவை வருமாறு:-

குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வந்த ஜார்க்கண்ட் மாநில சட்டப் பேரவையை கலைக்க மாநில ஆளுநர் கே.சங்கரநாராயணன் அளித்த பரிந்துரையை அமைச்சரவை ஏற்று ஒப்புதல் அளித்துள்ளது. குடியரசுத் தலைவரின் முறையான ஒப்புதலுடன் இது நடைமுறைக்கு வரும். இதனால், அங்கு விரைவில் தேர்தல் நடத்த தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு தேர்தல் ஆணையத்தை கேட்டுகொள்ளப்படும் என்றனர்.

• மேலும் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அவர்கள் கூறியவை வருமாறு:-

19ஆவது சட்ட ஆணையத்தை அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன் பதவிக்காலம் 3 ஆண்டுகள். இந்த ஆணையத்தின் புதிய தலைவர், உறுப்பினர்கள் குறித்த விவரங்களை சட்ட அமைச்சகம் விரைவில் அறிவிக்கும்.

இதேவேளை, சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாக்க பிரதமரின் 15 அம்ச திட்டம் நடைமுறையில் உள்ளது. அதில், மேலும் அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன -- என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில், கோப்பாய் பிரதேசங்களைச் சேர்ந்த 2,950 பேர் நேற்று அழைத்து வரப்பட்டனர்

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேசங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் இன்று வருகை

யாழ்ப்பாணம், ஒக்.26

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து 930 குடும்பங்களைச் சேர்ந்த 2,950 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உடுவில் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 558 குடும்பங்களைச் சேர்ந்த 1,798 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 372 குடும்பங்களைச் சேர்ந்த 1,151 பேரும் நேற்று வந்து சேர்ந்தவர்களாவர்.

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மக்கள் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மக்கள் இணுவில் இந்துக்கல்லூரியிலும் தங்க வைக்கப்பட்டு உரிய பதிவுகளையும், ஏனைய வழமையான நடைமுறைகளையும் மேற்கொண்டதன் பின்னர் தமது வசிப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, இன்றும் 3,000 பேர் யாழ்ப்பாணம் அழைத்து வர நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், இடம்பெயர்ந்தவர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் பணிகளை செட்டிக்குளத்திலுருந்து யாழ். செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் மேற்கொண்டு வருகிறார் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 1,500 பேரும், பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 1,500 பேரும் இன்று அழைத்து வரப்படுகின்றனர். மேற்படி இரு பிரதேச செயலக அதிகாரிகளும் இவர்களைப் பொறுப்பேற்று கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், வட இந்து மகளிர் கல் லூரியிலும் தங்க வைக்கவுள்ளனர். பதிவுகளை மேற்கொண்டதன் பின்னர் அவர்கள் தமது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி முதல் நேற்றையதினம் வரையிலும் 8,500 குடும்பங்களைச் சேர்ந்த 27,602 பேர் வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு தகரக் கூரைகள் வழங்கவும் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும். வசிப்பிடங்களை நிர்மாணிக்கக் கூடியவர்களுக்கே அவை வழங்க இருப்பதாகவும் ஏனையோர்க்கு மாற்று வழிகளை மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (1-14-72)

இராணுவ அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுவதற்கு அரசு தடைவிதிப்பு

கொழும்பு, ஒக். 26

இராணுவ அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்படுவதுடன் அரசியல் நோக்கங்களுக்காக இராணுவ அதிகாரிகளின் பெயர்களைப் பயண்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாகுமென அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் உதய நாணயக்கார ஒப்பமிட்டு ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசியல் ஈடுபாடு கொண்ட சில தனிநபர்களை அச்சு ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் இராணுவ அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு ஆதாரமற்ற செய்திகளை வெளியிட்டு வருவது அவதானிக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறு இராணுவ அதிகாரிகளின் பெயரைப் பயன்படுத்துவது குற்றமாகக் கருதப்பட்டுச் சம்பந்தப்பட்டோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, இராணுவ அதிகாரிகளும் அரசியலில் ஈடுபடுவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை ஊழியர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட முஸ்தீபு

கொழும்பு, ஒக்.26

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தொழிலாளர் சம்பள உயர்வுகோரி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மின்சார சபை ஊழியர்களும் வேதன உயர்வு கோரி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்சாரசபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் கூட்டணி மூன்று நாள் பணி பகிஷ்கரிப்பைத் தொடரவுள்ளது எனக் கூறப் படுகின்றது.

மேற்படி சபையின் ஊழியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் சம்பள உயர்வு வழங்கப்படாமல் உள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இப் போராட்டம் நடத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக நாளை மறுதினம் 28 ஆம் திகதி மின்சாரசபையின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் அடையாள ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது என மேற்படி தொழிற்சங்க கூட்டணியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு - தெற்கு என்ற பேதம் எதுவுமின்றி நாட்டின் சுபீட்சத்துக்கு உழைப்போம்

இராமாவில் முகாமில் நாமல் ராஜபக்ஷ உரை

குருநகர், ஒக். 26

வடக்கு, தெற்குப் பேதமின்றி இலங்கையின் சுபீட்சத்துக்கு உழைப்போம்.

இராமாவில் நலன்புரி முகாமில் ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் மருத்துவ முகாமில் நேற்று பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போது 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் தலைவரும் ஜனாதிபதியின் மைந்தனுமாகிய நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் கொடிகாமம், மிருசுவில், இராமாவில் ஆகிய நலன்புரி நிலைய மக்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய வளங்களை இங்கு வழங்கியிருந்தார். கொழும்பில் இருந்து விசேடமாக வருகை தந்த தென்னிலங்கை வைத்தியர்கள் சுமார் 60 பேர், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியர்களுடன் இணைந்து இவ்விருநாள் மருத்துவ முகாமில் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி இராமாவில் நலன்புரி நிலையமுகாம் மக்களுக்காக நேற்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாம், இம் முகாமிற்கு அருகில் அமைந்துள்ள பாடசாலைகளில் நடைபெற்றது.

இம்மருத்துவ முகாமை பார்வையிட வருகை தந்திருந்த நாமல் - ஜேசித்த ராஜபக்ஷ சகோதரர்கள் இம்முகாமில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். இவர்களுடன் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ், யாழ் படைத்தளபதி மேஜர் ஜெனரல் மார்க், சீலந்தன செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

எனக்குத் தமிழ் கொஞ்சம் தான் தெரியும். நான் தமிழ் படிக்கிறேன் என தமிழில் ஆரம்பித்து பின்னர் அவர் சிங்களத்தில் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து உரைநிகழ்த்திய நாமல் ராஜபக்ஷ தமதுரையில் தெரிவித்ததாவது:-

வடக்கு மக்கள் தெற்கு மக்கள் என்ற பேதமின்றி எமது இலங்கையை ஒன்றாக சேர்த்து கட்டியெழுப்புவோம். நாங்கள் ஒரு கொடியின் கீழ் ஒரே சாதி மக்களாக சேர்ந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம். இந்த நாட்டை ஒற்றுமைப்படுத்திய எமது ஜனாதிபதி, அதற்கு உழைத்த படை அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். தெற்கிலுள்ள இளைஞர், யுவதிகளும் வடக்கிலுள்ள இளைஞர், யுவதிகளும் 'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் மூலம் ஒன்றாக இணைந்து எமது நாட்டை இன பேதமின்றி கட்டியெழுப்புவோம் என்றார்.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமதுரையில்:-

ஒரு காலத்தில் நாம் பேச்சுச் சுதந்திரத்தை இழந்திருந்தோம் தற்போது மஹிந்த ராஜபக்ஷ அதனை விடுவித்துள்ளார். நாளை அல்லது மறுதினம் அகதி முகாமில் உள்ள நீங்கள் உங்கள் வீடுகளுக்கு செல்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளோம். எவ்வளவு விரைவாக உங்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீங்கள் உங்கள் உறவினர் வீடுகளுக்குச் சென்று தங்கலாம் அல்லது உங்கள் வீடுகளுக்குச் சென்று தங்கலாம் என்றார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தமதுரையில் :-

இவ்விருநாள் மருத்துவ முகாமிலும் சுமார் 2,300 மக்கள் தமது நோய்க்குச் சிகிச்சை பெற்றுள்ளார்கள். வடமாகாணத்தில் வைத்திய வசதிகள் குறைவாக இருந்த போதிலும் தென்னிலங்கை வைத் தியர்கள் இங்கு வருகைதந்து மருத்துவசேவையை நடத்தியதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய 'இளைஞர்களுக்கான' நாளை அமைப்பின் உப தலைவர் சீலரத்ன செனவிரத்ன தமதுரையில் :-

எமது நாட்டில் சிறுபான்மை மக்கள் என்று எவருமில்லை. பூத்திடும் யாழ்ப்பாணம் என்ற திட்டத்தில் வடக்கு, தெற்கு இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து ஒரே நாடாக கட்டியெழுப்புவோம். 1986 இல் அழிக்கப்பட்ட யாழ்.பொதுசன நூலகத்துக்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அண்மையில் எம்மால் வழங்கப்பட்டுள்ளன. யுத்தம் காரணமாக கடந்த 30 ஆண்டுகளாக சிதைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை கைகோர்த்து கட்டியெழுப்புவோம் - என்றார். (1-51)

திறந்த பல்கலைக்கழகத்தில் புதிய கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம், ஒக்.26

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் 2010 / 2011 ஆம் கல்வியாண்டிற்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடிப்படைச் சிங்களம் மற்றும் ஆரம்பத் தமிழ் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப திகதிகள் B.SC (NURSING) அடுத்த மாதம் 20ஆம் திகதியும் அடிப்படைச் சிங்களம் மற்றும் ஆரம்பத் தமிழ் என்பன அடுத்த மாதம் 15 ஆம் திகதியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்குரிய விண்ணப்பப் படிவங்களை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பு யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் விவரங்களை யாழ். பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் எனவும் அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1-10)

மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கோப்பாயில்

கோப்பாய், ஒக்.26

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டம் கமநெகும திட்டத்தின் கீழ் பழமரச் செய்கை, விவசாய வனவியல் செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இன்று புத்தூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

புத்தூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் 15 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 125 பயனாளிகளும் வாதரவத்தையைச் சேர்ந்த 20 பயனாளிகளும் இவற்றைப் பெற்றுக்கொள்வர்.

புத்தூர் விவசாய போதானாசிரியர் ச.பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-72)

முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டோர் மீண்டும் முகாம்களில் அடைபடும் பரிதாபம்!

கொழும்பு, ஒக். 26

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியேறுவதற்காகக் கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டவர்கள் எனக் கூறப்பட்ட அகதி மக்களில் கணிசமானோர் தொடர்ந்தும் முகாம்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்னி அகதி முகாம்களில் இருந்து விடுவிக்கப்படுவதற்காக வியாழக்கிழமை பஸ்களில் ஏற்றப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் சிறிது நேர பயணத்தின் பின்னர் பழைய இடத்திற்கே கொண்டுவரப்பட்டனர் எனவும் -

முல்லைத்தீவில் மீளக் குடியேற்றப்படுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட மக்கள் துணுக்காயில் இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் - ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இடம்பெயர்ந்தவர்கள் அவர்களது பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர் என அரசு தெரிவிக்கின்றது.

எனினும், எவரும் தமது வீடுகளுக்குச் செல்லவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மக்களில் சிலர் ஏன் மீண்டும் பழைய முகாமிற்கே கொண்டுவரப்பட்டனர், வேறு சிலர் ஏன் இடைத்தங்கல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

வியாழக்கிழமை மாந்தை மேற்குப் பகுதியில் இடம்பெற்ற மீள்குடியேற்ற நிகழ்விற்கு அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர்களிடம் செட்டிக்குளத் திலிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் ஆயிரத்து இருநூறு பேர் மன்னாரில் மீளக் குடியேற்றப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த அந்த மக்களிடம் பின்னர் பஸ்ஸில் ஏறுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சிறிய பயணத்தின் பின்னர் அவர்கள் மீண்டும் பழைய இடத்திற்கே கொண்டுவரப்பட்டனர்.

இவர்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டவர்களும் கூடத் தமது பகுதிகளைச் சென்றடையவில்லை.

முல்லைத்தீவில் மீள் குடியேறுவதற்காக விடுவிக்கப்பட்ட மக்கள் அங்கு செல்லவில்லை. மாறாகத் துணுக்காயில் உள்ள அரச கட்டடங்கள், பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகின்றது. அரச அதிகாரிகளிடம் இது குறித்து வினவியபோது -

கடும் மோதல்கள் காரணமாக இந்த மக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளதால் அவர்களை நேரடியாக அந்த வீடுகளுக்கு அனுப்பமுடியவில்லை, வீடுகளைத் திருத்த வேண்டியுள்ளது - என அந்த அதிகாரிகள் பதிலளித்தனர்.

துணுக்காயில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் முல்லைத்தீவிற்குச் சென்று சேதமடைந்த தமது வீடுகளைப் பார்த்தனர் எனவும் அரச அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எனினும் அகதி முகாம்களுக்குள் சனநெரிசலில் மோசமான நிலையில் வாழ்வதை விடத் தமது பகுதிகளில் வாழ்வது எவ்வளவோ மேல் என இடம்பெயர்ந்த மக்கள் கருதுகின்றமையையும் சில அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

- இப்படி அந்த வார இதழ் தெரிவித்தது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

துணுக்காயைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வியாழக்கிழமை முதல் தொகுதியாக துணுக்காய்ப் பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 297 குடும்பங்களில் 75 வீதமானவர்கள், அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த பாடசாலைகளில் இருந்து தமது வீடுகள் காணிகளுக்குச் சென்றுள்ளனர் என முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் அரச அதிபர் எமில்டா சுகுமார் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

வவுனியா மெனிக்பாம் முகாம்களில் தங்கியுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இன்னும் பத்து நாள்களுக்குள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு விடுவார்கள். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களை கட்டம் கட்டமாக விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

(அ-சி)

இரணமடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சுதந்திரமாக நடமாடக் கூடிய ஏற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது

முன்னர் குறிப்பிட்ட நலன்புரி நிலையங்களுக்கு அமைச்சர் நேற்று நேரில் சென்று அங்குள்ளவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார். (அ-1)

அமெ.அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகா உத்தியோக பூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொள்கின்றார் என்றே முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சரத் பொன்சேகா அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்கை அமெரிக்காவில் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் ஹவாயில் உள்ள அமெரிக்க பசுபிக் கட்டளை பீடத்தில் இடம்பெறும் நிகழ்வில் சரத் பொன்சேகா கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், ஹவாய் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக சரத் பொன்சேகாவிற்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பு கடந்த சனிக்கிழமை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துவிட்டது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பட்ரீசியா புட்டெனிஸ், சரத்பொன்சேகாவிற்கு இத்தகவலைத் தெரியப்படுத்தினார் என இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டன. (அ-சி)

(மேலும் விவரம் 3 ஆம் பக்கக் கட்டுரையில்)

பஸில் ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் பயணம் தொடர்பாக விளக்கமளித்தனர்.

அவர்கள் அப்போதே பஸில் ராஜபக்ஷ எம்.பி. தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் டில்லிக்கு செல்லவுள்ளது குறித்து பிரதமரிடம் தெரிவித்தனர்.

பஸில் ராஜபக்ஷ எம்.பி. தலைமையிலான தூதுக் குழுவினர் இலங்கைத் தமிழ் அகதிகளின் மீளக்குடியேற்றம் உட்பட தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசியற் தீர்வு காண்பது குறித்து பேசுவார்கள் என்றும் அவர்கள் பிரதமருக்குத் தெரியப்படுத்தினர். (அ-சி)

யுத்தக் குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- விசாரணைக்கு இணங்கமாட்டாது என மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு ஆதரவாகப் பெரும் எண்ணிக்கையான நாடுகள் ஏற்கனவே வாக்களித்துவிட்டன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை தனது ஆணையைப் பெறுமளவிற்கு அரசுகளிடமிருந்தே பெறுகின்றது. ஐ.நாவின் பெரும்பாலான உறுப்பினர்கள் இலங்கை குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு ஏற்கனவே எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டனர். அவர்களது நிலைப்பாட்டை மதிக்கவேண்டும் என அமைச்சர் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பேச்சாளர் ருபேர்ட் கொலவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளின் முடிவை மதிக்காமல் அவசரப்பட்டுக் கருத்து வெளியிடுகின்றார் என்றும் அமைச்சர் சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

- காஸா விசாரணைப் பாணியில் இலங்கை குறித்தும் விசாரணைகள் இடம்பெற வேண்டுமெனக் கடந்த வாரம் கொலவில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளியன்று ஆரம்பிக்கப் பட்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நீண்டவரிசையில் வாகனங்கள் காத்திருந்து எரிபொருளை நிரப்பவேண்டி நேர்ந்தமையை அவதானிக்க முடிந்தது.

ஜி.எஸ்.பி. வரிச்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகளை நேர்சீர் செய்யும் எத்தனங்களின் ஒரு கட்டமாகவே கடந்த வாரம் வன்னி அகதிகளில் 40 ஆயிரம் பேரை மீளக்குடியேற்றும் நடவடிக்கை என்ற திட்டம் ஆரவாரமாக மேற்கொள்ளப்பட்டது எனவும் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை குறித்த முக்கிய பேச்சுகளுக்காக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு நவம்பர் மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இதன் காரணமாக அரசு மனித உரிமை விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பிப்பதற்கான அவசர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மனித உரிமை விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில விடயங்களில் முன்னேற்றம் அவசியம் என்பதைப் புரிந்து கொண்டுள்ளதாலேயே மீள் குடியேற்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துகிறோம். எனினும், அவர்களின் அழுத்தங்களுக்கு எல்லாம் நாம் அடிபணிந்துவிடப் போவதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் தனது பிரசாரத்தைத் தீவிரப்படுத்தவும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. வழமையான இராஜதந்திர வழிமுறைகளைப் பின்பற்றி அரசு இதனை முன்னெடுக்கவுள்ளது.

(அ-சி)

அட்சயா
(அரவிந் ஸ்ருடியோவிற்கு அருகில்)
பேசியல், மேக்கப், கெயாஸ்ஸல், தலைமுடி சுருட்டுதல், தலைமுடி அயன் பண்ணுதல், கேக் ஐசிங், சாறி வேக், பிளவுஸ் கட்டிங் பயிற்சி வகுப்புகள் நடை பெறுகின்றன. நெக்ளஸ், தோடு, காதுமாட்டி செய்யவும் பயிற்சி அளிக்கப்படும்.
றிச்கேக் - ரூ.30
ஐசிங் றிச்கேக் - ரூ.45
ஐசிங் றிச்கேக் கஜு பதித்தது - ரூ.60
அட்சயா
461, நாவலர் றோட்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICT Information & Communication Technology
GIT General Information Technology
பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICT(G.C.E O/L)
GIT(G.C.E A/L)
IT அறிவை விருத்திசெய்ய விரும்பும் அனைவருக்கும் ஏற்றது
நூலாசிரியர் :- திரு சு. பரம்தில்லைராஜன்
யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி
கிடைக்கும் இடங்கள் :-சகல புத்தகசாலைகள் மற்றும்
Softview Computer College
55,Arasady Road, Jaffna.

PC REPAIRS UPGRADES
MONITOR UPS PRINTER POWER SUPPLY SCANNER
CALL US 021-7913020 DO SMS
12 years experience in the field of computer hardware industry
Flexible working time Mon-Sat 9am to 6.pm Poya days 9am to 1pm
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம் - 175/3, கஸ்தூரியார் வீதி, T.P: 021-2225893, 0775126712
செல்லிடப - தொலைபேசி வீதி, T.P: 0773-039536,

கற்சுமி வெளியீடு
தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய
ஒக்ரோபர்- நவம்பர் மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளி வந்து விட்டன
"உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"

PRINTER
HP D 1560 - 4500/-
Epson T 10 - 4500/-
Canon IP 1980 - 4900/-
HP 1005 LaserJet - 16500/-
TV CARD
Asus TV Card P 7131 - 4200/-
Combo LCD Box - 4300/-
Combo CRT Box - 2400/-
Internal TV Card - 2500/-
SUB WOOFER
CMK 2.1 - 1950/-
Creative 2.1 - 2600/-
Microlab M 280 2.1 - 3250/-
Creative 5.1 - 6900/-
MOTHER BOARD
Foxconn - 5200/-
Asrock - 5400/-
Intel DG 31 PR - 7700/-
Intel DG 41 RQ - 8400/-
HARD DISK
80 GB SATA - 4500/-
160 GB SATA - 5250/-
250 GB SATA - 5600/-
500 GB SATA - 6900/-
LAPTOP HARD DISK
160 GB - 6500/-
PORTABLE HARD DISK
250 GB 2.5 - 9500/-
320 GB 2.5 - 10700/-
500 GB 2.5 - 14000/-
UPS
UPS 650 W - 3700/-
UPS 1200 Kv - 8500/-
DIGIRAL CAMERAS 12.2 MEGA PIXELS 19900/-
ACCESSORIES
Head Phone with Mic - 400/-
Bluetooth - 400/-
Modem 56K - 550/-
UPS Battery - 1250/-
Laptop Bag - 1100/-
ATX Casing with Power Supply - 2700/-
Multimedia Speaker - 550/-
Computer Mic - 650/-
NETWORK
TP-Link ADSL + Router - 3900/-
TP-Link ADSL 4 Port Router - 5900/-
D-Link Broad Band Router DR-100 - 4900/-
D-Link Broad Band Router Wireless - 5800/-
Network Card - 750/-
ORANGE MP3 PLAYER 2 GB 2400/-
SONY FLASH MP3 PLAYER 2 GB VOICE RECORDING PENDRIVE 3500/-
MP5 PLAYER MP3, MP4, FM, VOICE RECORDING, CAMERA, VIDEO, GAMES 5500/-
1200/- WEB CAMERA
POWER SUPPLY
400 W - 1200/-
450/500 W - 1400/-
RAM
DDR I 512 MB 400 - 2500/-
DDR I 1 GB 400 - 4600/-
DVD WRITER
Combo Writer - 2900/-
DVD Writer - 3500/-
VGA CARD
AGP 64 MB - 2250/-
PC Express 8400 512 MB - 5250/-
MONITOR
15" CRT Monitor - 8500/-
15" LCD Monitor - 11250/-
16" LCD Monitor - 13900/-
19" LCD Monitor - 15900/-
SCANNER
Mustek 1248 - 5400/-
Canon Lide 10 - 6000/-
HP G 2410 - 7500/-
PROCESSOR
Intel 1.8 Ghz Celeron - 5250/-
Intel 2.8 Ghz Core2Duo - 14600/-
Intel 2.93 Ghz Core2Duo - 14950/-
PEN DRIVE
2 GB Flash - 1000/-
4 GB Flash - 1500/-
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk
* Warranty Value 1-3 years
* Stock Available

MCS, Jaffna
www.mcsitcampus.org
புதிய பிரிவுகள் ஆரம்பம்
29.10.2009 முன் பதிபவர்களுக்கு முன்னுரிமை. விசேட கட்டணசலுகை
Diploma Courses...
*Microsoft / Open Office *Computerised Accounting
*DTP *Hardware * Web Development *English *ICT *GIT
* Video Editing *AutoCAD * Visual Basic *VB.net *LINUX
International Courses...
MCP_Microsoft..Professional,Cisco-CCNA,
MCSE_Microsoft...Engineer,ICDL,CIMA
Java programmer(SCJP)
Degree Course
* BIT All Semesters+Project
Free Courses ICDL,DHT
Sun Java 50%Off
324, பலாலி வீதி, (பரமேஸ்வரா சந்தி அருகாமை) யாழ்.

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!
ASP ENTERPRISES
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
குறைந்த நேரம்
சிக்கன மின்சாரம்
தீ,மின் அபாயமில்லை
இலகுவாகக் கையாளலாம்
ஒரு வருட உத்தரவாதம்
இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)
அலுகூலங்கள்
INDUCTION COOKER
யாழ் மண்ணில் புதியதோர் உதயம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2009இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.